# குக ஆனந்தம்

## கு. குகானந்தன்

(FIAB (LON) B.Com (இலங்கை)
PGDE, SLPS II, ICDL, M.Com (இந்தியா))

## அவர்களின் அகவை

60



23.12.2017

# குக ஆனந்தம்


யா/ சி.சி.த.க. பாடசாலை

(ஓய்வு நிலை அதிபர்)

யா/ தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி.

(முன்னாள் பிரதி அதிபர், பகுதித் தலைவர்)

யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

(முன்னாள் பகுதித்தலைவர்)

## கு. குகானந்தன்

**FIAB (LON) B.Com** (இலங்கை)

**PGDE, SLPS (2), ICDL, M.Com** (காமராஜர்)


## புதுவை குகனின்

*அகவை*




## 23.12.2017

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | குக ஆனந்தம் |
| பதிப்பாசிரியர் | : | திரு. கு.குகானந்தன் |
| தாளின் வகை | : | 70g பேப்பர் (வெள்ளைத்தாள்) |
| பக்கங்கள் | : | 122 |
| பிரதிகள் | : | 300 |
| வெளியீடு | : | மணிவிழாக்குழு |
| அச்சுப்பதிப்பு | : | ஷாம்பவி பதிப்பகம்,<br>நீர்வேலி & யாழ்ப்பாணம்.<br>021 222 4143 |
| Price | : | 500/= |

## மலரின் உள்ளே...


★ அணிந்துரை 1 - 2

★ விழா நாயகனின் சுயவிபரப் பக்கம் 3 - 4

★ மணிவிழா நாயகனின் வரலாறு 5 - 7

★ ஆசிச் செய்திகளும், வாழ்த்துச் செய்திகளும் 11 - 74

★ **மணிவிழா நாயகனின் கவிதை மலர்**

- ☞ புத்தூரின் முத்துக்கள் 77
- ☞ எத்திசையும் புகழ்பாடும் புத்தூரின் பெருமைகள் 78 - 81
- ☞ பெருமைசேர் பேராசிரியர்கள் 81
- ☞ புத்தூர் தந்திட்ட மருத்துவ திலகங்கள் 82 - 83
- ☞ பெருமைசேர் விரிவுரையாளர்கள் 84
- ☞ நிபுணத்துவ சேவையாளர்கள் 85
- ☞ புத்தூரின் புலமையாளர்கள் 86 - 87
- ☞ புத்தூரின் சமூக சேவையாளர்கள் 87
- ☞ புத்தூர் தந்திட்ட இந்தியப் பட்டதாரிகள் 88
- ☞ எத்திசையும் புகழ்பரப்பும் இலங்கை பட்டதாரிகள் 89 - 92
- ☞ அம்மாவுக்கு ஓர் ஆலோசனை 92 - 93
- ☞ ஊருக்கு உபதேசம் 94 - 95
- ☞ நோயற்ற வாழ்வு 96 - 97
- ☞ அன்னையும் பிதாவும் 98 - 99
- ☞ மாற்றம் ஒன்று வந்தது 100 - 101
- ☞ விழவு எப்போது? 102
- ☞ வேலியும் பயிரும் 103
- ☞ வேள்வி 104 - 105
- ☞ இரத்தக் கண்ணீர் 106
- ☞ மக்கள் தீர்ப்பு 107
- ☞ ஏமாற்றாதே 108
- ☞ தீவு ஒன்று தேசம் இரண்டு 109
- ☞ மரணத்தை வென்ற தருணங்கள் 110 - 112
- ☞ நினைவுகளும் சிலைகளும் 113 - 114
- ☞ இனமுரண்பாடு 115
- ☞ வாய் வீச்சு 116 - 117

☞ சந்தர்ப்பவாதிகள் 118
☞ சிறிய படகு அகதிகள் 119
☞ தொடரும் போராட்டங்கள் 120
☞ இரண்டும் ஒன்றே 120
☞ நல்லாட்சியின் மாண்பு 121
☞ எங்கே என் மகன்? 122

# அணிந்துரை



புத்தூர்க் குகனின் கவிதைத் தொகுதியொன்று வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். நிதர்சனம் என்ற கவிதை மலரை ஏலவே வெளியிட்டுப் பலரின் பாராட்டையும் பெற்ற புத்தூர்க் குகன் இப்பொழுது இரண்டாவது தொகுதியையும் வெளியிடுகின்றார். கவிதை எல்லோருக்கும் கைவருவதில்லை. குகனுக்குக் கவிதை கைவருகின்றது.

யாழ்ப்பாணத்தின் தொன்மையான கிராமங்களுள் புத்தூரும் ஒன்று. மண்வளமும் மனவளமும் உள்ள ஊர். சைவ கொடை வள்ளலாகத் திகழ்ந்த மழவராயர் புத்தூரைச் சேர்ந்தவர். அவரின் பரம்பரையிலே வந்தவர் புத்தூர்க் குகன். நிலத்தின் தன்மை பயிரிலே தெரிவது போல இவரது குடும்பச் சிறப்பு இவரின் குணத்திலே தெரியும்.

பட்டதாரியான குகன் ஆசிரியராய், அதிபராய் எனப் பல்வேறு பணிகளை ஆற்றியவர். ஆழ்ந்த அறிவும், அயராது உழைப்பும் அன்புள்ளமும் கொண்டவர்.

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்" ஒரு கவிஞனுக்கு ஆதர்சமாக அமைய வேண்டும். இதனாலேதான் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று பாரதி பாடினான். கவிஞர் குகனுக்கும் ஊர்ப்பற்று ஊறி இருப்பது ஆச்சரியமன்று. இவரது கவிதைகளிலே கணிசமானவை. புத்தூரின் சிறப்பை புகழை பெருமையைப் பேசுபவையாக அமைகின்றன.

இன்றைய தமிழ்ச் சமூகத்தின் இன்னலை, வாழ்வைப் பதிவு செய்யும் கவிஞர் போலிகளைப் புட்டுக் காட்டவும் தயங்கவில்லை. உதாரணமாக இத்தொகுப்பில் வரும் ஊருக்கு உபதேசம் என்னும் கவிதையைச் சுட்டிக் காட்டலாம். கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

"அவர் ஒரு சட்டத்தரணி  
அவர் பேசுவதோ சோசலிசம்  
அவர் பழகுவதோ பணக்காரரோடு  
ஆனாலும் இவர் பொதுவுடமைவாதிதான்

........................................................

சீனாவில் மழை பெய்தால்  
யாழில் குடை பிடிக்கும்  
பொதுவுடமை வாதியான இவருக்கு  
போர்க்குணம் கொஞ்சமும் இல்லையா?

இவ்வாறே பல கவிதைகளைச் சுட்டிக்காட்டலாம். வேலியும் பயிரும் என்ற கவிதை மிகச் சிறப்பானது.

"ஐயகோ.............

மேய்ப்பர் இல்லாத மந்தைக்கு

வேலியே பயிரை மேய்கிறதா"

என அவர் அலறித் துடிப்பது யாழ்ப்பாணத்திலே கஞ்சாவும் போதைப்பொருள் பாவனையும் எண்ணித்தான்.

கவிஞர்கள் எப்பொழுதும் சிறுமை கண்டு பொங்குபவர்களாக இருப்பர். இவரது ஊர் பற்றிய கவிதைகளைத் தவிர்த்தால் மற்றவை எல்லாம் ஏதோ ஒரு வகையிலே சிறுமை கண்டு பொங்குவனவாகவே காணப்படுகின்றன. இத்தொகுப்பிலே இடம்பெறும் வேள்வி மிகுந்த அவதானிப்புக்குரியது. மனத்திலே பதிவாகியுள்ள மகத்தான சோகமொன்று இந்தக் கவிதையிலே உறைந்து கிடக்கின்றது.

கவிஞரின் சமூகப் பார்வை, அரசியல் நோக்கு என்பன மிகவும் சிறப்பாக இக்கவிதைகளினூடு புலப்பட்டு நிற்கின்றது.

ஆட்டுக்கு ஆசிசொன்ன அந்தப் புனிதர்

இந்நாட்டுப் பௌத்தத் துறவியர் நிலைகண்டு

இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார் - இந்த

இரத்தின துவீபம் இலங்கையிலே"


என்று மதம்சார் அரசியலைச் சுட்டிச் சொல்லுகின்றார். யுத்த காலத்திலே நாங்கள் அனுபவித்த துன்பங்களைப் பல கவிதைகளிலே ஊடுபாவாகப் பின்னியுள்ளார்.

புத்தூர்க் குகன் வளர்ந்து வரும் ஒரு புதுக்கவிதையாளனாக மேற்கிளம்பு கின்றார். நல்ல படிப்பாளி, நல்ல பல பதவிகளை வகித்தவர், நல்ல குடும்பச் சூழலிலே பிறந்து வளர்ந்தவர். இதனாலே இவரது கவிதைகளிலே சமூகம், அரசியல், வாழ்வியல் முதலானவை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கவிஞர் புத்தூர்க் குகன் இன்னும் இன்னும் இத்தகைய கவிதைகளை எழுத வேண்டுமென்று கூறி வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

**முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்,**

**யாழ் பல்கலைக்கழகம்.**


UNIVERSITY OF
Sri jayaWardana pura
SRILANKA

# விழா நாயகனின் சுய விபரப் பக்கம்

| | | |
|---|---|---|
| தந்தை | : | பரமநாதர் குகதாசன்<br>(முன்னாள் பொதுமுகாமையாளர், வலிகிழக்கு ப.நோ.கூ.சங்கம்<br>முன்னாள் கிராமசபை உபதலைவர், புத்தூர்.) |
| தாய் | : | குகதாசன் சின்னம்மா |
| பிறப்பு | : | 07.04.1957 |
| இடம் | : | புத்தூர், வலிகிழக்கு |
| திருமணம் | : | 31.11.1990 இலுப்பையடி, வல்லைவீதி, அச்சுவேலி. |
| மனைவி | : | Dr. பத்மராணி குகானந்தன் |
| சக உதிராட்கள் | : | சிவயோகதேவி சிதம்பரநாதன்<br>(ஓய்வுநிலை பிரதி அதிபர், புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி)<br>சிவானி மக்செல் (முன்னாள் உலக சுகாதார நிறுவன டாக்டர்)<br>குகதாசன் குகானந்தமூர்த்தி (ஓய்வுநிலை டாக்டர், மகரகம) |

**கல்விக் களங்கள் :** <u>பாடசாலைக்கல்வி</u>

யா/ புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி

யா/ இந்துக்கல்லூரி

**பல்கலைக்கழகம்**

வணிகமானி – ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், நுகேகொட, இலங்கை

வணிகமுதுமானி – காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

<u>தொழில் கல்வி</u>

சர்வதேச கணக்கு பதியுநர் பரீட்சை (லண்டன்)

(ஆரம்ப, இடைநிலை, இறுதி)

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா (NIE)

இலங்கை அதிபர் சேவை 2 பரீட்சை

ICDL

**சேவை விபரம் :-**

1) பது/பசறை தமிழ் மகாவித்தியாலயம் 03.10.1994 - 04.10.1995
இரண்டாவது நியமனம்

2) யா/ இடைக்காடு ம.வி 20.07.1998 - 21.03.1999
கணக்கியல் - சமூகக்கல்வி

3) யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்
நிர்வாக உதவி 22.03.1999 - 25.04.1999

4) யா/ அத்தியார் இந்துக்கல்லூரி 26.04.1999 - 25.05.2008
வணிகக்கல்வி, பொருளியல், சமூகக்கல்வி
(பகுதித்தலைவர்)

5) யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை
அதிபர் 26.05.2008 - 28.09.2009

6) யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம்
பகுதித்தலைவர் 29.09.2009 - 19.02.2013
தமிழ், குடியியல், ஆங்கிலம்

7) யா/ தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி.
பகுதித் தலைவர், பிரதி அதிபர் - 20.02.2013 - 05.04.2017
(பொருளியல், தமிழ், வரலாறு)

**பொதுப்பணி** - 1) உறுப்பினர் வலிகிழக்கு கலாச்சார பேரவை.
2) தலைவர் - குகன் கலாச்சார மண்டபம்.

# மணிவிழா நாயகனின் வரலாறு



நீர்வளமும், நிலவளமும் சிறப்பாக அமைந்த வரலாற்று சிறப்புமிக்க புத்தூரில் கூட்டுறவு பொதுமுகாமையாளராக இருந்த பரமநாதர் குகதாசனுக்கும், குகதாசன் சின்னம்மா தம்பதியினருக்கும் நான்காவது மகனாக குகதாசன் குகானந்தன் அவர்கள் பிறந்தார். மூத்த சகோதரியான சிவயோகதேவி கலைப்பட்டதாரி ஆசிரியராகவும், யா/ஸ்ரீ சோமாஸ்கந்தகல்லூரியில் பிரதி அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரது கணவர் வடமராட்சி துன்னாலையை சேர்ந்த கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்கள் வணிகப்பட்டதாரி ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றியவர்.

விழா நாயகனின் இரண்டாவது சகோதரி சிவானி விஞ்ஞான பட்டதாரி ஆகவும் டில்லி பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்று WHO ல் மருத்துவராக பணியாற்றியவர். இவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளரான மக்செல் அவர்களை திருமணம் செய்து ஜேர்மனியில் வசித்து வருகிறார்.

மூன்றாவது சகோதரன் குகானந்தமூர்த்தி கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவராக கல்வி கற்று தற்போது சீசெல் நாட்டில் வைத்தியராக பணியாற்றி வருகின்றார். இவரது மனைவி கமலராணி அவர்கள் பல்வைத்தியராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

குகானந்தன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கிராமத்து பாடசாலையான யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியிலும் உயர் கல்வியை யா/இந்துக்கல்லூரியிலும் தொடர்ந்தார். கல்வியில் ஆர்வம் கொண்ட இவர் க.பொ.த சா/தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்று உயர் கற்கை நெறியினை மேற்கொள்வதற்கு வணிகத்துறையினை தேர்ந்தெடுத்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகமானி விசேட பட்டத்தினை பெற்றா.ர். வணிகக் கல்வியில் கூடிய நாட்டம் கொண்டதனால் கணக்கியல் இலண்டன் பரீட்சையில் சர்வதேச கணக்குப் பதிவாளர் பரீட்சையில் ஆரம்பம், இடைநிலை, உயர்தரம் ஆகிய மூன்று படிகளிலும் சித்தியடைந்துள்ளார்.

பல்துறை அறிவை பெற்றிருந்தும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் கல்விக்கு ஏற்ற வேலையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. தனியார் கல்வி நிலையங்களில் உயர்தர பாடங்களை கற்பித்து வந்ததுடன் தனியாக குகன் கல்வி நிலையத்தினையும் நடாத்தி வந்தார். 1990ம் ஆண்டு பல்வைத்தியர் பத்மராணி

அவர்களை திருமணம் செய்து கொண்டார். 1994ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று பதுளை பசறை தமிழ் மகாவித்தியாலயத்தில் கணக்கியல், வணிகக்கல்வி ஆகிய பாடங்களினை உயர்தர மாணவர்களுக்கு கற்பித்தார். யாழ் குடாநாட்டு கிளாலிக்கூடான தென்னிலங்கை போக்குவரத்து தடைப்பட்டதால் தொடர்ந்து மலையகத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. தொடர்ந்தும் தனியார் கல்வி நிலையங்களிலேயே கற்பித்துக் கொண்டிருந்தார்.

1998ம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர் நியமனத்தினை மீண்டும் பெற்று யா/ இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கணக்கியல், சமூகக்கல்வி பாடங்களினை உயர்தர மாணவர்களுக்கு கற்பித்தார். தொடர்ந்து யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் வரலாறு, குடியுரிமை பாடங்களினை கற்பித்து வந்தார். பின்னர் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று உயர்தர மாணவர்களுக்கு பொருளியல், வணிகக்கல்வி பாடங்களினை கற்பித்த வந்ததுடன் பகுதித் தலைவராகவும் கடமையாற்றினார். தொடர்ந்தும் கல்வியில் ஆர்வம் கொண்டு பட்டப்பின் கல்வி டிப்புளோமா பரீட்சை, அதிபர் சேவை பரீட்சை ஆகியவற்றிலும் சித்தியடைந்தார்.

2008ம் ஆண்டு யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலைக்கு அதிபராக பதவியுயர்வு பெற்று 2009ம் ஆண்டுவரை கடமையாற்றினார். பின்னர் கஸ்ரப் பிரதேசம் கற்பிக்க வேண்டுமென்ற கட்டாய நிபந்தனையில் யா/கப்புது ஏகாம்பர வித்தியாலயத்தில் பகுதித் தலைவராகவும், ஆங்கிலம், குடியியல், தமிழ் ஆகிய பாடங்களை க.பொ.த சா/தர மாணவர்களுக்கு கற்பித்து 100% சித்தியை பெறவைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். 2013ம் ஆண்டு யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் பொருளியல் ஆசிரியராக சிறப்பாக கற்பித்து வந்தார். இவரிடம் கல்வி கற்ற ஜெ.ஜென்சன் என்ற மாணவன் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு தெரிவாகியமை இவரின் சிறந்த கற்பித்தலுக்கு தக்கசான்றாக அமைகின்றது. இப்பாடசாலையில் தொடர்ந்து பிரதி அதிபராக கடமையாற்றி 05.04.2017ம் திகதி பணி ஓய்வினை பெற்றுள்ளார்.

கல்வித்துறையில் மட்டுமன்றி கவிதையுலகிலும் கால்பதித்த குகன் அவர்கள் 2014ம் ஆண்டு யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் "நிதர்சனம்" கவிதை மலரினை வெளியிட்டார். மேலும் விழா நாயகனால் எழுதப்பெற்று பத்திரிகையில் வெளிவந்த அனைத்து கவிதைகளையும் தொகுத்து யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் வெளியீடு செய்துள்ளார். மேலும் டான் தொலைக்காட்சியின் சங்கப் பலகை நிகழ்ச்சியில் பேட்டி கொடுத்துள்ளார். தற்போது 1000 உலகக் கவிஞர்கள் கவிதை மலரில் புதுவைக்குகனின் கவிதை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதுவை குகன் அவர்கள் கவிஞர் மட்டுமன்றி சிறந்த சமூகசேவையாளருமாவார்.


"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவவானில் நனி சிறந்தனவே"


என்பதற்கமைய விழா நாயகனும் தான் பிறந்த கிராமத்தையும் தம்மை வளர்த்து உயர்நிலை அடையச் செய்த பெற்றோர்களையும் மறவாது புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமான் தேவஸ்தானத்தினரின் காணியில் கலாச்சார மண்டபம் ஒன்றினை தனது பெற்றோர் ஞாபகார்த்தமாக அமைத்து எல்லோர் மனங்களிலும் நீங்காத உயர்ந்த இடத்தினைப் பெற்றுள்ளார். புதுவைக் குகனின் அகவை அறுபது மலரினை இம் மண்டபத்திலேயே வெளியீடு செய்வது மேலும் சிறப்பிற்குரியதாகும்.

புதுவைக் குகன் அவர்களின் ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமெனவும், நீண்டகாலம் சிறப்புடன் வாழவேண்டுமெனவும் எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமானை வேண்டுகின்றோம்.

**செல்வி வ.சிவலீலாதேவி** BA Dip in Ed, MA **(காமராஜர்)**
**பிரதி அதிபர்,**
**யா/ ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி.**



G. C. E. O/L



G. C. E. A/L



பல்கலைக் கழகத்தில்



யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில்
கடமையாற்றிய போது



விழாநாயகரின் மூத்த சகோதரி கணவருடன்
(ஓய்வுநிலை அதிபர், ஓய்வுநிலை பிரதி அதிபர்)



விழாநாயகரின் இரண்டாவது சகோதரி கணவருடன்
(பொறியியலாளர், டாக்டர் - கனடா)



விழாநாயகரின் மூத்த சகோதரன் மனைவியுடன்
(ஓய்வுநிலை வைத்தியர், ஓய்வுநிலை பல் வைத்தியர்)



விழாநாயகரின் 24ஆவது திருமண நாளின்போது



திருமண
நிகழ்வின்போது
பெற்றோருடன்
1990



திருமண
நிகழ்வின்போது
மனைவியின்
பெற்றோருடன்
1990



முதலாவது திருமண நாளின்போது - 1991



# ஆசிச் செய்திகளும் வாழ்த்துச் செய்திகளும்

# வள்ளுவன் வாக்கில் வாழ்பவர்



**சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக்குருக்கள்**
சிவன் தேவஸ்தானம்,
புத்தூர்.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்" செல்வமானது ஒருவனிடத்தில் நிலைத்திருக்கும் தன்மையுடையது அன்று. அத்தகைய செல்வத்தைப் பெற்றால் நீ நிலைத்திருக்கக்கூடியது. அறச்செயல்களை அப்பொழுதே செய்து விடுவாயாக. இது வள்ளுவன் வாக்கு. இதற்கமைய எல்லோராலும் பின்பற்ற முடிவதில்லை. இதையே உபநிஷத் கூறுகிறது. இந்தப் பிறவி இறைவனால் எமக்கு அளிக்கப்பட்டது. இவற்றால் நாம் நல்லவற்றையே செய்ய வேண்டும் என்றும் கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களை காண வேண்டும். உறுதியான உடலுடன் ஆயுள் முழுவதும் இறைவனையே துதிக்க வேண்டும். தேவர்களுக்கு உகந்த காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

இதற்கமைய வாழ்பவர்தான் திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள். அவரின் தந்தை திரு.குகதாசன் அவர்கள் எமது ஆலயத்தில் பலகாலம் திருத்தொண்டு புரிந்தவர். பாசமுடையவர். அவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக சிவன் தேவஸ்தானத்தில் மஹேஸ்வர பூஜை செய்வதற்கு ஒரு அன்னதான மண்டபத்தையும் தான் தனிப்பட்ட முறையிலே வேறொருவரின் சகாயமும் இல்லாமல் அதனை கட்டி நிறைவேற்றினார்.

ஆசிரியர் பணியையும் செவ்வென நிறைவு செய்து தனது அறுபதாவது (அகவை) மணிவிழாக்காணும் அவர் மேலும் பல தர்மகாரியங்கள் செய்து நோயற்ற வாழ்வும் நிறைவான செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ்க! என எல்லாம் வல்ல விசாலாக்ஷி அம்பிகை சமேத விஸ்வநாதப் பெருமானையும் குலதெய்வமான இராஜராஜேஸ்வரி அம்பாளையும் திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

# ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபாடுள்ளவர்




**சிவஸ்ரீ.தி.ஜெயச்சந்திரக் குருக்கள்**
பிரதமகுரு,
வல்லை வாதிப்பிள்ளையார் ஆலயம்,
உடுப்பிட்டி.

மணிவிழா நாயகன் குகதாசன் குகானந்தன் தனது அறுபது வயது காலப் பகுதியில் எல்லோராலும் போற்றப்படும் அளவுக்கு நற்பெயருடன் வாழ்ந்து வருகின்றார். சிறுவயது முதல் அவர் பாடசாலைக் கல்வியிலும் சரி சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் காமராஜர் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்று உயரிய கல்விமானாகத் திகழ்கின்றார். ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராக தனது கடமைகளைச் செவ்வனே செய்துள்ளார். இவரது ஆசிரிய சேவையை விட பிறசேவைகளாக "நிதர்சனம்" எனும் கவிதை மலரினையும் வெளியிட்டுள்ளார். இவற்றினை விட சமூக ஆன்மீக செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்துள்ளார். ஆலயங்களில் சரீரத் தொண்டுகள், திருப்பணித் தொண்டுகள் பல புரிந்துள்ளார். ஆலய உற்சவ காலங்களில் தனது அன்றாட கடமைகளை ஒதுக்கி ஆலய தொண்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து இறைபணியாற்றி வருகின்றார்.

இவ்வளவு சிறப்புக்கள் பொருந்திய இப் பெருமகன் தற்பொழுது மணிவிழா காணுகின்றார். இவர் மென்மேலும் பல வளர்ச்சிகளைப் பெறவேண்டும். ஆன்மீகத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவரது பொதுப்பணிக்கு உதாரணமாக புத்தூர் சிவன் கோவிலடியில் குகன் கலாச்சார மண்டபம் எனும் மண்டபத்தினை இவரது பெரு முயற்சியினால் ஸ்தாபித்துள்ளார். அறுபது வயதிலும் உற்சாகம் மிக்க இளைஞன் போல காணப்படும் இவர் நோய் நொடிகளின்றி என்றும் சிறப்பாக சகல செல்வங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல எனது குல தெய்வம் தீர்த்தாங்குளப் பிள்ளையாரை வேண்டி எனது ஆசிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

# சமூகப் பணியாளர்



**நீர்வைமணி சிவஸ்ரீ.கு.தியாகராஜக்குருக்கள்**
செல்லக்கதிர்காமசுவாமி கோவில்,
நீர்வேலி.

திருவாளர் குகானந்தன் அவர்கள் மணிவிழாக் கண்டு மாண்புறு சேவைகள் செய்தல் அறிந்து மகிழ்கிறோம். புத்தூரில் பாரம்பரிய சைவமரபில் பிறந்த குகானந்தன் அவர்கள் தம் பாரம்பரியச் சிறப்புக்கமைய பற்பல பணிகளைச் செய்தவர்.

ஒரு கல்வியாளராக ஆசிரியர், அதிபர் முதலிய பதவி நிலைகளில் நின்று இவர் ஆற்றிய பணிகளை நாமறிவோம். புத்தூர் விசாலாக்ஷி அம்மை சமேத விஸ்வநாத பரமேஸ்வரரின் கருணாவிலாசத்துக்கு பாத்திரமாகி அப்பெருமானின் சூழலில் பல பணிகளாற்றி வருபவர்.

சமூகப் பணிகள் ஆற்றுவதில் ஈழத்திலேயே தலைசிறந்தவராக திகழ்ந்த ஸ்ரீமான் மழவராயர் கந்தையாவின் மரபு பெற்ற செல்வம் திருவாளர் குகானந்தன் எனில் மிகையன்று.

ஒரு ஆசிரியராக, பக்தராக, சமூகப் பணியாளராக அவரது பணிகள் தொடர வாழ்த்துகின்றோம். மேலும் பல்லாண்டு வாழ்ந்து அவர் பணியாற்ற ஆசீர்வதிக்கின்றோம். அவரது துணைவியாருக்கும் நம் அன்பையும் வாழ்த்துக்களையும் பகிர்கிறோம். விசாலாக்ஷி நாதனின் விசாலமான கருணை அவர்கள் மீது பொழியப்படுவதாக.

# பொதுச்சேவையில் ஈடுபாடுள்ளவர்



**சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள்**

பிரதமகுரு,

அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,

நீர்வேலி.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய குகானந்தன் அவர்கள் அகவை அறுபதில் கால் பதிக்கின்றார். அவர் கல்வி, ஒழுக்கம், பண்பு மிக்கவராகத் திகழ்கின்றார். அவர் உயர்கல்வி கற்ற அறிவாளர். ஆசிரியப் பணியில் சிறந்து விளங்கி அதிபராக உயர்வு பெற்ற பண்பாளர். 2008ஆம் ஆண்டு எமது அரசகேசரிப் பிள்ளையாருக்கு அருகில் இருக்கும் சி.சி.த.க. பாடசாலை அதிபராக பணி செய்தார். அக்காலத்தில் இருந்து அவருடன் நான் பழகிய பலன் உண்டு. கவிதை எழுதுவதில் வல்லவர். 2014ம் ஆண்டு "நிதர்சனம்" என்ற கவிதை நூலை வெளியீடு செய்தார். அண்மையில் வெளிவந்த 1000 கவிதைகள் நூலில் அவருடைய சிறந்த கவிதை வெளிவந்துள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் பகுதித் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். பொதுச் சேவையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். புத்தூர் சிவன் கோயிலுக்கு அருகாமை "குகன் கலாச்சார மண்டபம்" என்ற பொது மண்டபத்தைக் கட்டி மக்கள் பாவனைக்கு விட்டுள்ளார். இப்பொழுது அங்கே பொது நிகழ்வுகள், அன்னதானம் என்பன நடைபெறுகின்றன. இவ்வாறு பெருமைக்குரிய குகானந்தன் அவர்கள் மணிவிழாச் சிறப்பினோடு மேலும் பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா கண்டு திடகாரோக்கியத்துடனும் சிறந்த செல்வ வளம் மிக்கவராகவும் வாழவேண்டும் எனவும் நல்லாசிகள் கூறுகின்றேன்.

# பேரறிவாளர்



**செ.மோகனதாஸ் சுவாமி**
சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி.

கடமை உணர்வோடு செயற்பட்டு தனது அறுபதாவது அகவையில் காலடி வைக்கும் ஆசிரியர் திரு. குகதாசன் குகானந்தன் அவர்கள் தனது ஆசிரியப் பணியிலிருந்த காலத்தில் பல பாடசாலைகளிலும் தனது கற்றல் செயற்பாட்டின் மூலம் பல மாணவர்களதும் கல்வி முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட ஓர் பெருந்தகையாளன்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கடந்த நான்கு வருடங்களாகக் கடமையாற்றி, கல்வியில் பின்தங்கிய நிலையில் இருந்த மாணவர்களின் கற்றலுக்கு ஊன்றுகோலாக விளங்கி எல்லார் மனங்களிலும் இடம்பிடித்த ஒரு பேரறிவாளன்.

திரு. குகதாசன் குகானந்தன் அவர்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ சந்நிதி வேற்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

22..10..2017..

## கல்விசார் பெருந்தகை



**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமசார்ய சுவாமிகள்.**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

குகதாசன் குகானந்தன் அதிபர் இன்று மணிவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பல பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு பணி ஆற்றி எல்லோரிடையேயும் அன்பாகவும், இனிமையாகப் பழகும் சுபாவம் உடையவராகவும், சமய சமூக பணிகளில் தம்மை ஈடுபடுத்தி ஓய்வு நிலையில் சமூகத் தொண்டுகளை ஆற்றி தன்னுடைய வாழ்க்கையை அறவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் குகானந்தன் இன்று போல் என்றும் மகிழ்ச்சியாக வாழவும் அறப்பணிகளை ஆற்றவும் இறை அருளை வேண்டுகின்றோம். திரு.குகானந்தன், திருமதி குகானந்தன் தம்பதிகள் நிறைவாக வாழ வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

# உளவள அபிவிருத்தியில் ஈடுபட்டவர்



**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமி**
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயாமிஷன்,
யாழ்ப்பாணம்.

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் கடந்த நான்கு வருடங்களாக பகுதித் தலைவராக கடமையாற்றி 07.04.2017 இல் ஓய்வு பெற்றுள்ள திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள், கடந்த 20 வருடங்களாக ஆசிரியர், அதிபர், பகுதித் தலைவர் என பல பதவிகளில் தனது சேவையை கல்விச் சமூகத்திற்கு வழங்கி வந்துள்ளார். அத்துடன் பல உளவள அபிவிருத்தி சேவைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

மனித வாழ்வின் நான்கு ஆச்சிரமங்களை பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்த்தம், சந்நியாசம் என்பவற்றுள் வானப் பிரஸ்தத்தை எட்டியுள்ள குகானந்தன் ஐயா அவர்கள் வானப்பிரஸ்த தர்மமான பொதுநலம் சார்ந்த சேவைப் பணிகளில் ஈடுபட்டு தனது மனதைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் வாழ்வின் இறுதி இலக்கை அடைய ஆசிவேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள் சேவையே! மகேசன் சேவை!

வாழ்க பல்லாண்டு! வாழ்க வாழ்கவே!

# கவிதைத் துறையில் ஈடுபாடுடையவர்



**நீ.மரிய சேவியர் அடிகள்**
திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

கடந்த 19 ஆண்டுகளாக ஓர் ஆசிரியராக, அதிபராக, பகுதித் தலைவராக செயற்பட்டு கல்விப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற திரு. குகதாசன் குகானந்தன் அவர்கள் எளிமை, தன்னடக்கம், பணிவு முதலிய நற்பண்புகளைக் கொண்ட சிறந்த ஆளுமையாக விளங்குபவர்.

கல்வியில் பல சாதனைகளைப் படைத்துள்ள இவர், ஆசிரியராக 1998இல் யாழ். இடைக்காடு மகாவித்தியாலயத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பித்து, நிறைவாக, யாழ்.தொண்டைமானாறு வீ.பி.ம.வி இல் பிரதி அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

குகதாசன் குகானந்தன் உளவளத்துறையிலும், கவிதைத்துறையிலும் ஈடுபாடுடையவராக இருந்துள்ளமை அவருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான சீரான உறவு நிலையை பேணுவதற்கு பெரிதும் துணைநின்றது என்பது பலரும் அறிந்ததே!

சமூகத்திற்கு ஆற்றுகின்ற பணிகள் எல்லாமே அந்தந்த தளங்களில் உயர்வானவைதான். அவைகளுள், ஆசிரியப் பணி தனிச்சிறப்புடையது. நேரடியாக உருவாக்கற் பணியுடன் தொடர்புடையது. ஆசிரியப் பணி நாளைய சமூகத்தின் பண்பாளர்களை உருவாக்கும் உன்னதமான பணியாக அமைகின்றது. இத்தகைய சிறப்பான பணியில் 19 ஆண்டுகள் நிலைத்து நின்று, தன்னலமற்ற சேவை புரிந்து ஓய்வு பெற்றுள்ள திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் மணிவிழாவினதும் அதற்குப் பிற்பட்ட காலத்தினதும் கட்டத்தில் இன்னும் பல பணிகளை அவர் ஆற்றுவதற்கு உகந்த ஓய்வுப் பருவமாக அமைந்திட இறையருள் வேண்டி அவரை வாழ்த்துகின்றேன்.



1999 ஆசிரியர் தினம்
யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்



புதிய அதிபர் வரவும் பழைய அதிபர் பிரிவும்
யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.



யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
உயர்தர மாணவர் ஒன்று கூடல் - 2003



யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
பவளவிழா - 2004




யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
ஆசிரியர் தினம் - 2003



யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
மாணவர் ஒன்று கூடல் - 2007



யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
மாணவர் ஒன்று கூடல் - 2008



யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
பிரியாவிடையின்போது

# இலட்சிய வேட்கை கொண்ட இனப்பற்றாளர்



**திரு. மாவை சோ.சேனாதிராசா**
பாராளுமன்ற உறுப்பினர்.

மணிவிழா நாயகன் குகானந்தனுக்கு வாழ்த்துக்கள்


யாழ்ப்பாணம் அச்சுவேலி குகதாசன் குகானந்தன் நல்லாசிரியருக்கு மணி விழா எடுப்பது மிகப் பொருத்தமானதாகும். அத்துடன் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

யாழ் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்விப் படிப்பை ஆரம்பித்து ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் வரை பட்டப்படிப்பையும் பெற்றவர். மேலாகக் கல்வித் துறையில் பல பட்டங்களையும் பெற்று வெற்றி பெற்றவர்.

1998ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்ந்தவர். இதுவரை தமிழர் வரலாறு, பொருளியல், கணக்கியல் முதலான துறைகளில் நல்லாசிரியராக விளங்கி அதிபர் பதவி வரை வகித்து கல்விமானாகவும், சமூகத் தொண்டராகவும், கலங்கரை விளக்காகவும், கவிஞராகவும், நூல் வெளியீட்டாளராகவும் விளங்கியவர் குகதாசன் குகானந்தன் ஆசிரியர்.

அத்தோடு, கொள்கைப் பற்றும் இலட்சிய வேட்கையும் கொண்ட இனப் பற்றாளராகவும் அடையாளப்படுத்திக் கொண்டவர் எனும் பெருமைமிகு குகதாசன் குகானந்தன் ஆசிரியர் மணி விழா நாயகனாகப் போற்றப்பட்டு மாண்புறுவது மகிழ்ச்சியளிக்கின்றது. அன்னார் பல செல்வங்களும் பெற்று வளமுடன் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

# சமூகம் நோக்கிய சேவையாளன்



**திரு. த.சித்தார்த்தன் (பா.உ)**
(ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி)
தமிழ் தேசிய கூட்டமைப்பு.

மணிவிழாக் காணும் ஆசிரியர் திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் சிறந்த கல்விப் பணிக்காக எனது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்சியடைகின்றேன்.

புத்தூர் கிராமத்தில் பிறந்த திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள் தனது கிராமத்திலேயே ஆரம்பக் கல்வியினை பயின்று பின்னர் யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திற்கு தேர்வானவர். பின்பு வணிக முதுமானி பட்டத்தினை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். தனது ஆசிரியர் பணியினை இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துள்ளார். யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியராகவும், யா/ நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையில் அதிபராகவும் சிறந்த வகையில் தனது பணியினை செவ்வனே ஆற்றியிருந்தார். குறிப்பாக நாட்டில் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் இவர் மாணவர்களில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் காட்டிய சிரத்தை கவனத்திற்குரியது. நவீன கற்பித்தல் முறைகளினூடாக மாணவர்களுக்கு கல்வியில் பலமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்து அவர்களின் முன்னேற்றத்திற்கென அயராது உழைத்தவர்.

தனியே கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது கவிதை நூல்களையும் வெளியிட்டு சமூகத்தின்பால் தனது அக்கறையை செலுத்திய திரு.கு.குகானந்தன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை-2-II தரத்தை பெற்றவர். யா/ தொண்டைமானாறு வீ.பி.ம.வி. யில் பொருளியல், வரலாறு, தமிழ் பாடப் பிரிவுகளின் பகுதித் தலைவராக கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவருடைய சேவைகள் தொடர்ந்தும் மாணவர்களுக்கும் மக்களுக்கும் அவசியமானதென்பதை வலியுறுத்தி, அவருடைய சமூகம் நோக்கிய சேவைகள் இன்னமும் ஏனைய வழிகளில் தொடர எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மீண்டும் மணிவிழா நாயகருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

# மாணவர்களின் உயர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்



மக்கள் சேவையில்
திரு. சுரேஷ் க.பிறேமசந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

பிரபல ஆசிரியரும், சமூக சேவகரும், கவிஞருமான திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள் 60வது அகவையை அடைகிறார் என்பதும், அதனை மணிவிழாவாக கொண்டாடுகின்றார் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சில காலங்களுக்கு முன்பாக அவரது "நிதர்சனம்" கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்காக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரிக்கு சென்றிருந்ததை இத்தருணத்தில் நினைவு கூர்கின்றேன்.

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுதுமில்லாமல், கல்வித்துறையிலும் பல்வேறுபட்ட தகுதிகளையும் பெற்றுக்கொண்ட ஆசிரியராகவும் திகழ்ந்து வருகின்றார்.

எனது தொகுதியான கோப்பாய் தொகுதியில் பல்வேறுபட்ட பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக செயற்பட்ட இவர் பல நூறு மாணவர்களின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அரும்பணி ஆற்றி இருக்கின்றார்.

இவரைப் போன்ற ஆசிரியர், சமூக சேவகர்கள் எனது தொகுதியில் வசிப்பதானது எனக்கும், கோப்பாய் தொகுதிக்கும் பெருமை சேர்ப்பதாகும். ஆசிரியப்பணி ஓய்விற்கு பிறகு அவருக்கு நீண்ட சமூகப்பணி காத்திருக்கின்றது. மக்களின் மகிழ்ச்சியே எமது மகிழ்ச்சி எனக் கருதி அச் சமூகப் பணிகளை அவரும் அவரது துணைவியாரும் முன்னெடுக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கிணங்க குகானந்தனின் செயற்பாடுகள், அவர் சேவையாற்றி பாடசாலைகள் சிறப்பித்திருக்கின்றன. அவ்வகையில் அவரதும், அவரது மனைவியிரதும் சேவைகள் தொடர வாழ்த்துவதுடன், நோய் நொடியற்று நீண்ட காலம் வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# அனுபவம் வாய்ந்த கல்வியாளன்



**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சர்,
வடமாகாணம்.

அகவை அறுபதை நிறைவு செய்து வாழ்க்கையின் இன்னுமொரு புதிய பரிமாணத்தை நோக்கிக் காலடி வைக்கும் திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள் கடந்த இருபது வருடங்களாக ஆசிரியர் சேவையினூடாகவும், அதிபர் சேவையினூடாகவும் பல மாணவர்களைப் பல்கலைக்கழகம் செல்ல வைத்த பெருமைக்குரியவர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது வணிகமாணிப் பட்டத்தினையும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வணிக முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட திரு.கு.குகானந்தன் அவர்கள் பல்துறை ஆற்றல் உள்ளவராக விளங்கினார் என்பதற்குப் பிற்காலத்தில் அவர் பெற்றுக்கொண்ட கல்வித் தகைமைகளும் அவற்றினூடாக அவர் பெற்ற சாதனைகளும் எடுத்துக் காட்டுகின்றன.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள இடைக்காடு மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்து தனது ஓய்வின் பொழுது தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகத் தனது ஆசிரியர்ப் பணியை நிறைவு செய்து பல நூற்றுக் கணக்கான மாணவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்களாகத் திகழ்ந்தார்.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொருளில், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஆக்க இலக்கியத் துறையிலும் தனது முத்திரையைப் பதித்து நிதர்சனம் போன்ற கவிதை நூல்களையும் வெளியிட்டு தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் ஒரு அனுபவம் வாய்ந்த கல்வியாளரைப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.கு.குகானந்தன் அவர்கள் தொடர்ந்தும் கல்வித்துறை வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்தி வருவதுடன் தனது சமூக சேவை, கல்விப் பணி மற்றும் ஆன்மீகப் பணிகளையும் முன்னெடுக்கும் வகையில் இறைவன் நீண்ட ஆயுளோடும், நலத்தோடும் வாழ வைக்கவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடுள்ளவர்



**திரு. க. தருமலிங்கம்**
வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
வடக்கு மாகாணம்.

ஆசிரியர், அதிபர் சேவைகளிலிருந்து ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் கற்றல்-கற்பித்தல் சேவை மிகவும் பாராட்டுக்குரியதாகும். அவரின் மணிவிழா நிகழ்ச்சியை ஒட்டி வெளியிடப்படும் மணிவிழா மலரிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றென். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றைக் கடைப்பிடித்து மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, நேர் மனப்பாங்கு கொண்ட ஒரு சிறந்த ஆசிரியர் என்பதனை மகிழ்ச்சிகரமான கற்பித்தல் மூலம் நிலை நிறுத்தியுள்ளார்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ்சொல்"

எனும் வள்ளுவர் பெருமானின் கூற்றுக்கேற்ப, தனது தந்தையின் விருப்பத்திற்குரிய ஒரு மணி மண்டபத்தை அமைத்து தந்தைக்கும் தனக்கும் பெருமை சேர்த்துள்ளார். மேலும் இந்த மணிமண்டபத்திலேயே தனது மணிவிழாவைக் கொண்டாடுவது ஒரு தனிச்சிறப்பான விடயமாகும். மேலும் இவரின் துணைவியார் ஒரு வைத்தியராக இருந்து சமூகப் பணிகளைச் செய்தது இவரின் குடும்பத்தின் பெருமையை உயர்த்தியுள்ளது.

இவரின் குலதெய்வமாகிய புத்தூர் விஸ்வநாதப்பெருமான் அருள் ஆசியோடு சமூக சமயப் பணிகள் சிறப்பானதாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். மேலும் வெள்ளை உள்ளம் கொண்ட குகானந்தனும், துணைவியாரும் நலமுடன் வாழ்ந்து நற்பணிகளைச் செய்ய எனது வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# வாழ்க கவிஞன்
# வளர்க பணிவாழ்வு



**திருமதி சுபாஜினி மதியழகன்**
பிரதேச செயலாளர்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

எமது மண்ணில் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட பலர் தமது ஆளுமையினை வெளிப்படுத்தும் பல்வேறு வகையிலான கலைத்துறைகளில் மேலான பல்வேறு ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வாறு சமகாலத்தில் இலக்கியப் பணிகளில் ஈடுபடுபவர்கள் மிகச்சிலர் எனக் குறிப்பிடலாம். அவர்களில் ஒருவராக திரு.குகதாசன் குகானந்தனும் (புத்தூர் குகன்) விளங்குகின்றார்.

நல்ல ஒரு ஆசிரியனாக, கல்லூரித் தலைவனாக சமூகத் தொண்டனாக, திறன்மிகு கவிஞனாக, குடும்பத்தலைவனாக எனப்பன்முக ஆளுமைகொண்ட ஒருவர் வலிகாமம் கிழக்கில் வாழ்ந்து வருவது பெருமைக்குரியதாகும். இத்தகைய கலைஞனை அவரது அறுபதாவது அகவையின் நிறைவு காணும் மணிவிழா நாயகனை குடும்பத்தினரும், ஊர்மக்களும், நண்பர்களும் அகமகிழ்ந்து கௌரவித்து வெளியிடும் புதுவை குகனின் "குக-ஆனந்தம்" எனும் அகவை 60 விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

"அரியவற்று எல்லாம் அரிதே பெரியோரைப் பேணித்தமராக கொளல்" எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க மணிவிழா எடுக்கும் கலைப்பெருமக்களுடன் அவரை பல்வேறு சௌபாக்கியமும் பெற்று ஓய்வு காலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

இத்தருணத்தில் இவரால் வெளியிடப்பட்ட "நிதர்சனம்" எனும் கவிதை நூலும் பிறந்த மண்ணில் கட்டப்பட்ட "குகன் கலாசார மண்டபமும்"

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப்பெரிது"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க எம் மண்ணுக்கு கிடைத்த அரிய பொக்கிசங்களாகும்.

எனவே இவரது கலைப்பணி சிறந்து விளங்கவும் பல்துறைசார்ந்த மேன்மைகள் பல பெறவும் இறையாசீர் வேண்டி நடைபெறும் மணிவிழா சிறப்புற இனிதே வாழ்த்துகின்றேன்.

வாழ்க கவிஞன்! வளர்க பணிவாழ்வு!

# சமூகக்காருணியன் வாழ்க வளமுடன்



**திரு.இ. ஜோன்சன்**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

மருதமும் நெய்தலும் ஒருங்கிணைந்து புத்தூர் மண்ணில் பிறந்து இன்று தனது அகவையின் 60 ஆண்டுகளை பூர்த்தி செய்து மணிவிழாக்காணும் எமது மண்ணின் புதுவைக்கவிஞர் திரு.குகதாசன் குகானந்தன் அவர்களுக்கு மணிவிழாவினை நடத்தும் நல் உள்ளங்களுடன் வாழ்த்துக்களை கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குடும்ப வாழ்விலும், கலைப்பணியிலும், சமூக நலனிலும் சிறப்பான சேவையினை ஆற்றிய புதுவை குகன் எனும் கலைஞனுக்கு இன்று வெளியிடப்படும் குக ஆனந்தம் எனும் அகவை 60 விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மனப்பூரிப்படைகிறேன்.

ஆசிரியராக, கவிஞராக, சிறந்த சமூகப்பணியாளனாக பல்வேறு பரிமாணங்களுடன் ஓய்வுநிலை காணும் எம்மண்ணின் மைந்தனாக விளங்கும் இவர் நிதர்சனம் எனும் கவிதை நூல் ஊடாக எம்முடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் ஆயுட்கால உறுப்பினராக இணைந்து பேரவையின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற வள்ளுவரின் குறளுக்கமைய தாம் பிறந்த மண்ணில் குகன் கலாசார மண்டபத்தினை தனது நிதியில் அமைத்து மக்களுக்காக அர்ப்பணித்த சமூகக் காரூணியன் ஓய்வுகாலம் சீரும் சிறப்பும் பெற்று நீடுழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்! வளர்க நும்பணி!

# காலமாற்றத்துக்கு ஏற்ப கடமையாற்றுபவர்



**சைவப்புலவர் சி.நந்தகுமார்**
முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி, அச்சுவேலி.

2009ஆம் ஆண்டு அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கிக்கிளை ஆரம்பித்த காலத்தில் இருந்து எங்கள் வங்கிக் கிளையின் வாடிக்கையாளராகிய திரு.கு.குகானந்தன் அவர்கள் எனது இனிய நண்பராகவும் பழகத் தொடங்கினார். திரு.கு.குகானந்தன் அவர்கள் ஆசிரியர் என்பதை அறிந்து கொண்டேன். காலப்போக்கில் அவர் எனக்குத் தந்த கவிதை ஊடாக அவர் சிறந்த கவிஞர் என்பதை அறிந்து மகிழ்வுற்றேன்.

"தோன்றிப் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க திரு.கு.குகானந்தன் அவர்கள் கல்வியுலகிலும், கலையுலகிலும் புகழ்பெற்று விளங்கியமையால் புத்தூர் குகன் என்றும் கவிஞர் குகன் என்றும் எல்லோராலும் அன்பாக அழைக்கப் படுபவர்.

"வெள்ளத்தனையது மலர்நீட்டம் - மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

என்ற திருக்குறளுக்கு இணங்க திரு.கு.குகானந்தன் அவர்கள் உள்ளத்தால் உயர்ந்து, வாழ்க்கையில் உயர்ந்தார். வெள்ளையுள்ளம் கொண்டவர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாது வெளிப்படையாக எதையும் துணிந்து பேசுபவர். காலத்தைப் பொன்னாக்கி, கடமையைக் கண்ணெனப் போற்றி செயல்கள் ஆற்றும் இளமைத்துடிப்புள்ள ஆசான். எளிமை, தன்னடக்கம், பணிவு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டவர். கால மாற்றத்துக்கு ஏற்ப கடமை ஆற்றும் கர்ம வீரர்.

கல்வி அழகே அழகு என்றும் கல்விதான் வாழ்க்கையைச் சோலை வனமாக்கும் என்றும் பெருமை மிக்க கல்விப் பணியை கடவுள் பணியாக திரு.கு.குகானந்தன் திறமையாகச் செய்தார். திரு.கு.குகானந்தன் அவர்கள் பல்கலைக்கழகப்பட்டங்களையும், தொழிற்துறைப் பட்டங்களையும் பெற்று தன்னை உயர்த்தி, மாணவர்களையும் கல்வியால் உயர்த்தினார்.

பின்வாங்கில் இருந்த மாணவர்களை முன்வாங்கிற்குக் கொண்டு வந்தார். மாணவர்களின் கல்வியின் உயர் இலக்கை அடைய ஏணிப்படிகளாகத் திகழ்ந்தவர். திரு.கு.குகானந்தன் அவர்களிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றார்கள்.

குகன் ஆசான் அவர்கள் வணிகக் கல்வியின் வித்தகனாகவும், பல பாடங்களை கற்பிக்கும் பல்துறை விற்பன்னராகவும், எல்லோர் மனங்களில் இடம்பிடித்த பேரறிவாளனாகவும், பன்முக ஆளுமை மிக்கவராகவும் திகழ்கிறார்.

திரு.கு.குகானந்தன் அவர்கள், கவிதை கட்டுரைகளைத் திறமையாகவும், சிறப்பாகவும் எழுதுவதால் இலக்கிய உலகில் புகழ்பெறுகிறார். கவிஞர் குகன் அவர்கள் எதையும் ஆழமாகவும், அகலமாகவும், கூர்மையாகவும் ஆராய்ந்து செய்ய வல்லவர். அறிவியல் சார்ந்த ஆத்மார்த்தமான கருத்துக்களை வெளிப்படையாக பேசும் சுபாவம் மிக்கவர். கிராமிய பாரம்பரியங்களை மிகத் துல்லியமாக அறிந்து அதனுடன் ஒட்டி உறவாடி பலப்படுத்துவார். ஆசான் குகன் அவர்கள் கவிதைத்துறையில் மட்டுமல்ல உளவளத்துறையில் நிறைந்த ஈடுபாடுடையவர்.

"எமக்கு இந்த சரீரம் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற நாவலர் பெருமானின் வாக்குக்கு இணங்க ஆசான் குகன் அவர்கள் இறைவழிபாடு செய்பவர். "அன்பே கடவுள் அன்புத் தளிரில் இருந்துதான் சேவை என்ற மொட்டுவிட்டு பக்தியாக மலர்கிறது" என்ற தெய்வ வாக்குக்கு அமைய ஆசான் குகன் அவர்கள் அன்பின் மூலம் சேவை செய்பவர்.

சமூகம் உனக்கு என்ன செய்தது என்பதை விட சமூகத்திற்கு நீ என்ன செய்தாய்? என்ற அறிஞர் கூற்றுக்கிணங்கவும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க, ஆசான் குகன் அவர்கள் புத்தூர் சிவன் ஆலயத்திற்கு அன்னதான மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுத்துள்ளார். இங்ஙனமாக ஆசான் குகன் சமய, சமூக சேவையால் உயர்ந்து நிற்கிறார்.

நற்பண்புகள் நிறைந்த கல்விப்பணி, இலக்கியப்பணி, சமூகப்பணி ஆற்றுகின்ற மணிவிழா நாயகன் திரு.கு.குகானந்தன் அவர்கள் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் திருவருளால் சகல சௌபாக்கியங்கள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி அவரது கல்வி, இலக்கிய, சமய, சமூகப் பணிகள் மேன்மேலும் தொடரட்டும் என மனமுவந்து வாழ்த்துகிறேன்.

# அத்தை மகனுக்கு அகவை அறுபது....
# ஆதலால் இந்த அன்பு மடல்...



**திரு.க.சிவானந்தமூர்த்தி**
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
ஈஸ்வரிபுரி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

புகழ் பூத்த புத்தூரில், சைவம் பாலிக்க வாழ்ந்த மயில்வாகனம் பரமநாதர் மகன் குகதாசருக்கும் சீர்மிகு சின்னம்மாவுக்கும் அன்பு மகனாய் 1957ல் வந்து உதித்தீர்கள். கல்வியை யாழ் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலும் ஆரம்பித்து, இடைக்காலக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்று, மேலுமாய் மேல்நிலைக் கல்வியை கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் பெற்று கல்வியில் கனவானாய் மகுடம் சூட்டினீர்கள்.

உரிய காலத்தில் ஒப்பந்த ஆசிரியப் பணியிலிணைந்து ஆசிரியராய், உப அதிபராய், அதிபராய் பணி உயர்ந்தீர்கள். வைத்திய நங்கை பத்மராணியை காலமதில் மணம் முடித்து இல்லறம் எனும் நல்லறம் கண்டீர்கள். வள்ளுவன் வாக்குக்கமைய இல்லிருந்து இனியே விருந்தோம்பி மகிழ்ந்தீர்கள்.

பெற்றவர்கள் விருந்தாப்பியமானபோது கண் எனப் போற்றி கடமை செய்து அவர்கள் மகிழ்வே உங்கள் மகிழ்வெனவாக்கிக் கொண்டீர்கள். மானிடத்தே இவன் போல் ஒரு மகன் உண்டோ என எண்ண வைத்தீர்கள். ஆசிரியர் பணியை பாங்குற ஆற்றி எண்ணற்றமாணவர்களை கசடற கற்பித்து ஓர் ஆளுமை மிக்க மாணவர் படையணியை உருவாக்கினீர்கள்.

மைத்துனனே! கவிதைப் பிரசவம் உனக்கோர் கைதேர்ந்த கலை. உன் கவினுறு கவிதைகளோ கருத்துச் சுரங்கம். நயப்போருக்கு அது கலங்கரை விளக்கு. தொய்வின்றி தொடர் உன் பணியை. இனம், சனம், ஊரவர்கள், உதவினவர்கள், நண்பர்கள் என்று அனைவரது நன்மை தீமைகளில் பார்வையாளனாகவன்றி பங்காளியாகி அரிய பணி செய்தீர்கள். சிதம்பர நடராசருக்கு உற்சவங்கள் நடாத்த, சிதம்பர நகரில் காணிகள், கடைகள், காணிக்கை செய்த வழி வந்த தொன்றாய் என்ற வரலாற்றை மீளவுமாய் நினைப்பித்த புத்தூர் சிவனுக்கு அன்னதான மண்டபம் அமைத்து மகிழ்ந்தாய். வாழி நீ பல்லாண்டு.

தங்கள் சிவத்தொண்டும், சமூகத்தொண்டும் தொடர நீண்ட ஆயுளையும் நிறைந்த சீரையும் தருமாறு சிவன், அம்மன் பாதார விந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.




யா/ அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சேவை
நயப்பு நிகழ்வில் வழங்கப்பெற்ற பாராட்டுப் பாமாலை

# தமிழ்மொழியில் பற்றுள்ளவர்



**கலாநிதி கலைவாணி இராமநாதன் MA,Ph.D**
ஓய்வுநிலைப் பேராசிரியை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள் எப்போதும் துடிப்பான சுறுசுறுப்பாக இயங்கும் ஓர் வளவாளர், நல்லாசிரியர். பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியில் கல்லூரிப் படிப்பினை முடிந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர (களனிப் பல்கலைக்கழகத்தில்) தமது பட்டப் படிப்பையும் நிறைவு செய்து தனது திறமைகளை வளர்த்துக் கொண்டவர். அதற்காகவே மேன்மேலும் கல்வித் துறையில் டிப்ளோமா பட்டமும், காமராஜர் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பில் m.com பட்டத்தையும் தமதாக்கி தன்னை முழுமையாக கல்விச் சேவைக்கு அர்ப்பணித்த பெருமகனை அவரது ஓய்வு காலத்திலும் அன்னாரின் சேவைகள் சிறப்பாக தொடரும் வண்ணம் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.குகானந்தன் அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் ஓடி ஓடி தமது வேலைகளைச் செய்யும் ஓர் திறமை மிக்க ஆசிரியர் என்பதனைப் பலரும் அறிவர். ஆசிரியப் பணியுடன் வணிகமாணிப் பட்டம் பெற்றிருந்தாலும் தமிழ் மொழியில் பற்றும், உயர் பாண்டித்தியமும் உள்ளவர். அதனாலேயே இன்றைய தமிழ்க் கவிதையுலகிலே பல நூல்களை வெளியிட்டு புகழ்பெற்றவராயுமுள்ளார். 21.10.2017 "உலகக் கவிஞர்கள் கவிதை மலர்" ஒன்று ஆயிரம் கவிதைகள் அடங்கிய நூலாக வெளிவந்திருக்கிறது. அந்தக் கவிதை நூலிலும் திரு. குகானந்தன் அவர்களின் கவிதை இடம்பெற்றிருப்பது மேலும் பாராட்டிற்குரியது.

தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலயத்தில் இறுதியாகப் பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் தமிழ்த்துறை கவிதை இலக்கியத்திற்கு செய்யும் சேவையிலிருந்து அவர் ஓய்வு பெறமுடியாது. அவரது இச்சேவை தொடரவும் அன்னாரை வாழ்த்துகின்றேன். ஆசிரியர் அவர்களின் குடும்பம் நிறைந்த சைவப்பற்றுள்ள குடும்பம். அவர் இன்று சிறந்த ஓர் மாயவனார் பக்தர். அன்னாரின் துணைவியார் திருமதி பத்மராணி அவர்களும் ஓய்வுபெற்ற பல்வைத்திய நிபுணர். நிறைந்த அம்பிகையின் பக்தராக விளங்குவதனை குகானந்தன் அவர்கள் அடிக்கடி கூறுவார். இதனாற்போலும் புத்தூர் சிவாலயத்திற்கு அண்மையில் தற்போது

ஓர் குகன் கலாச்சார மண்டபம் ஒன்றினைத் தமது சொந்தப் பணத்திலேயே அமைத்துக் கொடுத்து சேவைப் பணியையும் தமதாக்கிய பக்திமான் ஆவார். இவர் ஒரு சிறந்த ஐயப்ப பக்தராகவும் இருப்பதுடன் வருடம் தோறும் சபரிமலை யாத்திரை செய்வதும் இவரது வழக்கமான ஓர் பண்பாகும்.

இவ்வாறு பெருமதிப்பிற்குரியவராக விளங்கும் திரு.குகானந்தன் அவர்கள் இன்றைய சூழ்நிலையில் தமிழர்களின் அரசியல், இளைய தலைமுறையினரின் பணிகள், கலாச்சார விழுமியங்கள் முதலானவைகளைக் குறித்தும் நிறைந்த ஆர்வமும் அக்கறையும் உடையவர். அன்னார் மணிவிழாக் காணும் இந்நாளில் அவரையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்துவதுடன் அவர்கள் யாவரும் நீண்ட காலம் ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தொடர்ந்தும் தமிழ் சமூகத்திற்குப் பணியாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவித்து இதனை நிறைவு செய்கிறேன்.

# பன்முக ஆளுமை கொண்ட அதிபர்




**பேராசிரியர் க. தேவராஜா**
முன்னாள் பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.


எனது அன்புக்குரிய மாணவன் உயர்திரு. குகதாசன் குகானந்தன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாணவரைக் கவர்ந்த ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராகப் பணியாற்றி இளைப்பாறிய திரு.குகானந்தன் அவர்கள் பல்துறை ஆளுமைகொண்ட ஒரு மனிதர் எனக் கூறுவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன். இலக்கியப் பணியிலே உலகின் முன்னணி வகிக்கும் ஆயிரம் கலைஞர்களது வரிசையில் இடம்பிடித்துக்கொண்ட இவர் பல உயிரேட்டம் மிக்க கவிதைகளை ஆக்கிய பெருமைக்குரியவர். அதுபோன்றே அவரது சமூக சேவையின் சிகரமாக திகழக்கூடிய புத்தூர் சிவன் கோவில் கலாச்சார மண்டப உருவாக்கம் அமைந்துள்ளது. கோவில் நிகழ்வுகள் மட்டுமன்றி பொது நிகழ்வுகளையும் நடாத்தக்கூடிய வகையில் பெருமளவு பணச்செலவில் உருவாக்கப்பட்ட கலாச்சார மண்டபம் அவரின் சமூகசேவைக்கு எடுத்துக் காட்டாகும். கல்விப் பணி, இலக்கியப் பணி, சமூகப்பணி எனக்கூறப்படும் பல்பரிமாணம் கொண்ட பணிகளை ஆற்றிய நல்லதொரு சேவையாளனாக திரு.குகானந்தன் இருப்பது எமக்கு பெருமை தருவதாக உள்ளது.

திரு.குகானந்தன் அவர்கள் எனது மாணவன் எனக்கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். அவர் சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாக இணைந்து வணிகப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பட்டப் படிப்பினை தேசிய கல்வி நிறுவனத்தில் பூர்த்தி செய்தார். தொடர்ந்து அதிபர் சேவைப் பரீட்சையிலும் சித்தி பெற்று ஆசிரிய சேவையிலிருந்தும் பதவியுயர்வு பெற்று அதிபராக மாறினார். அவர் வணிகத் துறையில் பல பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியராகத் திகழ்ந்த காரணத்தால் எல்லோரிடமும் நல்லாசிரியர் என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார். இதன் காரணமாக புகழ்பூத்த ஒரு ஆசிரியராக அவர் வலம் வந்தது மட்டுமன்றி புத்தூரின் புகழ்பூத்த ஒரு சமூக சேவையாளராகவும் இனங்காணப்பட்டுள்ளார் எனக் கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

திரு.குகானந்தன் அவர்கள் என்றுமே சுறுசுறுப்பாக இயங்கும் சுபாவம் கொண்டவர். அவர் கல்வி பயிலும் காலத்தில் எப்படிச் சுறுசுறுப்பாக இயங்கினாரோ அதே உற்சாகத்துடன் இன்றும் வலம்வருதனைக் கண்டு வியந்து நிற்கின்றேன். அவரின் இந்த மனோபலமும் உடலாரோக்கியமும் இளைப்பாறியதன் பின்னரும் அவருக்கு பல பணிகளை ஆற்ற வகை செய்யும். ஆதலால் இறைவன் கொடுத்த இப்பலத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் சமூகத்துக்காக அவர் உழைக்க இறைவன் அருள்புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன் அவர் குடும்பத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழ்க வளமுடன் வாழ்க.



யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலையில்
அதிபராக இருந்து விளையாட்டுப் போட்டி நடாத்தியபோது



யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
முன்னைநாள் அதிபரின் பிரியாவிடையின் போது



யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
ஆசிரியர் தினம்

# இலக்கிய ஆன்மீக பணிகளில் ஈடுபாடுள்ளவர்



**திரு. செ. உதயகுமார்**
**மகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

யா/தொண்டைமானாறு வீரகத்தி ம.வி இல் பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.குகதாசன் குகானந்தன் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் அதிபராகவும் பின்பு யா/ தொண்டைமானாறு வீரகத்தி ம.வி இல் பிரதி அதிபராகவும் தனது பணியினை ஆற்றியுள்ள இவர் வணிகமானி பட்டதாரியாவார். அத்துடன் இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வணிக முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

இவர் தனது ஆசிரிய சேவையினை 1998இல் யா/ இடைக்காடு ம.வி இல் ஆரம்பித்து க.பொ.த (உ.த) மாணவர்களுக்கு கணக்கியல் பாடத்தினையும், யா/ அத்தியார் இந்துக் கல்லூரியில் க.பொ.த (உ.த) மாணவர்களுக்கு வர்த்தகம், பொருளியல் ஆகிய பாடங்களினையும் போதித்துள்ளார்.

இவர் பல்வேறு ஆன்மீகப் பணிகளிலும், இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். அத்துடன் புத்தூர் சிவன் கோவிலில் கலாச்சார மண்டபம் ஒன்றினையும் அமைத்து அப்பிரதேச மக்களினது தேவைகளை நிறைவு செய்துள்ளார். ஆசிரியராக, அதிபராக இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு இவரது ஆன்மீகப் பணிகள், சமூகப் பணிகள் தொடர வாழ்த்துகின்றேன்.

# நல்வழி காட்டிய அதிபர், ஆசிரியர் திரு.கு.குகானந்தன்



**திரு. வே.தி.செல்வரத்தினம்**
இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு I,
ஓய்வுநிலைப் பிரதிச் செயலாளர்,
வடமாகாணக் கல்வியமைச்சு.

திரு.கு.குகானந்தன் அவர்களை யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிற் பகுதித் தலைவராகவும், வணிக பாட ஆசிரியராகவும் கடமையாற்றிய காலத்திலிருந்து தெரியும். மாணவர்களைக் கற்பிப்பது மாத்திரமல்லாது நல்வழியில் வழிகாட்டியாக இருப்பதிலும் ஒரு நல்லாசிரியராகக் கடமையாற்றினார். மிகவும் கஷ்டப் பிரதேசமான யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் ஆங்கில பாட ஆசிரியர் இல்லாதபோது மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தை சிறப்பாகக் கற்பித்தார். அதிபராகக் கடமையாற்றிய காலத்திலும் சிறந்த முகாமையாளராகக் கடமையாற்றினார்.

தனது மனதில் பட்ட நல்லவற்றை வெளிப்படையாகக் கூறி எல்லோரையும் நல்ல வழியிற் செயற்பட வழிகாட்டினார் என்றால் மிகையாகாது. தனது இறுதிக் காலத்தில் வடமராட்சியிலுள்ள யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற் சிறப்புறக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார். தமது ஓய்வுக் காலத்தில் தொடர்ந்தும் கல்விக்குத் தொண்டாற்ற வேண்டுவதுடன், சுகபலத்துடன் வாழ எனது வாழ்த்துக்கள்.

# ஓய்விலாச் செம்மல்



**Dr. மு. யோகநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

புத்தூரில் பிறந்து யா/ புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய புகழ்பூத்த கல்லூரிகளில் கற்றுப் பல்கலைக்கழகக் கல்வியினை நிறைவேற்றி வணிகப்பட்டதாரியாக மிளிர்ந்தவர் திருவாளர் கு. குகானந்தன் அவர்கள். பின்னர் வணிக முதுமானியையும் பெற்றவர்.

வணிகப் பட்டதாரியாக இருந்தாலும் தமிழ் மொழியிலும் மண்ணிலும் அளவற்ற பற்றுள்ளவர். வாழ்ந்தால் தமிழ் மண்ணில் வாழவேண்டும், தமிழ் மணக்க வேண்டுமென்ற மதுரைத் தமிழ் பண்டிதர் சச்சிதானந்தம் அவர்களுடைய வரிகளின்பால் இவரது வாழ்வும் சிந்தனையும் அமைந்திருக்கின்றன.

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆசிரிய பணியினை ஆரம்பித்துப் பிரிவுத் தலைவராக, அதிபராகப் பல்பரிமாணங்களில் கடமைகளை ஆற்றி யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக சேவையாற்றி மணிவிழாக் கண்ட பெருமைக்கும் இவர் அணிசேர்த்துள்ளார்.

ஆயிரம் உலகக் கவிஞர்களின் கவிதை நூலில் திருவாளர் குகானந்தன் அவர்களின் கவிதையும் இடம்பெற்றிருப்பது மிகவும் பெருமைக்குரியதோர் விடயமாகும்.

சமூக சேவைகளின் மகுடமாக குகன் கலாசார மண்டபத்தினை அமைத்துத் திறந்து வைக்கப்பட்டுள்ளதனைக் குறிப்பிடலாம். "பணியுமாம் என்றும் பெருமை" என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமையத் தனது பெருமையைத் தக்க வைத்தவர். இவரது சேவைகளும் ஆன்மீகச் செயற்பாடுகளும் மிளிர்ந்து எமது சமூகத்திற்கு ஆற்றுப்படுத்தும் வல்லமையான பல சேவைகளை வழங்குவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகம் வழங்கவேண்டுமென வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

# நல்லதொரு சேவையாளன்



**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
முன்னாள் கோப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளர்.

அகவை அறுபதை அடைந்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் மணிவிழாவின்போது வெளிவரும் மலரில் அவரை வாழ்த்தி ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியராக, அதிபராக கடமைகள் புரிந்து பல நற்பணிகள் ஆற்றிய குகானந்தன் அவர்கள் பழகுவதற்கு இனியவர். மென்மையான பேச்சு மற்றவரை மதிக்கும் பண்பு போன்ற பல நற்பண்புகளைக் கொண்டவர். மதிப்பார்ந்த குகானந்தன் அவர்கள்.

பட்டதாரியான குகானந்தன் அவர்கள் தன்துறைசார்ந்த மேற் கற்கைகளை இலங்கையிலும், இலண்டனிலும் இந்தியாவிலும் பெற்ற பெருமைக்குரியவர். கற்றல் கற்பித்தலுக்கு மேலதிகமாக கல்லூரி நிர்வாகத்திற்கும் தனது ஒத்துழைப்பை நல்கி பாடசாலையின் சிறந்த செயற்பாடுகளுக்கு துணையாக நின்ற இவரின் பணி பாராட்டுக்குரியது.

கற்றல், கற்பித்தல், நிர்வாகம் இதற்கப்பாலும் இவருக்கு ஒரு முகமுண்டு. ஆக்க இலக்கியத் துறையில் தன்னை ஒரு கவிஞனாகத் தடம் பதித்துக் கொண்டவர். 2014ம் ஆண்டில் அவர் வெளியிட்ட "நிதர்சனம்" கவிதைத் தொகுதி நல்ல பாராட்டையும் வரவேற்பையும் பெற்றது. அண்மையில் வெளியான மெகா வெளியீடான ஆயிரம் கவிஞர்களின் கவிதைகள் என்ற நூலில் இவரது கவிதையும் இடம்பெற்றதும் இவரது கவித்துவ ஆற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இவரிடம் நான் காணும் இன்னொரு முகம் அறப்பணி. கோயில்கள் பாடசாலைகளுக்கு பல உதவிகளையும் வழங்கிவரும் இவர் புத்தூர் சிவன் கோயிலின் அருகில் ஒரு கலாச்சார மண்டபத்தையும் நிறுவிய பெருமைக்குரிய அறப்பணியாளனாகத் தன்னைப் பதிவு செய்துள்ளார்.

இவரின் நற்பணிகளுக்கு உறுதுணையாக துணைவியாரான ஓய்வுநிலை பல்வைத்தியர் திருமதி பத்மராணியின் பங்களிப்பும் சிலாகித்துப் பேசவேண்டிய ஒரு விடயமே. துணைவியாரின் உதவியின்றி இவர் இவ் அனைத்தையும் செய்வது சாத்தியமாக இருக்காது.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும். - (குறள்)

என்பது போல தனது சேவையின் எச்சங்களாக பல மாணவர்களையும் ஒரு கவிதை நூலையும் ஒரு கலாசார மண்டபத்தையும் தந்திருப்பது உண்மையில் மேன்மைக்குரிய செயலாகும்.

ஓய்வு பெறும் திரு.குகானந்தன் துணைவியாரோடும் சுற்றத்தோடும் நலமும், சுகமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

வாழ்க நலமுடன்

# தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த புலமையாளர்



**திரு.து.ராமதாஸ்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் – தமிழ்),
கல்வித்திணைக்களம், வடமராட்சி.

நான் யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தபோது என்னுடன் நெருங்கிப் பழகிய ஆசான் குகானந்தன் ஆவார். உயர்ந்த தோற்றம் விறு விறென நடக்கும் வேகநடை, கள்ளமில்லாது பேசும் வெள்ளையுள்ளம், எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு. இவைதான் ஆசிரியர் குகானந்தன். எங்கள் பாடசாலை நூல்நிலையத்திலே எந்த நேரமும் நூல்களை வாசித்துக்கொண்டோ அல்லது எழுதிக்கொண்டோ இருப்பார். கவிதைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பத்திரிகைகளில் இவரது கவிதைகள் பலமுறை வெளிவந்துள்ளமை இவருக்குக் கவிதையில் இருந்த ஈடுபாட்டைச் சுட்டி நிற்கிறது.

"உள்ளத்துள்ளது கவிதை" என்றான் ஒரு மகாகவி. அவனே "பாட்டுத் திறத்தாலே வையத்தைப்பாலித்திட வேண்டும்" என்றும் "நமக்குத் தொழில் கவிதை" என்றும் கூறியவன். அந்தத் தடத்திலே வந்த ஆயிரமாயிரம் கவிஞர்களிலே இவரும் ஒருவர். அதனால்தான் அண்மையில் வெளிவந்த "1008 உலகக் கவிஞர்கள்" ஆவண நூலில் இவரது கவிதையும் இடம்பிடித்திருக்கிறது. உண்மையில் அவரது முயற்சிகள் மதிக்கப்படவேண்டியவை, பாராட்டப்படவேண்டியவை.

இவர் வணிகத்துறையிலே வணிகமானி, வணிக முதுமாணிப் பட்டங்களைப் பெற்றிருந்தாலும் தமிழ் மீது கொண்ட பற்றுக் காரணமாக தமிழிலக்கியம் மீது ஆழ்ந்த புலமை கொண்டவராக விளங்கினார். இவரது துணைவியாரும் பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதை. அவர் ஒரு பல்வைத்தியர். இருவரும் சமூக ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள். இவரது "நிதர்சனம்" என்ற கவிதைகளின் தொகுப்பு நூல் கவிதைத் துறையில் அவருக்கிருந்த ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது.

இந்த வகையிலே இவரது சேவைகள் தொடர வாழ்த்துவதோடு மணிவிழா சிறக்கவும் சந்நிதிப் பெருமானை வேண்டுகின்றேன்.

# கலைஞனின் மணிவிழா சிறப்புற வேண்டும்



**திரு. நடராஜா அனந்தராஜ்**
பிரத்தியேக செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

ஒரு ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக எனப் பல்வேறு பிரமாணங்களின் ஊடாகத் தனது கல்விப் பணியை ஆரம்பித்து வைத்துப் பெருமையடைந்த திரு. குகதாசன் குகானந்தன் அவர்கள் இன்று தனது அகவை அறுபதை நிறைவு செய்து சமூக சேவையின் அடுத்த கட்டத்திற்குத் தனது புதிய வாழ்க்கையை நகர்த்தத் தொடங்கியுள்ளார்.

ஆவர் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகச் சிறந்த முறையில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுதுதான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிக எளிமையாகவும் மற்றவர்களின் மனம் புண்படும் படி நடக்காதவருமாக விளங்கிய திரு.கு.குகானந்தன் அவர்களின் அந்த எளிமையான போக்கு அன்று என்னைக் கவர்ந்தது. ஆம்... தனது கவிதை நூலை வெளியீடு செய்வதற்காக என்னை எனது வீட்டில் வந்து சந்தித்து வாழ்த்துரை வழங்க என்னை அழைத்த அந்தப் பெருமனிதனின் மணிவிழா மலருக்கும் வாழ்த்துரை வழங்குவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

பெருமைக்குரிய ஒரு கல்லூரியாக விளங்கும் சைவப் பாரம்பரியத்தில் தோற்றம் பெற்ற புத்தூர் சோமாஸ் கந்தக் கல்லூரியில் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியையும், பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரியில் உயர்தரக் கல்வியையும் கற்று இன்று மூன்று பட்டங்களுக்குச் சொந்தமாக விளங்கும் ஒரு சிறந்த கல்வி மானை அச்சுவேலி மண் பெற்றமைக்காக அந்த மண்ணும், மக்களும் பெருமை அடைய வேண்டும்.

தனது கல்விச் சேவைக்குச் சிகரம் வைத்தது போல் தனது சொந்தச் செலவில் புத்தூர் சிவன் கோயிலில் "குகன் கலாசார மண்டபம்" ஒன்றை அமைத்து அதனூடாக ஆன்மீக மற்றும் சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

அன்னாரது சேவைகள் மேலும் எமது மக்களுக்குத் தொடரவேண்டும் என்று வாழ்த்துவதுடன், அவர் தனது குடும்பத்தினருடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமூகப் பணியையும், இறை பணியையும், கல்விப் பணியையும் மேற்கொள்ளக் கூடியவகையில் இறைவன் நல்ல ஆரோக்கியமான வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றேன்.

# சிறந்த கவிஞர்



**திரு.வே.சந்திரசேகரம்பிள்ளை** (Bsc.PGDE)
**ஓய்வுநிலை அதிபர்,**
**யா/ புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி.**

திரு.குகதாசன் குகானந்தன் புத்தூர் வள்ளலார் மழவராயர் கந்தையா அவதரித்த ஊரைச் சேர்ந்தவர். இவர்கள் அவர்களது நெருங்கிய உறவினரும் ஆவார். வள்ளலாரைப் பின்பற்றி இவர்களும் ஆன்மீகத்தொண்டு, கல்வித்தொண்டு, உணவுத்தொண்டு ஆகிய துறைகளில் தம்மை ஈடுபடுத்தி வருவது கண்கூடாகும்.

திரு.குகானந்தன் அவர்கள் யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். இவர்கள் வணிகமானியுடன் முதுமாணிப் பட்டம் பெற்றவர். இவர்கள் இத்துறையில் பட்டம்பெற்றவராயினும் தமிழில் கூடிய ஆர்வம் கொண்டவர். இதற்கு எடுத்துக்காட்டாக இவர்கள் கவிதைப் படைப்புக்களில் கூடிய ஆர்வம் கொண்டவராக விளங்குகின்றார். இவ்வகையில் நிதர்சனம் கவிதை மலர் என்னும் படைப்பினை 2014ஆம் ஆண்டு ஆடிப்பூரமன்று யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் இடம்பெற்ற சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இவர்களின் கவிதைப்படைப்புக்கள் 1008 உலகக் கவிஞர்களின் கவிதைப் படைப்புக்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இவர்கள் ஓர் சிறந்த கவிஞராக எமது மத்தியில் தோன்றியுள்ளமை எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்றது.

இவர்களது ஆன்மீக, சமூகத் தொண்டுகளை எடுத்துக்காட்டாக புத்தூர் சிவன் ஆலயச் சூழலில் குகன் கலாச்சார மண்டபம் ஒன்றினை அமைத்து சமூகத்திற்கு உதவி உள்ளார்கள். இம் மண்டபம் கோவில் வளாகத்தில் அமைந் துள்ளதால் இதனைக் கோவிலில் இடம்பெறும் அன்னதான நிகழ்வுகளுக்கும், கலாச்சார நிகழ்வுகளுக்குமாக பயன்படுத்துவதற்காக கோவில் நிர்வாகத்தினருக்கு வழங்குவதற்கு முன்வந்தமை இவர்களின் உணவுத் தொண்டையும், ஆன்மீக, சமூகத் தொண்டுகளையும் இயம்புவதாகவுள்ளது. இவர்களது பணியை நான் மனப்பூர்வமாக மெச்சுவதோடு மேலும் இதுபோன்ற பணிகளை வழங்க எல்லாம் வல்ல புத்தூர் விசாலாட்சி சமேத விசுவநாதசுவாமிகள் அருள்பாலித்து உதவும் வண்ணம் வேண்டி எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.



யா/ கப்பூது ஏகாம்பரம் வித்தியாலய
ஆசிரியர் தினம் - 2015




யா/ தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலய
ஆசிரியர் தினம் - 2015



யா/ தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலய
ஆசிரியர் தினம் - 2013



யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
விளையாட்டுப் போட்டி - 2009

# சமூக சிந்தனையாளர்



**திரு. செ.இளங்கோ**
அதிபர்,
யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தகல்லூரி, புத்தூர்.

சிறந்த கல்வி அறிவும், சமூக சேவையாளருமான குகதாசன் குகானந்தன் அவர்களின் ஆளுமை, ஆற்றல், தலைமைத்துவம், அர்ப்பணிப்பு ஆகிய பண்புகள் கல்வித்துறையில் பலவற்றை சாதிக்க வழிகோலியது. பத்தொன்பது வருடங்கள் ஆசிரியப் பணி செய்து அகவை அறுபதை அடைந்தும் ஓயாது கவிதைப் படைப்புக்களை வெளியிடுவதில் ஆர்வமுள்ளவராய் இருந்து தான் பிறந்த கிராமத்தை மேலானதாக மதித்து கவிதை தொகுப்பாக்கியத்தோடு புத்தூர் சிவன் தேவஸ்தான அன்னதான மண்டபத்தினை அழகுற அமைத்து மாபெரும் சமூக சேவை புரிந்த குகானந்தன் அவர்கள் தான் அமைத்த மண்டபத்திலேயே "புதுவைக் குகனின் அகவை அறுபது" என்ற கவிதைத் தொகுப்பு மலரினை வெளியீடு செய்வது பெருமைக்குரியதாகும். இன்றைய நன்நாளில் புதுவைக் குகன் அவர்களையும், அவரது துணைவியார் திருமதி குகானந்தன் பத்மராணி (ஓய்வுநிலை பல்வைத்தியர்) அவர்களையும் சீருடனும், சிறப்புடனும் வாழ வாழ்த்துவதோடு, மலர் சிறப்புற அமைந்து மேன்மேலும் பல்வேறு ஆக்கங்களையும் கொண்ட மலரினை வெளியிட வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

# இளமைத் துடிப்புள்ள ஆசான்



**திரு. இ.குணநாதன்**
முன்னாள் அதிபர் அத்தியார் இந்துக்கல்லூரி,
ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
நீர்வேலி.

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, கணீர் என்ற குரல், புன்சிரிப்பு, மாணவரைத் தன்வயப்படுத்தல் எனது பார்வையில் இவை அனைத்துக்கும் சொந்தக்காரன் இன்றைய மணிவிழா நாயகன் திரு.குகதாசன் குகானந்தன் அவர்கள். புத்தூரில் பிறந்து அச்சுவேலியை வேட்டகமாகக் கொண்டு கல்விப் பணி ஆற்றி அகவை அறுபதில் ஓய்வு பெற்ற மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நான் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் விழா நாயகர் என்னுடன் கடமையாற்றியவர். க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் வணிகக் கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் மாணவர்களால் கவரப்பட்ட ஆசிரியராக இவரை நான் கண்டேன். இவர் வகுப்பறையில் அமர்ந்து இருந்து கற்பிப்பதை நான் கண்டது அரிது. எவ்வேளையிலும் நின்று கொண்டே கற்பிப்பார். இவரது காலத்தில் வர்த்தகப் பிரிவில் உயர் சித்திவீதம் அடையப்பட்டதோடு பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையும் இவருக்குரியது.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை வேகத்துடனும், விவேகத்துடனும் நிறைவேற்றும் ஆற்றல் மிகுந்தவர். இளமைத்துடிப்புள்ள ஆசிரியர் மட்டுமன்றி இராஜதந்திர நிர்வாகி. துணிச்சல் மிக்க நவகவிதைப் படைப்பாளி, அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணிகள் அவருக்காகக் காத்திருக்கின்றன. எனவே உடல், உள நலத்துடன் வாழ்ந்து நற்பணிகளாற்ற இறையருளைப் பிரார்த்தித்து விழா நாயகரை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

# பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர்



**திருமதி T. ஜெயக்குமாரன்**
அதிபர்,
யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் பகுதித் தலைவராக கடமையாற்றி 07.04.2017 அன்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் கல்விச் சேவையை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தனது சேவைக் காலத்தில் நல்லாசிரியனாக, கவிஞனாக, பகுதித் தலைவராக 19 வருடம் மாணவர் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். 29.09.2009-19.02.2013 யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் கடமையாற்றுகின்ற வேளை பிள்ளைகளுடன் தம்பி, ராசா, தங்கைச்சி என்று அன்பாகப் பேசி அவர்களை கற்றலில் விருப்புடன் ஈடுபடுத்தி கற்பிக்கின்ற திறன் அவருக்குரிய தனித்திறன் ஆகும். 2012ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் தோற்றிய மாணவர்களில் இவர் கற்பித்த தமிழ், தமிழ் இலக்கிய நயம், குடியியல் பாடங்களில் 100% சித்தியை அடையச் செய்தவர். இவர் நவீன கவிதை மரபிற்கேற்ப கவிதை இயற்றும் ஆற்றல் கொண்டவர். “நிதர்சனம்” என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கும் நற்குணமும், பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கும் கொண்ட இவர் கல்விச் சமூகத்தில் பெரும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவர் தனது ஓய்வு காலத்தில் பல சமூக சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# பல்வேறு பரிமாணங்களில் சேவையாற்றியவர்



திரு.இ.ஸ்ரீநடராசா
அதிபர்,
யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்.

திருவாளர் குகதாசன் குகானந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். எமது பாடசாலையில் பல வருடங்கள் ஆசிரியர் பணியில் மிகச் சிறந்த சேவையாற்றி 2017.04.05 ஆம் திகதி ஓய்வு பெற்ற இவர் தனது வாழ்க்கைப் பயணத்தில் சிறந்த ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராக, எழுத்தாளனாகப் பல்வேறு பரிமாணங்களில் நின்று சிறப்புறச் சேவையாற்றியவர். "புத்தூர் குகன்" என்ற பெயரோடு இலக்கிய உலகில் புகழ் பெற்றவர். எதனையும் ஆழமாக ஆராய்ந்து செயற்படும் திறன் கொண்டவர்.

எமது பாடசாலையில் சிரேஷ்ட ஆசிரியராக இருந்து கற்பித்தற் செயற்பாடுகளிலும், முகாமைத்துவ செயற்பாடுகளிலும் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியவர். வரலாறு, வணிகக் கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்ததோடு பல்வேறு விடயங்களையும் தேடிப்பெற்று மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் கல்விக்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார். சமூக விஞ்ஞானப் போட்டிகளில் மாணவர் வெற்றி பெறும் வகையில் அவர்களை வழிப்படுத்தியுள்ளார். க.பொ.த. உயர்தர வகுப்பில் பொருளியல் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்து, பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறச் செய்துள்ளார். எல்லோரிடமும் அன்பாகவும், மரியாதையுடனும் பேசிப்பழகும் பண்பாளன், அறிவியல் சார்ந்த ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதோடு எதனையும் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் கொண்டவர். எமது பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவு கொண்டு தனது கடமைகளைச் செவ்வனே செய்து ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனது ஓய்வுகாலத்தில் பல்வேறு சமயப் பணிகளையும், சமூகப் பணிகளையும் செய்து வருகின்றார். புத்தூர் சிவன் ஆலய முன்றலில் கலாச்சார மண்டபம் ஒன்றினை அமைத்து அதில் அன்னதானம் வழங்குவதற்கும், ஏனைய சமய நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் வழிவகுத்துள்ளார். தான் தேடிய செல்வமும், தனது உழைப்பும் சமூகத்திற்குப் பயன்பட வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டு வாழ்ந்து வரும் மாமனிதராக திரு.கு.குகானந்தன் அவர்கள் விளங்குகின்றார். இவரது சேவை மேலும் தொடர்வதற்கும், ஓய்வு காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் தன் குடும்பத்தாருடன் மன மகிழ்வோடு வாழ்வதற்கும் இறையருள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# கவியுலகில் போற்றப்படுபவர்



**திரு. ஆ.சிவநாதன்**
அதிபர்,
யா/ புற்றளை மகாவித்தியாலயம்,
புலோலி.

மணிவிழாக் காணும் அன்பு நண்பன் குகதாசன் குகானந்தனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். "புத்தூர் குகன்" என கலையுலகிலும் கல்வியுலகிலும் பேசப்படும் இவர் மணிவிழாக் காண்கிறார் என்பது அறிந்து பேருவகை கொள்கின்றோம். தனது வாழ்க்கையில் வணிகமாணி, வணிக முதுமாணிப் பட்டங்களைப் பெற்றபோதும் ஆசிரியப் பணியில் வணிகக் கல்வி,கணக்கியல், பொருளியல், சமூகக் கல்வி, தமிழ், ஆங்கிலம் என பல்துறையையும் கற்பித்து மாணவர் மனங்களில் தனக்கென இடம் அமைத்துக் கொண்டார்.

ஆசிரியப் பணியை மேற்கொண்ட அதேவேளை பகுதித் தலைவராகவும், அதிபராகவும் பணியாற்றி பாடசாலைகளில் நிர்வாகப் பணியிலும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். ஆசிரியர், அதிபர் என்பன பதவி வழியாக தொழில்களாக அமைந்தபோதும் உள ஆற்றல் மேன்மையால் சமூகத்தால் "புத்தூர் குகன்" எனம் நாமத்தால் கவி உலகில் போற்றப்பட்டுள்ளார்.

எல்லோருடனும் இனிமையாகப் பழகும் புன்னகையாளன், எல்லோரையும் உயர்வாக மதிக்கும் பண்பாளன், இவர் இன்று மணிவிழாக் காண்கிறார் என்பதை அறிந்து நீண்ட நாள் நண்பன் என்ற வகையில் ஆற்றங்கரை அமர்ந்து அருள்புரியும் கலியுகவரதன் கந்தப் பெருமானின் பாதம் இறைஞ்சி மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அரசாங்கத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றாலும் குடும்ப உறுப்பினருடன் நீண்ட காலம் மகிழ்வாக வாழவேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

# புத்தூருக்கு அழகு சேர்த்து பூரிப்பாய் வாழ்க வாழ்க



சொல்லிசைச் செல்வர்
கவிமணி.அன்னைதாஸன்
**திரு.க.ஆனந்தராஜா**
ஓய்வு நிலை அதிபர், இசைச்சொற்பொழிவாளர்,
"ஸ்ரீரங்கம்", ஊரெழு.

## புத்தூருக்கு அழகு சேர்த்தவர்

நெற்றியில் நிறைந்த நீறும் நிறை மதி போல பொட்டும்
வற்றாத சிரித்த முகமும் வஞ்சனை யற்ற பேச்சும்
சொத்தாகக் கொண்டு தினமும் சிவபூசை செய்தபின்பே
எக்காரியமும் செய்வார் எங்களாசான் குகானந்தன்

புத்தூர் சோமாஸ்கந்தாவில் தொடங்கினார் கல்விதன்னை
சித்திபெற்றுயர்ந்து யாழ் இந்துவிலும் தொடர்ந்து
வித்தகரை ஆக்கும் ஸ்ரீ ஜெயவர்த்தன புரத்தில் கற்று
விசேட வணிக மாணியாயப் பட்டம் பெற்றார்.

அத்துடன் நிறுத்தினாரா அதுவுந்தான் இல்லைப் பாரும்
அருமையான லண்டன் கணக்குப் பதியுனர் சேவை
ஆசிரியர் வாண்மைக்கான கல்வி டிப்ளோமாவோடு
அதிபர் சேவையிலும் இணைந்து அருமைப் பணியும் செய்தார்

பல்கலைப் பட்டம் பெற்று பல்வகைத் திறமை கொண்டு
இல்லறத் துணைவியாக இனியாள் பத்மராணி எனும்
பல் வைத்தியரோடு பாரவர் போற்றும் வண்ணம்
நல்லதோர் குடும்பம் என்று நவின்றிட வாழுகின்றார்.

இத்தரை மாந்தர் நீவிர் பெற்றோரைப் பேணல் நன்றே
புத்திரரைப் பெற்ற புண்ணியம் இதுதான் என்று
எத்தனை ஆண்டானாலும் புத்தூரார் மறவா வண்ணம்
சித்திர மண்டபம் ஒன்று பெற்றோரின் பேரில் அமைத்தார்.

எத்தனை அதிபர் இந்த மண்ணினில் வாழ்ந்தாரையா
அத்தனை பேரும் எங்கள் சொத்துக்கள் தானே ஐயா
அத்துணை அதிபருள்ளும் சிலர் முத்தாய் இருப்பதுபோல்
புத்தூர்க் குகனும் ஒரு முத்தென்றே விளங்குகின்றார்.

கற்றதோ வணிகமாணி பெற்றதோ அதிபர் பதவி
உற்று நாம் பார்த்தோமானால் ஒளிர்கின்றான் கவிஞன் குகன்
வற்றாத வாஞ்சையோடு வளம் மிகு கவிகள் தந்து
புத்தூருக்கு அழகு சேர்த்து பூரிப்பாய் வாழ்க வாழ்க

சத்தான பேச்சு வன்மை சகலரையும் அணைக்கும் தன்மை
சொத்தாக அறிஞர் கூட்டம் சோக்கான சமய வாழ்வு
முத்தான தமிழரசுக் கட்சியின் மேலே பற்று
வைத்திங்கே வழிகாட்டி வாழ்பவரே வாழ்க வாழ்க

ஆசிரியராக மண்ணிற் குழைத்தவனே வாழ்க
அதிபராகவும் சேவை செய்தவனே வாழ்க
ஆவணமாய் நிதர்சனத்தைத் தந்தவனே வாழ்க
பாவலனாய் பாரினிற்குப் பாடி நிதம் வாழ்க

பத்துப் பத்து ஆண்டு மனம் மகிழ்வுடனே வாழ்க
வித்தகனே ஓய்ந்த பின்பும் வீறுடனே வாழ்க
முத்தனைய சேவை தன்னை புத்தூருக்குச் செய்து
உத்தமியார் உந்தன் பதம் ராணியுடன் வாழ்க

# கணக்கியல் வித்தகன்



**திரு. க.சிறீஸ்குமார்**
அதிபர்,
யா/ வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

அகவை அறுபதை எட்டும் நிலையில் அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக் காணும் எனது ஆசான் பெருமதிப்புக்குரிய திரு.குகதாசன் குகானந்தன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறேன். அச்சுவேலி நகரம் இலுப்பையடியைப் வாழ்விடமாகக் கொண்ட இவர் கணக்கியல் வித்தகனாகத் திகழ்ந்து பல நன் மாணாக்கரை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அரச சேவையில் பல தசாப்தங்களாக ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராகச் சேவையாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். இவருடைய வாழ்வும், சேவையும் என்றென்றும் மாணவர் மனதில் நிலைத்து நிற்கும். வணிகம், தமிழ், ஆங்கிலம், பொருளியல், வரலாறு, கணக்கீடு எனப் பல பாடத் துறைகளிலும் பாண்டித்தியம் பெற்று தனது சேவையைச் சிறப்புறச் செய்தவர்.

ஓய்வு நிலையில் தொடர்ந்தும் கல்விச் சேவையை ஆற்ற வேண்டும் எனவும், இவர் தனது குடும்பத்துடன் நீடுழி வாழவும், இவருக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சி மணிவிழா நாயகனை மனமார வாழ்த்தி, வணங்கி, மணிவிழா சிறப்புற நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# என்றும் புகழுடன் வாழ்க! வளர்க!



**திருமதி இராஜமனோகரி அருந்தவநாதன்**
**பகுதித் தலைவர்,**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலிருந்து திரு.கு.குகானந்தன் ஆசிரியரை நன்கறிவேன். துடிப்பும் தேடலும் இவரிடம் இயல்பாகவே இணைந்துள்ளது. அறிவு ஆற்றல் மிக்கவர், அன்பானவர், எளிமையானவர், நட்புடனும் முகமலர்ச்சியுடனும் பழகும் இயல்புடையவர்.

தனது ஆசிரியப்பணியை யா/இடைக்காட்டு மகாவித்தியாலயத்தில் 1998 களில் ஆரம்பித்தார். அதன்பின் 99 களில் சில மாதங்கள் யா/ அச்சுவேலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும், 1999 - 2008 வரை யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் தன் பணியைத் தொடர்ந்தார்.

2008 - 22009 வரை நீர்வேலி சீ.சி.த.க. பாடசாலையில் அதிபர் பதவியை ஏற்றார். திறமையுடன் தன் பணியை ஆற்றி வந்தார். அதன்பின் வடமராட்சி வலயத்தில் கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் நான்கு வருடங்கள் உப அதிபராகக் கடமையாற்றினார். அங்கும் தன் பணியை சிறப்புற ஆற்றிவந்தார். தொடர்ந்து 2013 - 2017 வரை தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றி தன் கல்விப்பணியை நிறைவு செய்தார்.

கற்பித்தல் காலங்களில் கணக்கீடு, பொருளியல், வணிகக்கல்வி, வரலாறு, குடியுரிமைக்கல்வி, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைத் தெளிவுடன் கற்பித்தார். மாணவர்களுடன் அன்புடனும், ஆதரவோடும் உரையாடி அவர்களை உரிய தேர்ச்சி நிலையை அடைய வைத்த சிறப்புக்குரியவர். இவரிடம் கற்ற மாணவர்கள் கணக்காளராகவும், யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், நிறுவனங்களில் உயர்பதவிகளிலும் இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி நல்ல பண்பாளர்களாக, பிறருக்கு உதவும் மனப்பாங்கு கொண்டவர்களாக வாழ்கின்றார்கள். மொத்தத்தில் மாணவர்களை சிறந்த சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாக ஆக்கியுள்ளார்.

இவர் கலைத்துறையிலும் ஈடுபாடு உடையவர். 1978இல் முதல் கவிதையை எழுதியதாகக் கூறுவார். "இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி" என்பார்கள். இவரது கவிதைகளைப் படிக்கும்போது அவ்வக்கால தரிசனங்களைப்

பெற்றுக்கொள்ள முடியும். இவரது முதல் கவிதைத் தொகுதி "நிதர்சனம்". 2014ஆம் ஆண்டு யா/ புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலும், தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்திலும் வெளியிடப்பட்டது. அடுத்த கவிதைத் தொகுதி "புத்தூர் குகனின் கவிதைகள்" என்ற தலைப்பில் விழா மலரில் இணைக்கப்பட்டுள்ளது. இவரது கவிதை ஒன்று "ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள்" பெருநூலில் இடம்பெற்றுள்ளது.

இவர் ஆன்மீக - சமூகப் பணிகளிலும் பெரு விருப்புடையவர். அச்சுவேலி உலவிக்குளம் மகிழடி வைரவர் கோயில், பிள்ளையார் கோயில், புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமான் கோயில், சிறுப்பிட்டி மனோன்மணி அம்மன் கோயில் ஆகியவற்றில் மிகுந்த பக்தியுடையவர், அங்கே திருவிழாக்களை ஏற்று பக்தியுடன் நடத்துபவர்.

அதுமட்டுமன்றி தனது சொந்த ஊரான புத்தூரிலே கலாச்சார மண்டபம் ஒன்றை அமைத்து சமூகத்தின் பயன்பாட்டிற்காக விட்டிருக்கின்றார். இவரது இலக்கியப்பணி, ஆன்மீகப்பணி, பொதுப்பணிகள் தொடரவேண்டும். வளமோடும், மகிழ்வோடும் நீடுவாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

# பல்துறைச் சாதனையாளன்



**செல்வி மனோன்மணி கந்தையா**
ஓய்வுநிலை ஆசிரியர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

"நாட்டை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்" என கல்வியியலாளர் ஆசிரியர்களை வருணிக்கின்றனர். (Teachers make nations) இத்தகைய சிறப்பு வாய்ந்த தொழிலைச் செய்து அகவை அறுபதினை ஆசிரியர் குகானந்தன் நிறைவு செய்துள்ளார்.

புத்தூரில் மக்கள் கல்வி கற்க வேண்டும், சைவசமயத்தை தழுவ வேண்டும் என்றும் பெரு நோக்கம் கொண்டார். கொடை வள்ளல் மழவராயர் அவர்கள். அவரின் சீரிய நோக்கத்தினால் அமைக்கப்பட்டது புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தகல் லூரி. இக்கல்லூரியில் ஆசிரியர் அவர்கள் ஆரம்பக் கல்வியினைப் பெற்றார். உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கும் இந்துக் கல்லூரிக்கு பெற்றோர் அனுப்பி வைத்தனர். இலங்கையில் சிறந்து விளங்கும் பல்கலைக்கழகங்களில் ஒன்றான 'ஜெயவர்த்தனபுர' பல்கலைக்கழகத்தில் பட்டக் கல்வியை கற்று வணிகத்துறையில் பட்டத்தை கற்றுக் கொண்டார். சமதர்ம கொள்கையில் ஈடுபாடு கொண்ட ஆசிரியர் காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தொழில் வாண்மையை விருத்தி செய்ய கல்வி நிறுவகத்தில் கல்வி டிப்ளோமா கல்வியை மேற்கொண்ட ஆசிரியர் பட்டதாரி ஆசிரிய நியமனத்தில் 1994ல் பதுளை தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றார். எனினும் அக்கால அசாதாராண நிலைமை அப்பணியை தொடர விடாது தடுத்தது. பின்னர் 1998இல் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக இணைந்து கொண்டார். கணக்கியல், சமூகக் கல்வி வர்த்தகக் கல்வியை அங்கு கற்பித்தார். அதனைத் தொடர்ந்த காலத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றலாகி வந்தார். இக்காலத்தில் இங்கு நானும் அங்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். அதனால் அக்காலத்தில் அவரின் பணியை பார்க்க முடிந்தது. இன்று அவரைப்பற்றி எழுத துணைபுரிகிறது.

ஆசிரியர் அவர்களின் கற்பித்தல் பாங்கு பற்றி இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம். உயர்தர வகுப்பில் வர்த்தகப் பாடம் கற்பித்தார். மாணவர்களுடன் சினேகபூர்வமாக உரையாடுவார். பாடத்திட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு

முடித்து விடுவார். மாணவர்களைச் சும்மா இருக்க விடமாட்டார். 'வாடா தம்பி' என அன்பாக அழைத்து சாதுரியமாக தனது கற்பித்தல் பணியினைப் பூர்த்தி செய்து விடுவார். அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். மாணவருடன் மட்டுமல்ல ஆசிரியர்களுடனும் அன்பாகப் பழகும் இயல்பும் உள்ளவர். கடமை உணர்ச்சி மிக்கவர். தனது கடமையை செம்மையாக செய்து முடிக்கும் திறன் வாய்ந்தவர். 'கல்விச் சுற்றுலாவுக்கு செல்வதற்கு பெண் ஆசிரியர்களுக்கு பக்க பலமாக நின்று உழைத்தார்.

ஆசிரியர் குகானந்தன் அவர்கள் தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். அத்தியார் இந்துக் கல்லூரியில் மட்டுமல்ல. கப்புதூ ஏகாம்பர வித்தியாசாலை பாடசாலை, தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை கல்லூரியிலும் கடமையாற்றினார். வீரகத்திப்பிள்ளை பாடசாலையில் பொருளியல், வரலாறு, தமிழ் பாடங்களினை கற்பித்து அகவை அறுபதில் நிறைவு செய்தார்.

பாடசாலையில் ஆசிரியர், பகுதித் தலைவர், உப அதிபர், அதிபர் என பல்வேறு பதவிகளை வகித்தார். வணிகவியல், பொருளியல் போன்ற பாடங்களை உயர்தர வகுப்பில் கற்பித்தார். மற்றும் சமூகக்கல்வி, சைவநெறி, ஆங்கிலம் ஆகிய பாடங்களை ஏனைய வகுப்புக்களில் கற்பித்த பெருமைக்குரியவர்.

இதனால் கவிதை, சிறுகதை என்பனவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். சமகாலப் பிரச்சினைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிதர்சனம்' என்ற கவிதைத் தொகுதியினை 2014இல் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் வெளியிட்டார்.

இவர் சிறந்த பேச்சு ஆற்றல் கொண்டவர். யாவரையும் தனது பேச்சினால் கவர்ந்து கொள்வார். இவர் தனது தொழிலில் மட்டுமல்ல தனது மனைவி, பெற்றோர், சகோதரர், உறவினர் யாவருடனும் அன்பாகப் பழகுவார். பெற்றோரை முதுமைக் காலத்தில் சிறந்த முறையில் பேணிப் பாதுகாத்தார். தந்தையின் விருப்புக்கு அமைவாக 2017ல் புத்தூரில் ஒரு கலாச்சார மண்டபத்தை நிறுவி உள்ளார்.

ஆன்மீகத் துறையிலும் அவர் அக்கறை கொண்டவர். இதனால் பல ஆலயங்களில் திருவிழாக்களைச் செய்து வருகிறார். சிறந்த ஆசிரியனாக, மனைவிக்கு நல்ல கணவனாக , பெற்றோருக்கு நல்ல மைந்தராக, நல்ல சகோதரனாக, எழுத்தாளனாக, பேச்சாளனாக பல்துறை ஆளுமை கொண்ட ஆசிரியர் தனது குடும்பத்துடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

# உயர்ந்த மானுடப்பண்பு கொண்டவர்



**திரு. க.சைவஇறைமணி** (B.A, Dip in Edu)
ஆசிரியர்,
யா/கம்பர்மலை வித்தியாலயம்.

பன்முக ஆளுமை கொண்ட திரு. குகதாசன் குகானந்தன் அவர்கள் அகவை அறுபது எய்தி மணிவிழாக் காண்பதையிட்டு அக மகிழ்வடைகிறேன். சிறந்த சைவ விழுமியப் பண்பாட்டினைப் பின்பற்றும் குடும்பத்தில் வந்துதித்த இவர் இயல்பாகவே உயர்ந்த மானிடப்பண்பும் அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் கொண்டவர்.

ஆசிரியருக்கும் எனக்குமான பழக்கம் 2009ம் ஆண்டு யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் ஆரம்பமானது. மாணவர்களின் நலனில் சிரத்தை காட்டும் நல்லாசானாகவும், பாடசாலை நிர்வாகத்தை சிறப்புடன் ஆற்றுப்படுத்தும் பகுதித் தலைவராகவும் விளங்கும் தருமணமதில் அவர் தம் திறன் கண்டு வியந்திருக்கிறேன்.

மனிதப் பண்புகளையும், ஆளுமைகளையும், அழகியல் உணர்வு வளர்த்தெடுக்கின்றது" என்ற கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் அவர்களின் கூற்றிற்கு மிகப் பொருத்தமானவர் ஆசிரியர். குறிப்பாக "நிதர்சனம்" கவிதை மலர் ஆசிரியரின் உள்ளக் கிடக்கைகளின் வெளிப்பாடுகளையும் அவரது கலை ஆர்வத்தினையும் எடுத்தியம்புகிறது.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு".

என்னும் வள்ளுவ வாக்குக்கு அமைய விடாமுயற்சியாலும் தனித் திறமையாலும் ஆசிரியராக பணியினை ஆரம்பித்து, பகுதித் தலைவராக, அதிபராக ஓர் உயர்ந்த கல்வியியலாளராகவும் சமூகத்தில் சிறந்த முன்னோடியாகவும் திகழ்கிறார்.

ஆசிரியரும் அவர்தம் குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நல்வாழ்வு வாழ அவரின் மானசீக தெய்வமான ஐயப்ப சுவாமி அருள் புரியவேண்டும் என இவ்வேளை இறையருளை வேண்டுகிறேன்.

# A Multifarious Personality



**Mr. R.Uthayasankar**
Teacher,
J/T.V.M.V

I am extremely glad in pennig a few words of felicitation about Mr.K.Kuginanthan, a senior teacher of economics, who has been on the tutorial staff of our school, J/Thondaimanaru Veerakaththippillai Maha Vidyalayam, for nearly four successive years, on his retirement from service, on 05.04.2017.

Mr. Kugananthan has been a dedicated, duty - bound senior teacher at our school, who rendered yeoman service to the school, during the short period of his tenure of service, not only as a staff member of the school bur also as a senior literarion who published a number of tamil poetical collections from the school during his existence at our school.

Apart from economics he was very capable of teaching some other subjects such as history, Tamil etc. He was such a multifarious personality who was always in the good books of the principal, teachers, and the members of the school society.

Above all he had a wide range of knowledge in politics both local and foreign at his finger tips. We had often been inspired and impressed by his unique political views. Actually it is very interesting and impressive to listen to his political talks at length in our school library. He has been an unchallengeable personality who would never hesitate ti raise any question at any political meeting irrespective of party differences.

Really we feel proud that he is retiring from service from our school. J/T.V.M.V extremely feels proud in sending him off very happily but reluctantly.

May he enjoy a happy, joyful and peaceful retired life in future.

# தண்ணளித் திலகம் புத்தூர் குகன்



கவிஞர் தென்பொதிகை குமாரதீபன்
**திரு.வி.வீரகுமார்**
(ஆசிரியர் வீரப்பிள்ளை வீரகுமார்),
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

அஞ்சாத சிங்கம்
ஆன்மீக நெஞ்சம்
இங்கிதமாய்
ஈன்ற தாயிலும்
உபசரித்து
ஊக்கங்கள் சேர்த்து
என்றென்றும்
ஏக்கங்கள் போக்கும்
உயர்ந்த உள்ளம்
ஊர் மெச்சும் கவிஞன்

ஐயங்கள் நீக்கி
ஒன்றித்து
ஓங்காரிக்கும்
ஔடதம்
கவிஞர் புத்தூர் குகன்,
குகானந்தன் சேர்.

ஓயாத பேச்சும்
பொங்கி பிரவாகிக்கும்
கவிதை வீச்சும்
ததும்ப

அகவை அறுபதிலும்
ஆர்ப்பரிக்கும்
இளமைத் துள்ளல்

அரசியலும் பொருளியலும்
வரலாறும்
பாங்குடனே போதித்து
பண்புடன் பரிவுடன்
என்றென்றும்
இளமையுடன்
ஒற்றை வார்த்தையிலும்
ஆயிரம் அர்த்தங்கள் கண்டு
ஆய்ந்து ஆராய்ந்து
எதனையும்
வெளிப்படையாக
பேசும் வெள்ளை உள்ளம்

கன கதைகள் பேசினாலும்
கடமையிலே
கட்டுப்பாடும் கண்ணியமும்
இவர்
தார்ப்பரியம்
பிராணிகளிலும் பிரியம் வைத்து
கருணை கடலும்
கண்ணளித் திலகம்

இன்றுபோல் என்றும்
வாழ்க
இன்னும் நூறாண்டு
வாழ்க! வாழ்க வாழியவே.

# பன்முக ஆளுமையாளர் புத்தூர் குகன்



**திரு. பா.இளங்கோ**
ஆசிரியர்,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

புத்தூர் மண்ணின் புகழ் பூத்த மைந்தன் திரு.கு.குகானந்தன் அவர்களின் மணிவிழா மலரில் அவரைப் பற்றிய பதிவுகளை மேற்கொள்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் ஆசிரியர், அதிபர், கல்வியியலாளர், கவிஞர், சமூக சேவையாளர் எனப் பன்முக ஆற்றல் வாய்ந்தவர்.

இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யா/புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று வணிக் பிரிவில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். அங்கு வணிகமாணிப் பட்டத்தினைப் பெற்றவர் பல்கலைக்கழகத்தில் பயிலுகின்றபோதே திறமை மிக்க மாணவராக விளங்கியவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வணிக முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றவர். சர்வதேச கணக்குப் பதிவாளர் பரீட்சையில் (FIAB) திறமையான சித்தி பெற்றவர். தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர். இவ்வாறு பல பட்டங்களினைப் பெற்ற பெருமைக்குரியவர்.

வணிகவியல், பொருளியல், தமிழ் முதலிய பாடங்களை மாணவர்களிற்கு சிறப்பாக போதித்தவர். மாணவர் மத்தியில் சிறந்த ஆசான் என்ற பெருமை பெற்றவர். இடைக்காடு மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயம் முதலான பாடசாலைகளில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் கடமையாற்றியவர். நீர்வேலி சீ.சி.தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக பணியாற்றி அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். இறுதியாக தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை வித்தியாலயத்தில் பிரதி அதிபராக பணிபுரிந்து சேவையை நிறைவு செய்தார்.

புத்தூர் குகன் சிறந்த கவிஞர். மக்களது பிரச்சினைகளை தனது கவிதையின் பாடுபொருளாக்கினார். சமூகத்தினை உயர்நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற உயரிய நோக்கோடு இவர் பேனா பிடித்தவர்.இவரது கவிதைகள் ஈழநாடு, முரசொலி, உதயன் முதலான பத்திரிகைகளிலும் ஈழத்தின் பல சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. இவரது கவிதை நூலான "நிதர்சனம்" விமர்சகர்களால்

சிலாகித்துக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரது கவிதைத் திறமைக்கு உயரிய சான்றாக அண்மையில் வெளியிடப்பட்ட உலகக் கவிஞர்கள் கவிதைத் தொகுப்பு நூலில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் சிறந்த சமூக சேவையாளனும் ஆவார். புத்தூர் சிவன் கோவிலுக்கு அண்மையில் பல இலட்சம் ரூபா செலவில் தனது பெற்றோரின் நினைவாக கலாச்சார மண்டபம் ஒன்றை அமைத்துள்ளார். இந்த வகையில் வள்ளலாகவும் விளங்குகின்றார்.

மணிவிழாவை மட்டுமன்றி பவளவிழா, நூற்றாண்டு விழா என்பனவற்றையும் கண்டு சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றேன்.

# கொண்ட கொள்கையில் உறுதியானவர்



**திரு. ஐ. சண்முகம்**
**ஓய்வுநிலை ஆசிரியர்,**
**கும்பிழான்.**

நான் கற்பித்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 1990களின் தொடக்க ஆண்டுகளில், தொண்டராசியராக நண்பர் குகதாசன் குகானந்தன் இணைந்தபோது தான் எனக்கு அறிமுகமானார். தனது கலகலப்பான பழகும் சுபாவத்தினால் எல்லோரையும் ஈர்த்துக்கொண்டார். வர்த்தகத்துறை சார்ந்த ஆசிரியராக இருந்தபோதும், தமிழ்மொழி மீதும், இலக்கியங்கள் மீதும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். குறிப்பாக கவிதைகளின் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடு அபரிமிதமானது. என்னிடம் இருந்து பல கவிதை நூல்களைப் பெற்று வாசித்ததோடு,அவைபற்றிய தனது கருத்துக்களை மிகவும் சுவாரஸ்யமாகப் பகிர்ந்து கொண்டார். அவரே ஒரு கவிஞர் என்பதை பின்னர்தான் அறிந்து கொண்டேன்.

அவர் வேறு நியமனங்கள் பெற்று எங்கள் பாடசாலையை விட்டுச் சென்றதன் பின்னாலும் எங்கள் நட்பு தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நான் வசிக்கும் கரணவாயில் இருக்கின்ற அவரது உறவினர்களது வீட்டுக்கொண்டாட்டங்களின் போதும் வேறு பற்பல நிகழ்ச்சிகளில், இடங்களில் சந்திக்கும்போதும் பரஸ்பரம் குசலம் விசாரித்து அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வோம். அண்மையில் நிகழ்ந்த குகன் கலாச்சார மண்டப திறப்பு விழாவிலும் அவரின் அழைப்பின் பேரில் குடும்பத்தினருடன் கலந்து அவரை வாழத்தி மகிழ்ந்தோம்.

நண்பன் குகன் கலகலப்பானவர்; வஞ்சகம் சூது அறியாதவர்; ஒழிவு மறைவின்றி எதனையும் வெளிப்படையாகப் பேசும் இயல்பினை, எவ்வித பேதங்களையும் பாராட்டாது எல்லோரையும் சமமாக மதிப்பவர், கொண்ட கொள்கையில் உறுதியானவர், எத்தகைய இடையூறுகள் வந்தாலும் எடுத்த கருமத்தைச் சிறப்பாக நடாத்தி முடிப்பவர். மணிவிழாக் காணும் அவர் தனது துணைவியுடன் நீடுழி காலம் வாழ்ந்து மேன்மேலும் தொண்டுகள் செய்ய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

# "தோன்றிற் புகழோடு தோன்றுக"

**திரு.ம.ஆனந்தநடராஜர்** (B.sc)
**ஆசிரியர்,**
**மாங்குளம் மகாவித்தியாலயம்.**

ஈன்றவர் செய் தவப்பயனோ இம்
மாநிலம் செய்புண்ணியச் சிறப்போ
ஆன்றோர் தம் வேள்வியின் மகிமையோ
சான்றோனாம் குக ஆனந்தம் அவதரித்தார்
புத்தூர் மண் புகழ் பூக்கவும் நாளும்
புதுமணமாய் கல்வி உலகு மணக்கவும்
நல்லாசிரியராய் நாடு போற்றவும் உத்தமராய்
நானிலம் போற்றவே நற்குடிமகன் நீயானாய்

கசடறக் கற்பவை கற்று அதன்வழி நின்று
கடமையே கண்ணாகிக் காவிய நாயகனாய்
உதவி அதிபராய் அதனிலும் மேலாய் அதிபராகி
உயர்வுகள் பல பெற்றாய் உலகம் போற்றவே
உலகக் கவிஞருள் ஒருவருமாகி கல்வியுலகினுக்கோர்
ஒளிவீசும் கலங்கரை விளக்கானாய்
வலக்கரம் பற்றவே பல் வைத்திய நிபுணரை
வாழ்க்கைத் துணையுமாய் வரித்தாய்

அன்பும் பண்பும் நல் அறனும் காத்து
என்பும் பிறர்க்கென வாழ்ந்திட்ட உத்தமனே
சொல்லும் செயலும் ஒன்றான வித்தகனே
நல்லறம் செழிக்க நாமும் நீ வாழியவே
பல்கலைக்கழகம் சென்று பலகலை கற்றாய்
எல்லையிலா உலகில் வெற்றிகள் பெற்றாய்
குக ஆனந்தனே என்றென்றும் அழியா
புகழுடன் நீ வாழிய வாழிய வாழியவே.



யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் நிதர்சனம்
கவிதை நூல் வெளியீட்டின்போது - 2014 ஆடி



யா/ தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில்
நிதர்சனம் கவிதை நூல் வெளியீட்டின்போது - 2014 ஆவணி

# புதுவை குகனே - கவிதை செய்க! ஏற்றம் காண்க!! பல்லாண்டு வாழ்க!!!



**திரு. த.சண்முகநாதன்**
ஓய்வுநிலை களஞ்சியப் பொறுப்பாளர்,
நெல் சந்தைப்படுத்தும் சபை.

ஆறுமுகநாவலர் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்த காலத்தில் அவருக்கு உதவிக்கு பக்க பலமாகப் பலர் இருந்தனர். அவருக்கு குருவாக வாய்த்த நல்லூர் சம்பந்த புலவர், இருபாலை சேனாதிராஜ முதலியார் என்பவர்களுடன் கோப்பாய் சபாபதி நாவலர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், சிறுப்பிட்டி வைரவநாதபிள்ளை தாமோதரம்பிள்ளை, ஆவரங்கால் நமச்சிவாயப் புலவர், அச்சுவேலி குமாரசாமிக் குருக்களின் மூதாதையர், இணுவில் நடராஜ ஐயர், மாதகல் ஏரம்ப ஐயர், குப்பிளான் செந்திநாதஐயர் ஆகியோர் நாவலர் அருகில் இருந்த முக்கியமானவர்கள். இவர்களைப் பற்றி அறிந்த காலம் இவர்களுடன் ஓர் புத்தூர் அறிஞர் நாவலருடன் இணையவில்லையே என என் மனம் வேதனைப்பட்டதுண்டு. இவ்வளவிற்கும் புத்தூரில் அறிஞர்கள் புலமை படைத்தோர் இல்லாதிருக்கவில்லை. புத்தூர் அப்பாத்துரை குருக்கள் என அழைக்கப்பட்ட சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர் தம் தந்தையார், கீரிமலை நகுலேஸ்வர ஆதினத்தைச் சேர்ந்தவரும் புத்தூரில் வசித்தவருமான நாகேந்திரக் குருக்கள் மற்றும் மயில்வாகனம் பரமநாதர், சின்னத்தம்பி அருணாசலம், முத்தையா விசுவலிங்கம் முதலியோர் சிவசுப்பிரமணியக் குருக்களின் தந்தையிடம் தமிழ், சமஸ்கிருதம், சமயம், சாஸ்திரம் என்பனவற்றை முறையாகக் கற்றுக் கண்ட அறிவால் கோவில்களில் புராணபடகம் செய்து பௌராணிகர்களாக விளங்கி ஊரின் சிறார்களுக்கு பாடம் புகட்டி அதன் மூலம் ஊரின் ஆன்மீகச் செழுமை கருதி பலாவடி அம்பாளை வாழ்த்தி வழங்கி வரலாயினர். அவர்கள் தங்கள் பெயர் விளங்க வேண்டும் என விரும்பியதில்லை என்பதாலேயே என்னவோ ஆறுமுகநாவலர் காலத்தில் புத்தூர் அறிஞர்கள் யாரும் பிரபல்யப்படவில்லைப் போலும். காலப்போக்கிலே புத்தூர் கிழக்கில் சின்னப்பு ஆசாரியார் என்பார் கவித்துவத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய வரலாறு புத்தூருக்கு உண்டு. இவர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பேரனார் ஆவார். இவர்களின் பின் 1940, 1950 களில் சில பட்டதாரிகள் புத்தூரில் மிளிர்ந்தனர். அவர்கள் பெருமளவில்

கல்வித் திணைக்கள மேலாளர்களாக விளங்கினர். இதன்பின் 1950ம் 1960ம் ஆண்டு காலங்களில் பலர் பட்டதாரிகளாக விளங்கினர். அவர்களுள் ஒருவர் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் சிறுகதை எழுதுவதில் வல்லமை படைத்துக் காணப்பட்டார். கலைச்செல்வி பண்ணை அவரின் வளர்ச்சியை ஊக்குவித்தது. துரதிஷ்ட வசமாக அவர் மிக இளவயதில் சாவினைத் தழுவ வேண்டி ஏற்பட்டு விட்டது. இதே காலப்பகுதியில் புத்தூர் கிழக்கு புத்தர் கலட்டி ஆசிரியர் திரு. வே.இளையகுட்டி தம்மை ஒரு சிறந்த கவிஞனாக வளர்க்கத் தலைப்பட்டு வளர்ச்சி கண்டார். மிக அண்மையில் காலம் சென்ற அவர் எமது பிரதேசத்தின் தலை சிறந்த கவிஞனாக திகழ்ந்தார். 1960 / 1970 களில் புத்தூர் பல பட்டதாரிகளைக் கண்டது. அவர்களுள் மூவர் வரலாறு, மெய்யியல், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் புகழுடன் விளங்குகின்றனர். இவர்களின் அரிச்சுவட்டில் வந்த பட்டதாரிகளுள் ஒருவர் தான் திரு.குகானந்தன் ஆவார். குகானந்தன் வர்த்தகத்துறை சார்ந்த பட்டதாரியாக தன்னைக் காட்டிக் கொண்டவர். இயற்கையாகவே அவரிடம் காணப்பட்ட கவிப்பற்றும் அதன் மேல் அவர் கொண்ட கவிப்பித்தும் அவரை ஒரு கவிஞராக வளர்ச்சி காண உதவியது. அவர் கவிதைத்துறையில் தடம் பதித்தாலும் வர்த்தகம், பொருளியல், கணக்குப் பதிவு, வரலாறு, ஆன்மீகம், மனிதநேயம் முதலிய துறைகளிலும் தடம் பதித்து வருகின்றார்.

இந்த இடத்திலே ஒரு விடயம் சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது. மிக அண்மையிலே அவர் நிதர்சனம் என்கின்ற தனது கவிதைத் தொகுப்பினை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் வெளியிட்டிருந்தார். அக்கவிதைத் தொகுப்பு அவரது கவித்துவத்துக்கு நல்ல சான்றாக அமைந்துள்ளதாக மதிப்பீட்டுரை செய்த தமிழறிஞர் ஒருவர் தெரிவித்தார். அதனுடன் மிக அண்மையிலே செல்லமுத்துப் பதிப்பகத்தார் வெளியிட்ட 1000 கவிஞர்களின் கவிதைகள் தொகுப்பில் திரு. குகானந்தனின் கவிதையும் இடம்பெற்றதனை நான் அறிந்து கொண்டேன். இதனால் ஏற்கனவே எனக்கு ஏற்பட்டிருந்த ஒரு மனக்குறை அதாவது புத்தூரில் தரமான ஒரு கவிஞர் தோன்றவில்லையே என்ற மனக்குறை திரு.குகானந்தன் அவர்களது கவிதைகள் காரணமாக நீங்கி விட்டது.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் உற்பத்தி செய்த பட்டதாரியான திரு. குகானந்தன் ஆசிரியராக, பிரதி அதிபராக , அதிபராக வளர்ந்து கவியுலகில் பிரகாசித்து இளைப்பாறியவர். அவர் தனது வாழ்வில் 60 ஆண்டுகளை மங்கலமாக நிறைவு செய்தவர். அவர் 60பதுகளை தாண்டி வானப்பிரஸ்த பருவத்தை தொடங்கும் நிலையில் தான் பிறந்த கிராமத்தில் தங்கள் பரம்பரையார் போற்றி வரும் பலாவடி அம்பாள் சந்நிதியின் முன்பாக ஓர் அன்னதான மண்டபத்தை சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் நிறுவியுள்ளார். இது இவரால் நிறுவப்பட்டாலும் இவரது பேரனார் பரமநாதர் வாழ்ந்த தூய சைவ வாழ்வு காரணமாக இவருக்கு

எம்பெருமானின் கடாட்சம் அன்னதான மண்டபமாக வழங்கப்பட்டது. இதனை நாம் சைவ மெய்யியல் - மனிதநேய கோணத்தில் நோக்குவோமானால் அதனை "தனது ஆவிக்கு மோசம் வரும் என்பதனை உணர்ந்து அந்த நிலையினைத் தவிர்ப்பதற்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட ஆன்ம ஈடேற்றம் கருதிய முயற்சி" என்று கூறலாம். இன்னும் சொல்லப்போனால் இம்முயற்சி என்பது அவன் அருளாலே அவன் தாள் வணங்கியதன் பலன் என்றும் சொல்லலாம். இறைவன் தன்னை நோற்கும் அடியவர் மனதில் குடி கொள்கிறார் என்பதற்கு திரு.குகானந்தன் அவர்களின் அன்னதான மண்டபம் ஓர் நல்ல உதாரணமாக அமைகிறது. அது அவரது மூதாதையர் காலத்தில் இருந்து திரண்ட பிராப்த கன்மத்தின் வெளிப்பாடு என்று கூட கூறலாம்.

திருக்கைலாய மலையிலே தன்னை நாடிவரும் அடியவர்களின் வேண்டுதல்களை நிறைவு செய்வதற்காக சிவபெருமான் இடபாரூடராக தன் சக்தியை இடப்பாகத்தில் இருத்தி ஆன்மாக்கள் உய்வு பெறவென அருள் பாலிக்கின்றார் என்பதனை உணர்ந்த திருமதி குகானந்தன் பத்தாவிற்கேற்ற பதி விரதையாக தன்னை நிலைப்படுத்தி கணவனின் முயற்சிகளுக்கு ஆதரவாக இருக்கிறார். இவரது ஆதரவு ஒத்துழைப்பும் அன்னதான மண்டப கட்டுமானத்தில் பெரும் செல்வாக்கை செலுத்தி உள்ளது. இந்நிலை சக்தி என்றேல் சிவம் இல்லை என்ற தத்துவத்தை வலியுறுத்துவதாக அமைகிறது. நல்லவை நல்லபடியாக நடக்க சிவமும் சக்தியும் இணைந்திருப்பது அவசியம் இந்த இணைப்பினை இலக்கியங்கள் பத்தாவிற்கேற்ற பதிவிரதை என்றும் அன்பும் அறனும் என்றும் எமது சாதாரண வாழ்வில் கணவன் மனைவி உறவு என்றும் இயம்புகின்றன.

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் சம்பந்தப் பெருமானின் சரித்திரத்தைக் கூறும் போது புகலியர்கோன் பிறவிகள் தோறும் சிவபிரானையும் உமாதேவியையும் வணங்கிய.தன் காரணமாகவே உமையின் ஞானப்பால் உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது. ஞானப்பால் உண்ட மாத்திரத்திலேயே அவர் ஞானசம்பந்தம் பெறுகிறார். இவ்வாறே குகானந்தனும் தனது முன்னைய பிறவிகள் தோறும் அம்மை அப்பரை வணங்கிய காரணத்தினால் அவர் புண்ணிய கருமங்களை செய்யும் மனோநிலையைப் பெற்றுக்கொண்டார். அதனால் அவர் உய்வு பெற்றார் என்று கருதலாம். அவர் கண்டது அன்னதான மடச் சிந்தனை அல்ல. அதற்கு மாறாக பாவம் அதனை அறமாக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானம் என்றால் அது மிகையாகாது.

திரு.குகானந்தன் அவர்கள் தனது அறுபது வயது பூர்த்தியை முன்னிட்டு வெளியிட உத்தேசித்துள்ள குக- ஆனந்தம் மலர் தமிழ் மணம் வீசவும் நறுமணம் வீசவும் வேண்டி அவரை வாழ்த்தி அவரின் தமிழ்த்தொண்டு நீடு வாழ வேண்டும் என எம்பெருமாட்டி பலாவடி தாயாரை வேண்டுகின்றேன்.

புதுவை குகனே! கவிதை செய்க! ஏற்றம் காண்க!! பல்லாண்டு வாழ்க!!!

# நிஜத்தை எழுதும் கவிஞர்



**திருமதி கோமளவல்லி தமிழ்ச்செல்வன்**
நிர்வாக உத்தியோகத்தர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

குகதாசன் குகானந்தன் வாழ்வில்
அகவை அறுபது கடந்து
மணிவிழாக் காணும் மகத்தான
அணிசெய் நாளில் அன்புடன் நாம்
வாழ்க வணங்க நின் பாதங்கள் என
வாழ்த்துக்கள் பல கூறுகின்றோம்.

அன்பர் பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே என
தாயுமானவர் வழிநின்று தக்க
பணி புரியும் அன்பர் குகானந்தன்
சைவத் தமிழ் பணிகள் தொடர
வாழ்த்துவோம் இறைவனை
வணங்கி வரம் கேட்கின்றோம்.

கவி உங்கள் வேந்தன்
கற்பனையின் நாயகன்
நிஜத்தை நிஜமாக எழுதும்
தீரன் குகானந்தன் கவி வாழ்க
நிதர்சனம் போல பல கவிநூல்கள்
எழுந்து கவியுலகை
அலங்காரம் செய்யட்டும்.

மணிவிழா நாயகன் குகன் வாழ்க
துணைவியார் உடன் வாழ்க
தம்பதிகள் தமிழ் பணிகளில்
தமிழ் உலகம் வாழட்டும்
அன்பும் அறனும் சேர்ந்தமைந்த
அன்பன் பல்லாண்டு வாழ்க! வளர்க!

# செந்தமிழ்ச் செல்வா வாழ்க!



புத்தூரர் விஸ்வம்
**திரு. செ.விசுவலிங்கம்**
ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் – தமிழ்

செந்தமிழ் மலரும்
சைவத் திருமுறை மணமும் வீச
சுந்தரப் புதுவை யூரில்
சோமாஸ்கந்தன் கிருபையாலே
நந்தமிழ் கவிஞனாக
முது வணிகமாணியாக
பைந்தமிழ் வளர்க்க வந்த
குகானந்தா வாழ்க வாழ்க!

பெறுமவற்றுள் நாமறிவதில்லை
அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற
பொறுமையுடன் வள்ளுவன் செய்
மாமறைக்கு இலக்கணமாய்
அருமையுடன் குகதாசன் பெற்ற
அருந்தவப் பேறே குகா
பெருமையுடன் நீண்ட ஆயுளுடன்
தமிழ் வளர்க்க வாழ்த்துகின்றோம்.
வாழ்க! வாழ்க!

# குகானந்தனின் ஆன்மீகத் தேடல்



**திரு. த. விஸ்வலிங்கம்**
அறங்காவலர்,
அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்,
புத்தூர்.

திரு. குகானந்தன் அவர்கள் எங்கள் ஊரை பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்டவர். ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தகவியல் பட்டதாரியான இவர் கணக்குகளை பதிவேற்றல், வர்த்தக நிர்வாக முகாமை ஆகிய துறைசார் ஆளுமைகளுடன் தமிழ், ஆன்மீகம், மனிதநேயம் முதலான விடயங்களிலும் ஆளுமை மிக்கவராக, இளைப்பாறிய அதிபராக இருந்து வருகின்றார்.


ஆன்மீக சிந்தனை ஒரு கிடைத்தற்கரியபேறு. அது கிடைத்தவர் செயற்கரியன செய்பவர். அப்பேறு பெற்றவர் வாழ்வு இன்பமயமானது. அவ்வாழ்வு குகானந்தனுக்குக் கிடைத்தது. அவரது ஆன்மீக சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது. எமது ஆலயத்தின் முன்புறத்தில் அவரால் அமைக்கப்பெற்றுள்ள அன்னதான மண்டபமாகும். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதனை அறியாதவரல்ல குகானந்தன். இருந்தபோதும் ரூபா எண்பது இலட்சத்திற்கு மேல் செலவு செய்து ஓர் தர்ம கைங்கரியம் மேற்கொள்ளப்பட்டதனை ஆன்மீக சிந்தனையின் வெளிப்பாடு என்று கூறலாம். ஆன்மீகம் தர்மத்தின் வழி நிற்பது. அது அவனருளாலே அவன் தாள் வணங்குவதால் கிடைப்பது. அதனால் அவரின் இச் சேவை போற்றப்படவேண்டியது.

குகானந்தனின் பரம்பரையினர் தெய்வ பக்தி உள்ளவர்கள். அவரின் பேரன் தான் வாழ்ந்த காலத்தில் வருடா வருடம் சிதம்பர தரிசனம் செய்பவர். அவரின் தந்தையார் எமது ஆலயத்தில் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக சேவை செய்தவர். இப்புண்ணிய கைங்கரியங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து குகானந்தனை தர்ம வழியில் அழைத்திருக்கலாம். அதனால் புத்தூர் அம்மை அப்பருக்கு அன்னதான மண்டபம் கிடைத்தது.

வாழ்க அவரின் தொண்டு; அவர் நீடு வாழ்க.



யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
B.com, Dip. in Ed, SLPS II



யா/ வீரகத்திப்பிள்ளை வித்தியாலயத்தில்
நடைபெற்ற மணிவிழா நிகழ்வின்போது

# சிறந்த குடும்பத்தலைவன்



**Dr. க. ஜனார்த்தனன்**
வைத்திய அதிகாரி,
யாழ் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

இன்று மணிவிழாக் காணும் புத்தூர் குகன் என்று மக்களாலும் இராசா மாமா என்று எங்களாலும் அழைக்கப்படுகின்ற திருவாளர் குகதாசன் குகானந்தன் அவர்களைப் பற்றி கூறவேண்டுமானால் ஒரு எழுத்தாளராகவும், கவிஞனாகவும், சிறந்த ஆசிரியராகவும், சமூக சேவையாளனாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த குடும்பத் தலைவனாகவும் பன்முகங்களைக் கொண்டு தமிழுக்கும், தமிழுலகிற்கும் ஏன் தமிழீழத்திற்கும் சிறந்த தொண்டாற்றி வருபவர்.

தற்கால நடைமுறைகளைக் கவிதையாக வடித்தவர். தான் பிறந்த மண்ணிற்கு தமிழ்க் கலாச்சாரத்தையும் சைவத்தையும் வளர்ப்பதற்கென்றே கலாச்சார மன்றையே பரிசளித்தவர்.

ஒன்றா இரண்டா எத்தனை பாடசாலைகளில் மாணவர்களுக்கு தமிழையும், வணிகக்கல்வியையும், பொருளியலையும், வரலாற்றையும் எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த ஒழுக்கத்தையும் போதித்தவர்.

தனது அன்பு மனைவியான டாக்டர் திருமதி குகானந்தன் பத்மராணி அவர்களுடன் சிறந்த இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு இச்சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர்.

அவர் மனைவியுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல வளர்ச்சிகளை அடைந்து இச்சமூகத்துக்கு தொண்டாற்ற வேண்டும் என்று எனது குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

# அன்புச் சித்தப்பா! என்றும் வாழ்க!



அன்பு பெறாமகள்
**Dr. கிருஷாணி பிரகலாதன்**
**வைத்திய அதிகாரி,**
**யாழ் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

குகதாசன் குகானந்தன் என்று அழைக்கப்படும் எனது சித்தப்பா மணிவிழா கொண்டாடுகிறார். அவர் கல்விப்புலத்தில் ஆசிரியர், பகுதித் தலைவர், அதிபர் என பல பதவிகளுக்கு பெருமை சேர்த்தவர். அத்துடன் FIAB, (Londan), B.Com, SLPS 2, M.Com என்று பல பட்டங்களைப் பெற்றவர். அவரது சமூகப் பணியாக புத்தூர் சிவன் கோவிலில் அவரது பெற்றோர் நினைவாக எனது பேரர் பேத்திக்கு ஒரு கலாச்சார மண்டபமும் கட்டியுள்ளார். அவரின் மணிவிழாவின்போது அவரினையும் அவரது மனைவி பத்மராணி சித்தியையும் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்கவென்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்பமே பொழிக
எல்லோரும் வாழ்க.

# நான் கண்ட குகன்...



**Dr. தேவானந்தா**
பல் வைத்திய அதிகாரி,
யாழ் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

இரண்டு தசாப்தகாலம் மாணவர்களுடனும் கற்றல் கற்பித்தலுடனும் பிரிக்க முடியாத வாழ்வை கொண்ட திரு.குகதாசன் குகானந்தன் அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

2003ஆம் ஆண்டு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில்பல்மருத்துவரான இவர் மனைவியுடன் இணைந்து பணியாற்றும் காலத்தில் இவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அச்சந்திப்பு அவரோடு குடும்ப நண்பனாக பழகும் வாய்ப்பாக மாறியது. இவரின் ஏகப்பட்ட பரிமாணங்கள் என்னை பிரமிக்க வைத்தது. இவரது கவித்துவம் என்னை ஈர்த்ததுண்டு. ஆயிரம் உலகக் கவிஞர்கள் கவிதையில் இவர் கவிதையும் உள்ளடக்கப்பட்டது. இவரது கவித்துவத்தின் சிறப்பு இவரது சமயப்பணி எழுத்திலடங்காது. புத்தூர் சிவன் கோவிலில் சொந்தப் பணத்தின் பெற்றோர் நினைவாக இவர் கட்டிய குகன் கலாச்சார மண்டபமே சான்றாகும்.

இவரது 20 வருட ஆசிரியர் பணியில் யாழ்/ நீர்வேலி சி.சி.த.க பாடசாலை அதிபராக இருந்ததும் உள்ளடங்கும். தான் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக வணிகமானி, வணிக முதுமானி போன்ற உயர்கல்வியாலும் அனுபவத்தாலும் தலைசிறந்த ஆசிரியராக, அதிபராக விளங்க முடிந்தது எனக் கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இவரது முரண்பாடற்ற முகாமைத்துவத்திற்கு இவரின் பேச்சாற்றல், சிரித்த முகம் மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்குபற்றுதல், எல்லோருடனும் மரியாதையாக பழகுதல் என்பன காரணமாகும். எளிமையான வாழ்க்கை இவரது சிறப்பம்சமாகும். அரச சேவையில் 60வது அகவையுடன் ஓய்வுபெறுதல் என்ற நியதியோடு இத்தகைய பெருந்தகை பதவியிலிருந்து இளைப்பாறினாலும் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் இந்த அவனியில் வாழ்ந்து கல்வி மற்றும் சமய, சமூகப் பணிகளை ஆற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

> அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம்
> நாட்டல் அவையாவிலும்
> புண்ணியம் கோடி அங்கோர் ஏழைக்கு அறிவு புகட்டல்.
>
> – *மகாகவி பாரதி*

# யதார்த்தவாதி



**பண்டிதை திருமதி ந.யோகநாதன்** (B.A, Dip In Edu)
ஓய்வுநிலை கல்வி ஆலோசகர் – தமிழ்.

திருவாளர் கு.குகானந்தன் அவர்களின் அகவை அறுபதின் நிறைவாக வெளிவரும் குக ஆனந்தம் என்ற மணிவிழா மலர், அவரது கவிதைகளையும் இணைத்து வெளிவருவது சிறப்புக்குரிய செயற்பாடாகும்.

பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணிபுரிந்த இவர், தனது கற்றல் - கற்பித்தல் - வழிகாட்டல் செயற்பாடுகளால் மாணவர்களை ஊக்குவித்து அவர்கள் உயர்வு பெறவும் வழிகாட்டியவராவார். இவர் சமூக நோக்கும் மனித நேயமும் கொண்ட ஒரு யதார்த்தவாதியாக விளங்குகிறார் என்றால் மிகையாகாது.

ஆசிரியரது கவிதைகள் சமுதாயத்தின் போலித்தன்மையையும் ஆடம்பர வாழ்க்கையையும் சுட்டிக் காட்டுவதோடு வாழ்க்கையின் உண்மைத் தன்மையையும் உணரவைக்கின்றன. மேலும் வெறுமனே சொற்சிலம்பமின்றி உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத் தெளிந்த தமிழில் சுவைபடக்கூறும் இயல்பு இவரது கவிதையின் தனிச் சிறப்பாகும். இத்தகைய சிறப்பு நோக்கி இவரது கவிதை ஒன்று உலகத் தமிழர்களின் கவிதைகளடங்கிய ஆயிரம் கவிதைகள் என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

இவர் தனது எண்ணங்களையும், மனித குலவிழுமியங்களையும் கவிதைகளில் கூறியது மட்டுமன்றி செயற்கரிய செயல்களினாலும் வெளிப்படுத்தியுள்ளார். முதியோர் இல்லங்கள் பெருகிவரும் இக்காலத்தில் தனது பெற்றோரின் நினைவாக அவர்களுக்கு கலாச்சார மண்டபம் அமைத்து அதில் அன்னதானப் பணி சிறப்பாக நடைபெறவும் வகை செய்துள்ளார். சிவன் ஆலயத்துடன் இணைந்து அமைந்திருக்கும் இந்த மண்டபம் பெற்றோர் சிவப்பேறு அடைய வேண்டும் என்ற கருத்தையும் அவர்களைத் தெய்வமாக வணங்கும் மேலான பண்பையும் உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

இத்தகைய அரும்பணிகள் ஆற்றி வாழ்வில் பெருமை சேர்த்து மகிழ்வுடன் மணிவிழாக்காணும் எமது விழா நாயகன் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து பணிகள் பலபுரிய இறைவன் அருளை வேண்டி பிரார்த்திக்கிறோம்.

# பணி மேன்மேலும் ஓங்குக!



**திருமதி இந்திராணி சிறீரங்கன் M.E.D**
ஓய்வுநிலை பிரதிஅதிபர்)
திக்கம்.

புதுவை கு. குகனின் அகவை அறுபது விழா மலரான "குக - ஆனந்தம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு.கு.குகானந்தன் அவர்கள்.

கற்றோர் மலிந்து விளங்கும் புத்தூரில் மழவராயர் பரம்பரையில் தோன்றிய இவரிடம் நேரிய சிந்தனை, பொதுநலநோக்கு, சமூகப்பணி, ஆன்மீக தொண்டு போன்ற நற்பண்புகள் இயல்பாகவே காணப்பட்ட தன்மைகளாகும்.

கல்விப்புலத்தில் கணக்கியல், பொருளியல், வணிகக்கல்வி பாடங்களில் அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றி மாணவர்கள் மனதில் நீங்காத இடம்பெற்ற ஆசான் என்பதில் ஐயமில்லை. தன்னிடத்தில் கல்வி கற்ற மாணவர்கள் உயருவதிலே தான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலிடுகிறது. அந்த வகையில் பல மாணவர்களின் வளர்ச்சியை உருவாக்கிய பெருந்தகை. கல்விப் புலத்தில் ஆசான், பகுதித் தலைவர், கடமை நிறைவேற்று அதிபர் என்ற பல நடிபாகங்களை ஏற்று தன் சேவையினை சிறப்பாக ஆற்றியுள்ளார் என்பதற்கு இவரின் மேலதிகாரிகள் வழங்கிய நற்சான்றுகளே குறிகாட்டிகளாகும்.

கல்விப்புலத்தில் மட்டுமல்ல இலக்கியதுறையிலும் தடம் பதித்த பெருமைக்குரியவர் எம் மணிவிழா நாயகன். எடுத்துக்காட்டாக கவிதைத்துறையில் இவரது சாதனைகள் மிகவும் பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியவை. காலத்திற்கும் கருத்துக்கும் ஒத்த இலக்கியங்களாகவே இவரது கவிதை இலக்கியங்கள் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

சிந்தித்தால் உரையாற்றலாம். சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழ தக்க அளவுக்கு அள்ளித் தருவது தான் கவிதை. அந்த வகையில் இவரது கவிதைகள்

இரசனையும் கருத்தாழமும் மிக்கவை என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஏனெனில் ஈழத்துக் கவிஞர்கள் வரிசையில் இவருக்கும் இடமுண்டு என்பதுடன் உலகக் கவிஞர்களின் ஆயிரம் கவிதைத் தொகுதியில் இவரது கவிதையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது பாராட்டிற்கும் பெருமைக்கும் உரிய காத்திரமான விடயமாகும். இவை இவரது தனித்துவமான தன்மையை மட்டுமல்ல கவிதை புனையும் ஆற்றலையும் அழகியல் உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவரது சமூக ஆன்மீகப் பணியையும் இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும். சமூக, ஆன்மீகப் பணியில் தன்னை ஒருவன் அர்ப்பணிக்கும் போது தான் மனிதன் பூரணத்துவமடைகின்றான். அப்போது தான் அவனிடம் சுயநலம் மறந்து பொதுநலன் மேலோங்கும். பொதுநலன் மேலோங்கும்போது இறைவனின் அருகே நாம் சென்று கொண்டிருக்கின்றோம் என்பது தான் உண்மை. அந்த வகையில் 2017ம் ஆண்டு புத்தூர் சிவன் தேவஸ்தானத்திற்கு அருகாமையில் தன் சொந்த செலவில் பெற்றோர் நினைவாக அமைத்த கலாசார மண்டபம் எடுத்துக்காட்டாகும். அதுமட்டுமன்றி ஒருவரது செயலை விசைப்படுத்தும் வலு ஊக்கல் (Motivation) என்பது wallbergan என்பவரின் ஆய்வு முடிவாகும். இக்கருத்தினை செயலுருவில் செயற்படுத்தி வருகின்றார் மணிவிழா நாயகன். அதாவது யா/ ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் பொறியியல்,பௌதீக விஞ்ஞானம், வணிகம், கலைதுறை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி மாணவர்களின் கற்கும் ஆற்றலை, திறனை விசைப்படுத்திய பெருமைக்கும் உரியவர்.

கல்விப்புலத்தோடு நின்றுவிடாது கவிஞனாக, சமூகப் பற்றாளனாக சேவையாற்றும் மணிவிழா நாயகனின் சேவை மேன்மேலும் வளர வேண்டுமென வாழ்த்துவதுடன் அவரும், அவரது குடும்பத்தினரும் மன அமைதியுடனும் மன மகிழ்நிறைவுடனும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

# வணிகக் கல்வி ஆசான்



**திரு. கா.கௌரீசன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
நீதிமன்ற கணக்கீட்டு உதவியாளர்,
மாவட்ட நீதிவான் நீதிமன்றம், முல்லைத்தீவு.

கல்வி பணியில் ஆசிரியராக இணைந்து பகுதித் தலைவர், அதிபர் என்ற உயர்வுகளை பெற்று இன்று மணிவிழாக் காணும் பெருமதிப்புக்குரிய வணிகக்கல்வி ஆசான் திரு.கு.குகானந்தன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மிகவும் எளிமையும் தன்னடக்கமும் காலமாற்றத்துக்கு ஈடுகொடுத்து செயற்படக்கூடிய சிறந்த ஆற்றல் கொண்ட ஆசான் திரு.கு.குகானந்தன் அவர்கள் தனது சிறந்த ஆற்றலைப் பயன்படுத்தி பல மாணவர்களின் கல்வி என்னும் வாழ்க்கையில் ஒளி ஏற்றிவைத்த ஆசான் ஆவார். இவர் பல மாணவர்களை பல்கலைக்கழகம் வரை பட்டப்படிப்புக்கு அனுப்பி வைத்தவர்களில் நானும் ஒருவன் என்ற ரீதியில் இன்றைய மணிவிழா நாயகனை மனம் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

ஆசிரியர் அவர்கள் வணிகமானி பட்டம், வணிக முதுமானி பட்டம் ஆகிய உயர்நிலைகளை அடைந்ததுடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்துக்கு தேவையான கவிதைகள், ஆக்கங்கள் என்பவற்றையும் சமூக நோக்குடன் வெளியிட்டுள்ளார். அவர் தனது வாழ்வில் மேலும் மேலும் வளரவும் உடல்நலம், குடும்ப நலம் மேலோங்கவும் அவரது மணிவிழா சிறப்படையவும் ஓய்வின் பின் சமூக நலப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வாழவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.


# உள்ளங்கவர்ந்த பொருளியல் ஆசான்



**திரு. ஜெ.ஜென்சன்**
பொருளியற்துறை மாணவன்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்
பொருளியல், அளவையியல், தமிழ்
இவைகள் தான்
என் பிரதான பாடச் சேர்க்கைகள்

பொருளியல் வேண்டாம்
சித்தியடைந்து கடினம்
இதைத்தான் பலரும் சொன்னார்கள்
ஆனால்
குகானந்தன் சேர் விடவில்லை
"ஜென்சன் நீ பயப்பிடாதே"
நான் உனக்கு படிப்பிக்கின்றேன்
தைரியம் தந்தார்
நான் இன்று முதற் தடவையே
உயர்தரத்தில் சித்தியடைந்து
உள்வாரியாக பல்கலையில்
கல்வி கற்றுக்கொண்டிருப்பதன்
அடிப்படை
குகானந்தன் சேர் கொடுத்த
தைரியம்தான் என்பதை
இப்போது நான் நன்றாகவே
உணர்கின்றேன்.
மணிவிழாக் காணும்
எனது பொருளியல் ஆசானை
நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.
வாழ்க! வாழ்க! வாழியவே!



# மணிவிழா நாயகனின்
# கவிதை மலர்











குகன் கலாசார மண்டபத் திறப்பு விழா நிகழ்வுகளின்போது

# புத்தூரின் முத்துக்கள்

கோவில், பாடசாலை, அன்னசத்திரம் என
மேவிய சமூகத்திற்கீந்திட்ட
வள்ளல் மழவராயர் கந்தையாவும்,
தெள்ளு தமிழ்ப் பெரியார், பதிப்பாசிரியர்
தாமோதரம் பிள்ளை சி.வையும்,
கூட்டுறவே நாட்டுயர்வென்று
காட்டமாய் உழைத்திட்ட
கூட்டுறவாளர் தம்பி சிவகுருவும்,
ஈழத்துச் சுந்தராம்பாள் என்றிட்ட
சிலாபத்து கனகாம்பாளும்,
கவிதை, நாடகம், நாட்டுக்கூத்தென
புவியில் உழைத்திட்ட கலாபூஷணம்
வே. இளையகுட்டியும்
பொதுமைக் கவிதைகள் பல தந்த
புதுவைக் கவி இரத்தின துரையும்
புத்தூர் பிரதேசம் தந்திட்ட
முத்துக்கள் அறுவராவர்.

# எத்திசையும் புகழ் பாடும் புத்தூரின் பெருமைகள்

இலங்கையின் சிரசாக
துலங்கும் யாழ் குடாவின்
யாழ் பருத்தித்துறை சாலையில் -
சூழும் பனை தென்னந் தோப்புக்களூடே
நீள் வலிகாமம் கிழக்கிலும்,
தென்மராட்சியின் மேற்கிலும்,
பரவைக் கடலின் பக்கமும்
இருக்கும் ஊர் புத்தூர்.



புதிய ஊர் என்பதால்
புத்தூர் எனும் பெயர் வந்தது.
நல் மருதம் சேர் வயல்களும்
நல் செம்மண் தோட்டங்களும்,
கூடவே பலா மாந்தோப்புக்களையும்,
நாடிய உயிர்களுக்கு தாகம் தீர்க்கும்
நல் குளங்கள் பலவற்றையும்,
தன்னகத்தே கொண்டிலங்கும் ஊர்.

இராச வீதி, சுண்ணாகம் வீதி,
இரு மருங்கிலும் செய்கையிடும்
வெங்காயம், மரவள்ளிப் பயிர்களையும்,
சங்கை தரும் வாழைத்தோட்டங்களையும்,
குரக்கன், கோவா, கீரை வகைகளையும்
கரட், உருளை, பீற்றூட் கிழங்குகளையும்
பணப் பயிராம் புகையிலையையும்
பாங்காய் விளைவிக்கும் ஊர்.
கைத்தொழில், தச்சுப்பட்டறைகளுடன்
வைத்த இரும்புக் கம்மாலைகளையும்

புடவை உற்பத்தி செய்யும் நெசவாலைகளும்,
பீடி உற்பத்திக் கம்பனிகளையும்,
கல்லுடைக்கும் கிரேசர்களையும்,
புற்பாய் தொழிலகத்தையும்,
லிங்கம் மின்புடவை ஆலையையும்,
பொருளாதாரமாக கொண்டிருந்த ஊர்.

கோளமயமாக்கல் யுகத்திலே
கூட்டுறவு பல்பொருள் அங்காடிகளையும்
மோட்டார் வாகனத் திருத்தகங்களையும்,
குளிரூட்டிய உணவகங்களையும்,
மின் ஒட்டுத் தொழிற்சாலைகளையும்,
தன்னகத்தே கொண்டிருக்கும் வர்த்தக ஊர்.

வற்றாத ஊற்றாம் நல்ல -
நிலாவரைக் கேணியையும்
ஓர் வாளி அள்ளி ஊற்றினால்
மேல்காயும் ஆழமுள்ள
செம்பாட்டுக் கிணறுகளையும்,
சூத்திர நீர்ப்பாசனத்திற்கான
நேர்த்தியான கட்டுமானங்களும்,
ஆடுகால் மரங்களுடன் கூடிய துலாவும்
தேடுவார் அற்று இருக்கும் ஊர்.

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி எனும்
புகழ் பூத்த கல்லூரியுடன் வாதரவத்தை,,
ஆவரங்கால், சிறுப்பிட்டி எங்கும்
மேவும் கல்விப்பயிரை வளர்க்கும்
நல் அரச பாடசாலைகள் பத்தாகும்.
கல்வியை நன்கு வழங்கும் தனியார்
கல்வியகங்களும் உண்டு இவ்வூரிலே;

புத்தூர் பிரதேச உப அலுவலக
நிர்வாக எல்லைக்குள் இருக்கும்
கிராம மக்களுக்கு சேவை புரியும்
கிராம அதிகாரி பிரிவுகள் ஒன்பதாகும்
புத்தூர் பிரதேச சபை,
புத்தூர் நீதிமன்று எனவும்
வங்கிச் சேவைகள் புரியும்
வங்கிகளையும் தன்னகத்தே
கொண்டிலங்கும் ஊர்.

விஸ்வநாதப் பெருமான் கோவிலுடன், அம்மன்
பிள்ளையார், துர்க்கை, வைரவர் கோவில்களும்
மெதடிஸ்த திருச்சபை தேவாலயமும்
நிதம் அருள் பொழியும் மாதா கோவிலும்,
சீர்மியம் பல நல்கும் சீரடிபாபாவின்
நேர் வழிபாட்டு மண்டபமும்
புத்தூர் பெற்றிட்ட ஆன்மீக நிலையங்களாகும்.

நடுத்தர வர்க்கத்தினருக்குத் தேவையான
நல் கொண்டாட்டங்கள் பலவும்
செய்து மகிழ்ந்திட
நடராஜ ராமலிங்க ஆலய முன்றல்
சிவசக்தி மண்டபமும் உண்டு.

விசாலாட்சி சமேத
விஸ்வநாதப் பெருமான் கோவிலின்
அன்னதான பணி கட்கெனவும்
அருங்கலைகள் பலவற்றையும்
ஓயாது வழங்கவென
ஓய்வுநிலை அதிபர் கு.குகனால்
பெற்றோரின் நினைவாக

பற்றாக அமைத்திட்ட
குகன் கலாச்சார மண்டபமும்
கொண்டிலங்கும் ஊர்.

விவசாயம், வர்த்தகம், கல்வி
கைத்தொழில் நிர்வாகம் என
உத்தமமாய் விளங்கி பாரில்
எத்திசையும் புகழ்பாடும் எங்கள்
புத்தூரின் பெருமைகள் பலவாகும்.

## பெருமைசேர் பேராசிரியர்கள்

யாழ் பல்கலைக்கழகத்தின் மூத்த
பேராசிரியராயிருந்து துலங்கும்
மெய்யியல் பேராசிரியர்
கனகசபை சிவானந்த மூர்த்தியும்
வரலாற்றுத்துறை பேராசிரியர்
பரமு புஸ்பரத்தினமும்
முகாமைத்துவ பீட தலைவராயிருக்கும்
திருநாவுக்கரசு வேல் நம்பியும்
நம்மோடு ஒன்றாய் வாழ்ந்து வரும்
நம் மண்ணின் பேராசிரியர்களாவர்.

# புத்தூர் தந்திட்ட மருத்துவ திலகங்கள்

யாழ் போதனா வைத்தியசாலையில்
சிறப்பு வைத்திய நிபுணரான
திரு குமாரசுவாமி மகேசனும்
தென்னிலங்கையில் கடமையாற்றி
கடல் கடந்து சேவை வழங்கும்
வைத்தியக் கலாநிதிகளான
திரு குகதாசன் குகானந்தமூர்த்தியும்
திரு வரதலிங்கம் சண்முகதாசும்
உலக சுகாதார நிறுவனத்தில்
வலம் வந்து கடமையாற்றிய
திருமதி சிவானி மக்செலும்
கஸ்டப் பிரதேசங்களில்
கடமையாற்றிய பல் டாக்டர்
குகானந்தன் பத்மராணியும்
தென்னிலங்கையின் பிரதேசங்களில்
அரும்பணியாற்றிய
குகானந்தமூர்த்தி கமலராணியும்
யாழ் போதனா வைத்தியசாலையில்
கடமையாற்றி புலம்பெயர்
டாக்டர்களாக கடமையாற்றும்
திரு ஆசைப்பிள்ளை கணேசநாதனும்
திருமதி ராஜேஸ்வரி லோகனும்
திருமதி அஜந்தினி பவிதாளனும்
யாழ் பல்கலைக்கழகத்தின்
மருத்துவ விரிவுரையாளர்களாயிருந்த
திருமதி கோசலை நாகேந்திரனும்
திருமதி சிவரதியும்
செல்வி செல்வஜோதி செல்லத்துரையும்
யாழ் போதனா வைத்தியசாலையில்

தற்போது கடமையாற்றும்
திரு ரங்கநாதன் கோகுல்நாத்தும்
திருமதி சயந்தன் பிரசாந்தியும்
திருமதி கிருஷாணி பிரகலாதனும்
திரு கனகசபாபதி ஜனார்த்தனனும்
கிளிநொச்சி அரச வைத்தியசாலையில்
மருத்துவராகப் பணியாற்றும்
திரு பரிமேழழகபிள்ளை கார்த்தியும்
யாழ் மாவட்டத்தில் முன்பு வேலைசெய்த
புலம்பெயர் டாக்டர்களான
திருமதி ரஞ்சிதராணி குமாரகுலசிங்கமும்
திருமதி காந்திமதி இராஜகுலசிங்கமும்
செல்வி நிமலினி ஆர்தர் கனகரட்ணமும்
புலம்பெயர் பல்வைத்தியர்களாயிருக்கும்
திருமதி பானுமதி சிற்றம்பலமும்
திருமதி மனோகரி உமாகரனும்
திருமதி கமலவதி செந்திநாதனும்
யாழ் போதனா வைத்தியசாலையின்
முன்னாள் மருத்துவரான
திரு வேலுப்பிள்ளை உமாசுதனும்
தற்போது மருத்துவ பட்டதாரிகளாயுள்ள
திரு ஜெயராம் சபேசனும்
திரு தேவராஜன் கேசவனும்
செல்வி அபர்ணா ஜெகநாதனும்
புத்தூர் தந்திட்ட மருத்துவதிலகங்களாவர்.

# பெருமைசேர் விரிவுரையாளர்கள்

யாழ் பல்கலைக்கழகத்தில்
முகாமைத்துவ விரிவுரையாளர்
கலாநிதி சி. சிவேசனும்
கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
உழைக்கும் விரிவுரையாளர்
ஞானசுப்பிரமணியம் மகன்
ஞானச்சந்திரனும், கிருஸ்ணமோகனும்
யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய
முன்னாள் சங்கீத விரிவுரையாளரான
கலாபூசணம் பத்மலிங்கமும்
ஆங்கில விரிவுரையாளரான
திருமதி சிவகௌரியும்
புவியியில் விரிவுரையாளரான
திரு நாகமுத்து பிருதிவிராஜனும்
புத்தூர் தந்திட்ட
பெருமைசேர் விரிவுரையாளர்களாவர்.



யா/ தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில்
நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் விழாநாயகன்




யா/ தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில்
நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் விழாநாயகனுக்கு
வழங்கப்பட்ட நினைவுப் பரிசு

# நிபுணத்துவ சேவையாளர்கள்

ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள
முக்கிய நிறுவனமான உலக வங்கியின்
முகாமைத்துவ ஆலோசகர்,
முதல்வர் ஐயாத்துரை இரங்கநாதனும்,
ஐக்கிய நாடுகள் சபையில்
முக்கிய விஞ்ஞானியான
வல்லிபுரம் இலகுப்பிள்ளையும்
உலக சுகாதார நிறுவனத்தில்
வலம் வந்த வைத்தியக் கலாநிதி
சிவானி மக்செலும்
பேராதனையின் முன்னைநாள் பேராசானும்,
இந்நாள் கடல் கடந்த கல்வியாய்வாளருமான
கலாநிதி செல்லத்துரை குணசிங்கமும்
புத்தூர் பெற்றெடுத்த நல்
நிபுணத்துவ சேவையாளர்களாவர்.

# புத்தூரின் புலமையாளர்கள்

பிரதேச முன்னாள் கல்விப் பணிப்பாளரும்
பிரதேச கல்வியியலாளருமான
தில்லைநாதர் மாணிக்கவாசகரும்,
பிரதேச சபைத் தலைவரும்
பிரக்கிராசி யாயும் இருந்த
சதா லோகேஸ்வரனும்
வரும் காணிச் சண்டைகளை
விலக்கிய பிரக்கிராசி அம்பலவாணரும்
கவிதை, சிறுகதை, கல்வியியலாளரான
சிறுப்பிட்டி செல்லத்துரை விஸ்வலிங்கமும்
பிரதேச சபை காணியை ஈந்திட்டவரும்
கிராமசபைத் தலைவருமாயிருந்த
பரிஸ்டர் முத்துச்சாமி இராமநாதனும்
வலயக் கல்விப் பணிப்பாளரும்
நல்ல கல்வியியலாளருமான
வல்லிபுரம் தானய்யாவும்
சமூக சேவையுடன் சட்டத்தரணியாயும் உள்ள
சின்னர் சிவனேசனும்
உதவி பிரதேச செயலரான
செல்வி .சிவகாமி இராதுரையும்
நிதி அமைச்சு கணக்காளராயிருந்த
சுப்பிரமணியம் இராசதுரையும்,
மொழி பெயர்ப்பாளராகவும்
சக்கடத்தாராகவும் இருந்த
யாழ் நூலக ஸ்தாபகர்
மு.ஆ செல்லப்பாவும்
கொழும்பில் சட்டத்தரணியாயுள்ள
கதிரித்தம்பி சபாரத்தினமும்
வடமராட்சி அரச
பிரதேச செயலகத்தில்
கணக்காளராயிருக்கும்

செல்லத்துரை கிருபாகரனும்
கோப்பாய் அரச
பிரதேச செயலகத்தில்
செயலாளராயிருந்து ஓய்வுபெற்ற
செல்லையா இராசதுரையும்
வடகிழக்கு மாகாணசபையில்
உள்ளகக் கணக்காளராயிருந்த
கலாநிதி க. தியாகராசாவும்
புத்தூர் தந்திட்ட புலமையார்களாவர்.

## புத்தூரின் சமூக சேவையாளர்கள்

தம்பி என்கின்ற
சிற்றம்பலம் நடராசாவும்
முத்துச்சாமி திருநாவுக்கரசரும்
பரமநாதர் குகதாசனும்
தமிழரசு என்கின்ற
வைரவி சின்னத்துரையும்
சுப்பிரமணியம் சதாசிவமும்
புத்தூர் கிராமாட்சி மன்றில்
பெருமை சேர்த்த சமூக சேவையாளராவார்.
விளைபொருள் கூட்டுறவினிலே
சேவை பல ஆற்றிய
பண்டிதர் சின்னத்தம்பி கனகசபையும்
கந்தையா திருஞானசம்பந்தரும்
அருணாசலம் பரமகுருவும்
புத்தூர் தந்திட்ட
சமூக சேவையாளராவார்.

# புத்தூர் தந்திட்ட இந்தியப் பட்டதாரிகள்

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின்
ஓய்வுநிலை அதிபர்களான
வேலாயுதம் சந்திரசேகரம்பிள்ளையும்
சுப்பிரமணியம் கனகராசாவும்
சோமாஸ்கந்தக் கல்லூரியின்
ஓய்வுநிலை பிரதிஅதிபரான
சுப்பிரமணியம் மழவராயரும்
சோமாஸ்கந்தக் கல்லூரியின்
விலங்கியல் பாட ஆசான்
சுப்பிரமணியம் கந்தையாவும்
கொக்குவில் இந்துக் கல்லூரியின்
ஓய்வுநிலை பிரதிஅதிபரான
அருணாசலம் நவரத்தினமும்
வசாவிளான் மகாவித்தியாலய
ஓய்வுநிலை பிரதிஅதிபரான
முத்துச்சாமி கணேசனும்
இடைக்காடு மகாவித்தியாலயத்தின்
ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியரான
கனகசபை தர்மலிங்கமும்
கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியின்
ஓய்வுநிலை பிரதி அதிபரான
தம்பு சேனாதிராசாவும்
வடமாநில கல்விப்பணிப்பாளரும்
கல்வியியலாளராயுமிருந்த
பொன்னம்பலம் சிவகுருநாதனும்
பெண்கல்வியின் மாதரசியான
திருமதி செல்லாச்சி சச்சிதானந்தமும்
தபாலதிபராகக் கடமையாற்றும்
ஜெகநாதன் சேந்தனும்
இந்தியாவில் கற்றுத்தேர்ந்த
இந்தியப் பட்டதாரிகளாவர்.

# எத்திசையும் புகழ்பரப்பும் இலங்கை பட்டதாரிகள்

1. திரு. குமாரசுவாமி விக்கினேஸ்வரன் - **ஓய்வுநிலை சட்டத்தரணி**
2. திரு. சுப்பிரமணியம் அம்பலவாணர் - **ஓய்வுநிலை சட்டத்தரணி**
3. திரு. சதாசிவம் லோகேஸ்வரன் - **ஓய்வுநிலை சட்டத்தரணி**
4. திரு. சின்னர் சிவனேசன் - **ஓய்வுநிலை சட்டத்தரணி**
5. திரு. சோமு விஸ்வலிங்கம் - **ஓய்வுநிலை அதிபர்**
6. திரு. நடராசா தில்லைச்சிற்றம்பலம் - **ஓய்வுநிலை ஆசிரியர்**
7. திரு. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் - **ஓய்வுநிலை அதிபர்**
8. திரு. செல்லத்துரை விஸ்வலிங்கம் - **ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்**
9. திரு. தம்பிப்பிள்ளை சண்முகநாதன் - **ஓய்வுநிலை களஞ்சியப்பொறுப்பாளர்**
10. குட்டியர் மேகநாதன் - **ஓய்வுநிலை சேவைக்கால ஆலோசகர்**
11. திருமதி சிவயோகதேவி சிதம்பரநாதன் - **ஓய்வுநிலை பிரதி அதிபர்**
12. திருமதி பத்மாவதி மழவராயர் - **ஓய்வுநிலை ஆசிரியர் (விஞ்ஞானம்)**
13. திருமதி லங்காதேவி கணேசன் - **ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியை**
14. திரு. வயிரவநாதர் ஆறுமுகம் - **ஓய்வுநிலை அதிபர்**
15. திரு. சங்கரப்பிள்ளை நவரத்தினராசா - **ஓய்வுநிலை பொறியியலாளர்**
16. திரு. நடராசா தேவராஜன் - **ஓய்வுநிலை பொறியியலாளர்**
17. திருமதி தங்கலட்சுமி தேவராஜன் - **ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியை**
18. திரு. கனகசபை சிவானந்தமூர்த்தி - **ஓய்வுநிலை பேராசிரியர்**
19. திரு. பரமு புஸ்பரத்தினம் - **ஓய்வுநிலை பேராசிரியர்**
20. திரு. குகதாசன் குகானந்தன் - **ஓய்வுநிலை அதிபர்**
21. செல்வி வடிவேறு சிவலீலாதேவி - **பிரதி அதிபர் – ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி**
22. திரு. திருநாவுக்கரசு வேல்நம்பி - **பேராசிரியர், பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்**
23. திரு. ஞானசுப்பிரமணியம் ஞானச்சந்திரன் - **விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம்**
24. திருமதி சியாமளா ஞானச்சந்திரன் - **ஆசிரியை,யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
25. ஞானசுப்பிரமணியம் ஞானசம்பந்தன் - **பிரதேசசபை உத்தியோகத்தர்**
26. திரு. தில்லையம்பலவாணர் விமலன் - **மொழிபெயர்ப்பாளர், கோப்பாய் பிரதேச செயலகம்**
27. திரு. பார்வதிநாதசிவம் இளங்கோ - **ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

28. திருமதி சந்திரா இளங்கோ - **ஆசிரியை, யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா. வி.**
29. திருமதி நளாயினி இளமுருகன் - **வணிக ஆசிரியை, யா/சோமாஸ்கந்தக்கல்லூரி**
30. திரு. ஜெகநாதன் தற்பரன் - **சட்டத்தரணி (வெளிநாடு)**
31. திருமதி தெய்வரதி பாலரஞ்சன் - **கலைப்பட்டதாரி ஆசிரியை**
32. திரு. சிவானந்தமூர்த்தி சிவேசன் - **விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்**
33. சிவானந்தமூர்த்தி சிவசங்கர் - **நூலகர், யாழ்பல்கலைக்கழகம்**
34. திரு. துரைசிங்கம் அதியமான் - **பதிவாளர், யாழ்பல்கலைக்கழகம்**
35. திரு. இராசதுரை சிவகணேசன் - **விஞ்ஞானப்பட்டதாரி**
36. திருமதி கௌரி சுரேன் - **முன்னாள் ஆசிரியை, கலைப்பட்டதாரி**
37. திரு. கந்தையாபிள்ளை சுவாமிநாதன் - **ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி**
38. திரு. துரைராசா மோகன்ராஜ் - **ஆசிரியர், கலைப்பட்டதாரி**
39. திருமதி வெண்ணிலா கேதீஸ்வரன் - **ஆசிரியை, கலைப்பட்டதாரி**
40. திருமதி மைதிலி அருள்ராஜன் – **கலைப்பட்டதாரி ஆசிரியை**
41. திருமதி கமலச்செல்வி றெஜிதரன் - **கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்**
42. திருமதி சந்தானலட்சுமி விமலன் - **அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்**
43. திரு. விசுவலிங்கம் மாதவன் - **கலைப்பட்டதாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்**
44. திரு. விசுவலிங்கம் கணேசன் - **கலைப்பட்டதாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி**
45. திரு. மகேசன் ஆனந்த நடராஜன் - **ஆசிரியர், மாங்குளம் மகாவித்தியாலயம்**
46. செல்வி ஜெகதீசன் பிரேமிளா - **கலைப்பட்டதாரி (வெளிநாடு)**
47. திரு. விவேகானந்தன் பார்த்தீபன் - **விஞ்ஞானப்பட்டதாரி (வெளிநாடு)**
48. திரு. கணேசன் வரதன் - **விஞ்ஞானப்பட்டதாரி (வெளிநாடு)**
49. திரு. மேகநாதன் இந்திரபாலா - **அதிபர், யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி**
50. செல்வி மேகநாதன் இராகினி - **பொறியியலாளர்**
51. திரு. செல்லையா குகனேசன் - **பொறியியலாளர்**
52. செல்வி பிரதாசினி - சிதம்பரநாதன் - **விஞ்ஞானப்பட்டதாரி (வெளிநாடு)**
53. செல்வி ஜான்சி ஜனார்த்தனன் - **தகவல்தொழில்நுட்ப பட்டதாரி**
54. திருமதி கவிதா சிவகரன் - **ஆசிரியை, கலைப்பட்டதாரி**
55. செல்வி கு. தேனுஜா - **கலைப்பட்டதாரி**

56. செல்வி துரைராசா மதுரா - **கலைப்பட்டதாரி**

57. சிவராசா ஐயர் கண்ணன் - **காணிக்கச்சேரி, யாழ்ப்பாணம்**

58. செல்வி சிவகௌரி சிவராசா ஐயர் - **ஆசிரியை, யாழ் மத்திய கல்லூரி**

59. திரு. செல்லையா பன்னீர்ச்செல்வம் - **ஆசிரியர், விஞ்ஞானப் பட்டதாரி**

60. செல்வி கஜன்னிகா இராஜதுரை

61. விஜயநந்தினி மாதவன்

62. இராசதுரை பகீரதி - **கலைப்பட்டதாரி**

63. ரோகினி பரஞ்சோதி - **விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்**

64. மேகலா மதிவண்ணன் - **கலைப்பட்டதாரி**

65. மீரா இராசதுரை

66. நாகரத்தினம் சண்முகரத்தினம் - **ஓய்வுநிலை அதிபர்**

67. வேலாயுதம் காரத்திகேயன் - **விஞ்ஞானப்பட்டதாரி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், யாழ் வலயம்**

68. திருமதி சோபிதா சிவகுமார் - **கலைப்பட்டதாரி**

69. திரு. செல்லத்துரை இரத்தினதாஸ் - **பொறியியலாளர்**

70. திரு. பரஞ்சோதி ஜெயராம் - **சிங்கப்பூர் பொறியியலாளர்**

71. திருமதி ராகினி தவபாலன்

72. நாராயணசுவாமி ஐயர் பாலச்சந்திரசர்மா - **வணிகப் பட்டதாரி**

73. திருமதி சிவானந்தசர்மா தாட்சாயினி அம்மா

74. திரு. பூதத்தம்பி மயில்வாகனம் - **ஓய்வுநிலை பொறியியலாளர்**

75. திரு. நீலப்பிள்ளை மயில்வாகனம் - **யாழ் பல்கலைக்கழக உள்ளகக் கணக்காய்வாளர்**

76. திருமதி கிருஷ்ணமோகன் சிவஞானவல்லி - **ஆசிரியை**

77. திருமதி விஜயலட்சுமி பகீரதன் - **ஆசிரியை, இடைக்காடு மகாவித்தியாலயம்**

78. திரு. பாஸ்கரமகாராஜா கேதாரன் - **பொறியியலாளர்**

79. செல்வி பாஸ்கரமகாராஜா மோசிதா - **பொறியியலாளர், கட்டடத் திணைக்களம்**

80. திரு. சிறிபராபரன் சிவசுந்தரம் - **வணிகப்பட்டதாரி ஆசிரியை**

81. திரு. சிறிபராபரன் சிவதாஸ் - **ஆசிரியர், பரி ஜோவான் கல்லூரி**

82. திருமதி சிறிகாந் தயாராணி - **விஞ்ஞானப்பட்டதாரி, சம்பத் வங்கி**

83. திரு. பாலசிங்கம் நாகேஸ்வரபாலா - **கணக்காளர், நெடுங்கேணி பிரதேச செயலகம்**

84. திரு. பாலசிங்கம் யோகானந்தம் - **பொருளாதார உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்,**

85. திருமதி காந்தீபன் கௌசலா - **வணிகமானி பட்டதாரி ஆசிரியை, யா/ அத்தியார் இந்துக்கல்லூரி**

86. ராசகோபால் சகீலா - கோப்பாய் - **பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்**

87. திருமதி ஞானமாலை வினோதன் - **பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்**

எத்திசையும் புகழ்பாடும் புத்தூரின் இலங்கைப் பட்டதாரிகளாவர்.

## அம்மாவுக்கு ஓர் ஆலோசனை!

எங்கள் ஊர் தொழிலாளிதான் அப்பன்;
சங்கையுடன் நவநாகரீகமானவன்;
கூட்டுதல், கழுவுதல், விறகு வெட்டுதல்
தோட்ட வேலைகளும் செய்வான் தினமும்

மடிப்புக் கலையாத சேட்டுடன்,
தடித்த ஜீன்ஸ், சூ, சொக்ஸுடன்
தலைக்குக் கறுப்பு டை அடித்து
நகத்துக்கு பொலிஷ் போட்டு
வேலைக்கு வரும் போதே
வாசனைத் திரவியமும் அடித்து
ஹலோ என்று கை பேசியில்
கதைத்தபடியே வருவான் தினமும்

வேலைக்கு வரும் அப்பனைக் கண்டால்
வேலை கொள்வோரிடம் ஒரு போட்டி;
வேலைக்கு வரும் அப்பனைக் கண்டால்
காலையிலே என் அம்மா கடுகடுப்பார்;
வேலைக்கு வருபவனையும் விரட்டுகிறாயே என்று
அம்மாவைக் கடிந்து பேசினால்
அம்மாவின் குணம் தெரியுந்தானே என்பாள் மனைவி;

கூலி வேலை செய்கிறவனுக்கு ஒரு
கூலிங்கிளாஸும் கொடுப்பாய் போல
என்பார் என் அம்மா.

அம்மா நீங்கள் ஒரு பழசு
நம்ம வீட்டுநிலை தெரிய வேண்டும்.
புருஷன், மனைவி இரண்டு பேரும்
கருமம் ஆற்ற வெளியில் போனால்
வீட்டில் வேறு ஆட்களில்லை
வேலை செய்வதற்கு தினமும்
வேலை செய்ய வருபவர்களையும்
விரட்டுகின்றாயே அம்மா!
காலம் மாறி விட்டது அப்பனுக்கு
நாளும் செய்யும் வேலைக்கு
நல்ல பாதுகாப்பு ஒழுங்கு தேவைதானே என்று
நானும் சொல்வேன் நிதம் அம்மாவுக்கு;

# ஊருக்கு உபதேசம்

அவர் ஒரு சட்டத்தரணி
அவர் பேசுவதோ சோசலிசம்
அவர் பழகுவதோ பணக்காரரோடு
ஆனாலும் இவர் பொதுவுடமை வாதிதான்

பட்டப் படிப்பு பெற்றவர் என்பதால்
சட்டப் பிரச்சினை தீர்க்கச் சென்றேன் இவரிடம்
எனது பிரச்சினையைக் கேட்டபின்
உமது வீடோ நகரத்தில் சிறியது
உமது பகையாளியோ பணக்காரன்
எதுவும் கலங்காது செய்வான்
ஏன் பணக்காரரோடு முண்டுகிறீர்?
நகரத்தில் வாழுவதை விட்டு
கிராமத்தில் சென்று செற்றிலாயிடுவீர்

சீனாவில் மழைபெய்தால்
யாழில் குடை பிடிக்கும்
பொதுவுடமைவாதியான இவருக்கு
போர்க்குணம் கொஞ்சமும் இல்லையா?

நீதி நியாயத்தை ஆராய்ந்தறியாது
போதிக்க வந்து விட்ட இவர்களால்
சமூகத்திற்கு ஆவதுதான் என்ன?
வெறும் பத்தோடு பதினொன்றுதான்
ஊருக்கு தான் என்றும் உபதேசம்
எனக்கு இல்லையடி கண்ணே
பேருக்குதான் அறிக்கைகள் விடுவேன்

பேசும் செயல் ஒன்றுமில்லை கண்ணே;
போராட்டம் என்று பொழுதெல்லாம் கூவுவார்
புரட்சி ஒன்று பக்கத்தில் நடந்த போது
அதனை ஏளனம் செய்தார்
ஆதரவு ஒன்றும் செய்யாது என்றும்
சாதியத்தை மட்டும் பேசுவதால்
போதிய நியாயம் உண்டா தரணியில்?

# நோயற்ற வாழ்வு

ஒரு நெருங்கிய உறவினரின்
திருமண வீட்டிற்குச் சென்று
உறவினரின் விருந்தோம்பலில் திழைத்து
மென்பானங்களை நன்கு அருந்தி
மதிய உணவும் கட்டில்லாது உண்டு
புதிய வருத்தமொன்றைப் பெற்றேன்
கொலஸ்ரோல் என்ற பெயரில்

முதலில் அல்சர் என்று சாப்பிட்டேன்
நிதமும் ஊறின வெந்தயத்தை
வருத்தம் குறையாது நெஞ்சுவலி கூடியது
அருமை மனைவியோ காசுக்குத் தூங்காது
நல்ல வைத்திய நிபுணரிடம் காட்டும்படி
நித்தம் புறுபுறுப்பு தொணதொணப்பு

லீவு போட்டு யாழ் கிளினிக்கில்
காசு கட்டிப் பெற்றேன் சிகிச்சை
ஈ.சி.ஜி பரிசோதனை, கொலஸ்ரோல் பரிசோதனை
ஈற்றில் இரத்தப் பரிசோதனை என
பல பரிசோதனைகள் செய்த பின்

தாவர உண்ணியாய் இருந்தும்
தாவர நிறையுணவு உண்டதால்
கொலஸ்ரோல் வந்ததென்றனர்
பசும் பால் குடிக்கக் கூடாது
தேங்காய்ப்பால் குறைவாகவே
பாங்காய் கறிக்குப் பயன்படுத்த வேண்டும்

அல்சர்க்கு உறைப்பு எண்ணெய் கூடாது;
சர்க்கரை வியாதிக்கு இனிப்புக் கூடாது;
கொலஸ்ரோலுக்கு பசுப்பால் கூடாது;
தப்பி உயிர்வாழ்வதற்கு.......
அப்போ எதைச் சாப்பிடுவது?
நோயற்ற வாழ்வே உலகில்
குறைவற்ற செல்வமாகும் சர்வேசா...



# அன்னையும் பிதாவும்

பங்குனி மாதக் குளிரில்
படுக்கையில் புரண்டபோது....
இடையில் மின்னலென ஓர் நினைப்பு
இந்தக் கிழமை அம்மாவின் துவசம்
வாங்க வேண்டும் காய்கறிகள்

துள்ளி எழுந்து பொருட்கள் வாங்க
தள்ளியுள்ள சந்தைக்குப் போகும்போது
அம்மா எப்படியிருந்தார்
இறுதிக் காலத்தில்....

அம்மாவின் மச்சாள்
செல்லம் அத்தை
சிவபூமி முதியோர் இல்லத்தில்...
சேர்க்கப்பட்டுள்ளார் இப்போது

செல்லம் அத்தைக்கு
செல்லமாக இரண்டு மகன்கள்
மூத்தவன் மனைவியுடன்
கனடா செல்லவென்று
கொழும்பு லொட்சில்
குடித்தனம் செய்கின்றான்

இரண்டாவது மகனோ...
மனைவியின் சுற்றங்களுடனும்
தன் பிள்ளைகளுடனும்

வாழ்கின்றான் அயலூரில்...
இருவர் இருந்தும்
செல்லம் அத்தை தனியாக
சேர்க்கப்பட்டுள்ளார்...
முதியோர் இல்லத்தில்

செல்லம் அத்தை தன் பிள்ளைகளை
நன்கு பாசத்தோடு வளர்த்தவ
எப்பவும் பிள்ளைகளுக்காகவே
வாழ்ந்தவ... இன்று............
அவர்களோ தாயின் அருமை தெரியாது
நன்றி மறந்து வாழ்கின்றார்கள்

அன்னையும் பிதாவும்....
அன்று முன்னறி தெய்வம்
இன்று........
பின்னடிக்கிடைஞ்சல்....



# மாற்றம் ஒன்று வந்தது!

அறுபதுகளிலே பெரும் எடுப்பிலே
ஏற்படுத்திய மாற்றங்கள் தான்
தேத்தண்ணிக் கடை பிரவேசமும்,
கோயில் வணக்கப் பிரவேசமும்...
அது இன்று...
பழங்கதையாய் போச்சு
ஈடி விடுதலைப் போராட்டத்தாலே

பழமையான யாழ் சமூகத்தில்
சாதி பாராது இயக்கத்திற்கு ஓடிய
பெடியன்களாலே...
சாதிக் கட்டுப்பாடு தளர்ந்தது ஈழத்திலே

ஐயர் பெடியனும் மாடு மேய்க்கும்
மயிலுவின் பெடியனும் ஒன்றாய்
பயிற்சி எடுத்தனர் இயக்கப் பாசறையில்

இயக்கம் என்ற கொள்கையால்
தயக்கமின்றி ஒன்றாய்ப் பழகி
பழமைக் கொள்கைகளை
குழி தோண்டிப் புதைத்தது இளஞ்சமூகம்

ஆதிக்கக் குணத்தாலே இங்கே
சாதனைகள் பல செய்தவாறே
மற்றை இயக்கங்களை
தடை செய்தது முதன்மை இயக்கம் ஒன்று

கிராமப் பொறுப்பாளர்களாக
கிராமத்தின் நலிந்த பிரிவினரை
பொறுப்பாளராக்கியே
பெரும் சமூக மாற்றம் செய்தபோது
யாரும் வெறுக்கவில்லை
யாரும் அச்செயல்களை ஒதுக்கவில்லை
கண்டும் காணாதிருந்தனர்
இந்த சமூகத்தின் மேட்டுக்குடியினர்

சீனா, ரஷ்யாவில் மழை பெய்தால்
சிறீலங்காவில் குடை பிடிக்கும் மார்க்சிசவாதிகள்
வர்க்க விடுதலை, போராட்டம் என்று
தர்க்கமாக கூவுவார்களே தவிர
போராட்டத்தையென்றும் நேசிக்கவில்லை
போராட்டத்தை மக்கள் போராட்டம் இல்லையென்றும்
மேட்டுக்குடி போராட்டமே என்றும்
கொச்சைப் படுத்தினார்கள் இந்தப் பேச்சுப் போராளிகள்

ஈழ தேசமெங்கும்
எழுபதுக்குப் பின்னர்
ஈழ இயக்கங்களாலே
மாளும் சாதியத்திற்கெதிராக
மாற்றமொன்று வந்தது இங்கே.

# விடிவு எப்போது?

தேயிலை மலைகளில் நாளும்
குளவிக் கொட்டுக்கும்
பாம்புக் கடிக்கும் மத்தியில்
தினம் அல்லல்படுகின்றனர்
மலையக தோட்ட தொழிலாளர்கள்



நரேந்திர மோடியின் வருகையால்
நோர்வூட் பிரதேசமே ஜொலித்தது
அகற்றப்பட்டன குளவிக் கூடுகள்
புனரமைக்கப்பட்டன தெருக்கள்

ஐயகோ........ இங்கு
தேசிய வருமானத்துக்கு உழைக்கும்
தொழிலாளர்களுக்கு செய்யாத புனரமைப்பு
மோடிக்காக செய்யப்பட்டது மலையகத்தில்

நரேந்திர மோடியின் வருகையால்
நன்மை கண்டவர்கள்
ஆளும் பேரின அரசியலாளரும்
ஆட்சிக்கு முண்டு கொடுக்கும்
முக் கூட்டு முன்னணியினரும்
நல்லாட்சி விசுவாசிகளும்தான்

எம்மக்களுக்காகோ - இங்கு
உழைப்புக்கேற்ற ஊதியமுமில்லை....
கூட்டு ஒப்பந்த பலனுமில்லை....
கூடு லயன்களுக்குள் - நாளும்
காலம் தள்ளுவது தான்....
விடிவு தான் எப்போது?




வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்பெற்ற
கௌரவிப்பு நிகழ்வில் வழங்கப்பெற்றது

# வேலியும் பயிரும்

ஆயுதப் போராட்டம்
அஸ்தமித்த பின்னர்
ஈழதேசமெங்கும்
படையினர் பாதுகாப்பு...

கடல், ஆகாயம் நிலமென்று
முடிவில்லாத பாதுகாப்பரண்கள்
இத்தனைக்கும் நடுவிலே
இத்தரணியில் கேரள கஞ்சாவும்
போதைப்பொருள் பாவனையும்
ஈழத்தில் அதிகம்...

பொலிஸ், படையினர்
பாதுகாப்பு கண்காணிப்பு மத்தியில்
போதைப் பொருள் எடுப்பு
எப்படி நடக்கிறது இந்த
வடகிழக்கெங்கும்...?
ஐயகோ...................
மேய்ப்பர் இல்லாத மந்தைக்கு
வேலியே பயிரை மேய்கிறதா?



# வேள்வி

வலி வடக்கில் தொடங்கி
வலிகிழக்கில் தொடர்ந்து
தென்மராட்சி வடமராட்சி என
குடா நாடெங்கும் அலைந்து களைத்து
இடம்பெயரா இடத்திற்கு
இனிச் செல்கின்றேன் என்று கூறி
இன்று - என்றும் இடம் பெயரா இடத்திற்கு
சென்று விட்டாயே பாச மகளே!

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சையிலும்
வந்த பொதுப் பரீட்சைகளிலும்
உயர்தர திறமைச் சித்திகளுடன்
வியனுலகில் வெற்றியைக் குவித்தவளே
நல் மருத்துவராக வருவாயென்று
அல்லும் பகலும் கண்ட கனவின்படி
வைத்தியராக தெரிவாகி
நித்திலத்தில் சேவை செய்யும்போதே
வேள்விக் கிடாய் போல
வாழ்வை முடிப்பாயென்று
நினைத்தேனோ அன்று?

வன்னியில் வாழும் போது
என் சம்மதம் இன்றியே
ஓர் துணையை வாழ்க்கைக்கு
தேர்ந்தெடுத்தாய் அன்று;

தெரிவு செய்த துணையைக் கண்டு
சந்தோசமடைந்தேன் அன்று
அப்படியொரு குணவானோடு
இப்புவியில் சேர்ந்து வாழாது
சாவிலும் சேர்ந்தே சரித்திரமானாயோ? மகளே!
இயக்கக் கொள்கையின் படி
தயக்கமில்லாது உன் தோழியர்களுடன் சேர்ந்து
முள்ளிவாய்க்கால் முற்றுகையின் போது
குப்பியைக் கடித்து பலியானோயோ? அன்றி -
குண்டு வைத்து சிதறினாயோ?
யாரறிவார் பாச மகளே....

உன் முடிவைக் கேள்வியுற்று
உன் துணையும் பாரில் -
நீயில்லாது ஏது வாழ்வென்று கூறி
தீயகுப்பியைக் கடித்து சென்றாரே அவ்வுலகிற்கு;

வேள்விக்குச் செல்லும் கிடாய்
வெட்டப்போவது தெரியாமல்
வளர்ந்தது போல மகளே...
வேள்விக்குப் பலியாகிப் போனாயோ? மகளே!
நீர் சூழ்ந்த உலகில் நான்
நீயின்றி தனியாக நிற்கின்றேனே மகளே!

# இரத்தக் கண்ணீர்

அரசசுகபோகத்தை விட்டு அன்று
தருமவழியில் சென்றார் புனிதர் புத்தர்
புத்தர் வழியில் நித்தஞ் செல்லும்
புத்ததுறவிகள் சிலரோ இலங்கையில்
அரசியல் சுகபோகம் வேண்டுமென்று
அரசியல் கட்சியை ஆரம்பித்து
தேர்தலில் நின்று வெற்றியும் பெற்று
தேர்ந்த அங்கத்தவராயினர் பாராளுமன்றில்.

இனவாதம் பேசிப்பேசி
கனகாலம் இனமுரண்பாட்டை வளர்த்திட்ட
இலங்கையின் பேரினக் கட்சிகளெல்லாம்
துலங்கியிருந்த இன ஐக்கியத்தை அழித்து விட்டன.

பௌத்த சிங்களப் பேரினவாதமும்
சுத்த குறுந் தமிழ்த் தேசிய வாதமும்
இருக்கும் வரைக்கும்
தழைக்காது சமாதானம் இலங்கையில்

ஹெல உறுமெய, சிஹல உறுமெய
பொதுபலசேனா, இராவண பலய எனும்
உறும் இனவாத அமைப்புக்கள்
சிறுபான்மை மக்களான
தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவர்களுக்கு எதிராக
உழிழ்கின்றனர் இனவாதத்தைத் தினமும்

ஆட்டுக்கு ஆசி சொன்ன அந்தப் புனிதர்
இந்நாட்டு பௌத்ததுறவியர் நிலைகண்டு
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார் - இந்த
இரத்தின துவீபம் இலங்கையிலே.

# மக்கள் தீர்ப்பு

மகிந்த சிந்தனையோடு
மக்கள் சேவைக்கென்று
மாபெரும் வெற்றியுடன் வந்த மகிந்த
மக்களை என்றும் நேசிக்காது
போர் மமதையுடன் செயற்பட்டு
நேரின முரண்பாட்டை
வளர்த்திட்டார் தினமும்

துட்டகைமுனு தானென்று கூறி
கட்டிய மாயையில் தினம் வாழ்ந்து
மக்களின் வரிப்பணத்தை
மனித நேயமின்றி கொள்ளையடித்து
உள், வெளிநாடுகளில் வைப்பிட்டு
சொகுசாக வாழ்ந்தார் தினமும்;

மக்கள் தீர்ப்புக்காக தேர்தல் மூலம்
மக்களிடம் வந்த போது
சிறுபான்மை, பெரும்பான்மை என்று பாராது
உறுந்துன்பங்கள் பல கண்ட மக்கள்
தமது வாக்குச் சீட்டு மூலம்
தாக்கி, விரட்டியனுப்பினர் வீட்டுக்கு
முடிசார்ந்த மன்னரும்
முடிவில் ஓர்
பிடிசார்ந்த மண் தான்


# ஏமாற்றாதே!

அன்று -
ஆயுதப் போராட்டம் நடந்தபோது
ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தும்
இலகு கடன்கள் பல கொடுத்தும்
கலகத்தை இலங்கையில் தூண்டின
அந்த மேற்கு நாடுகள்;

அரசின் தலைவன் சீனாபக்கம்
திரும்பியதால் கதையும் மாறியது
மனித உரிமை மீறல், போர்க்குற்றமென
தனிக்கதைக்ள பல வந்தன இங்கே;

தேர்தலும் வந்தது புதிதாய்
தரகுமுதலாளி அரசும் வந்தது
இப்போது இலங்கை பற்றி
மேற்கு நாடுகள் குறை கூறுவதில்லை
மனித உரிமை மீறல், போர்க்குற்றம் பற்றி
அடக்கியே வாசிக்கின்றனர் இங்கே...
தனக்கு தனக்கு என்றால் சுளகு
படக்கு படக்கு என்று அடிக்குமாம்.

தரகு முதலாளித் துவத்திற்கு
தவிலடிக்கும் தமிழ் தலைமைகளோ
அமெரிக்கா அது செய்யும்
ஐரோப்பிய ஒன்றியம் இது செய்யும்
ஜெனீபாவில் ஆப்பு அடிபடும்
மோடி பகவான் அருள் தருவார் என
நாளொரு கதை கூறி
நாதியற்ற தமிழினத்தை
ஏமாற்றுகிறார்கள் இந்த வியாபாரிகள்
ஏமாற்றாதே! ஏமாற்றாதே!
இனியும் தமிழினத்தை ஏமாற்றாதே!



விழா நாயகன் காமராஜர் பல்கலைக் கழகத்தில்
M. com. பட்டம் பெற்றபோது

# தீவு ஒன்று தேசம் இரண்டு

தெற்குத் துலங்குகிறது வடக்கு வாடுகிறது
தெற்கின் விவசாயிகளுக்கு
தென்பாகப் பாடுபடாமலே
இயற்கை அளிக்கிறது
இயல்பான விளைச்சலை;

உயர் பாதுகாப்பு வலயம்
துயர் தரும் வனவிலங்கழிப்பு போக
இயற்கையின் வஞ்சிப்பால்
உழைப்பில் கொஞ்சம் தான் மிஞ்சும்

வடக்கின் விவசாயிகள்
மிடுக்குடன் உழைத்தாலும் - இங்கு
விளைச்சலில்லாது இட்ட முதலை
எடுக்க இயலாது நஞ்சுண்டவர் பலர்;

தெற்கில் அரசின்
தேர்ந்த அபிவிருத்திகளோ பல
வடக்கிலோ -
உடைந்த கட்டடங்களும்
காடான பயிர் நிலங்களுமே சாட்சி

தெற்கில் வேலைவாய்ப்பதிகம்
தூங்கா நகரங்களும் பல உண்டு
வடக்கில் வேலைவாய்ப்பில்லாது
படகில் வெளியேறுவோரே அதிகம்
நகரங்களோ இங்கு தூங்குகின்றன
இதனால் தான் தெற்குத் துலங்குகிறது
வடக்கு என்றும் வாடுகிறது.

# மரணத்தை வென்ற தருணங்கள்

தொண்ணூறின் முற்பகுதியில்
"ரிவிரச" இடப்பெயர்வால்
வடமராட்சியில் இருந்தபோது
கடமை நிமித்தம் யாழ் சென்றேன்
வல்லைப் பகுதியில் ஹெலியடியும்
தொல்லை தரும் ஷெல்லடியும் நடக்கும்

பலிகள் பல நடந்தாலும் தொடர்ந்தும்
பாதையால் தொடரும் பயணங்கள்...
வீதியால் சென்ற மினிபஸ்ஸைக் கண்ட
ஹெலியொன்று பறந்தவாறே
பாதையெங்கும் கலைத்துக் கலைத்து அடித்தது
பயணிகள் பஸ்சும் மண்டான் சந்திக்கு விரைந்தது
பயணியாக இருந்த நானும்
பயத்தால் உறைந்து போனேன்

முதலைக் ஹெலியும் மூர்க்கமாகவே அடித்தது
கதை முடிந்தது என்று நினைத்தவர்கள் எல்லோரும்
பனங்கூடல் பங்கரை நோக்கி ஓடினோம்
கனநேரம் பதிந்து சுழன்று அடித்த ஹெலியும்
மனம் மாறி பலாலி நோக்கிச் சென்றவுடன்
மின் பஸ்ஸை நோக்கி ஒரே ஷெல் மழை

யாரும் காயப்படவில்லை நிகழ்வில்
மரணத்தின் விளிம்பிலிருந்து
ஷெல்மழை ஓய்ந்தபின் தொடர்ந்தது
எமது பஸ் பிரயாணம்

தொண்ணூறின் நடுப்பகுதியில்
என் வாத்தித் தொழில் பதுளையில்
முதல் நியமனம் என்றாலும்
முழுநாளும் நிற்பதில்லை மலையகத்தில்
வாரவிடுமுறையில் எப்போதும்
விரைவேன் வீட்டுக்கு
கட்டுப்பாட்டுப் பகுதி, கட்டுப்பாடற்ற பகுதி என
பிரிந்து கிடந்தது ஈழதேசம்

காவலரணின் பாதை காலையில் திறந்ததும்
காவலர்களின் சோதனையைத் தொடர்ந்து
சில ஆவணங்களை ஒப்படைத்து
சூனியப் பிரதேசம் ஊடாக விரைந்து
மக்களில் ஒருவனாக நானும்
வவுனியா நோக்கிச் சென்றேன் ஓர் நாள்

தருணம் பார்த்து வரிப் போராளிகளும்
செல்லும் பயணிகளுடன் சேர்ந்தே ஊடுருவினர்
இராணுவ வீரர்களும் உள் இருந்தோரும்
உசார் அடைந்து போராளிகளை நோக்கி
ஷெல் அடித்தவாறே முன்னேறினர்.
மக்களோடு நானும் பயத்தால்
திக்குத் தெரியாது ஓடிக் காப்புத் தேடினேன்

உடைந்த மதவின் கீழ் ஒளித்தேன்
படைச் ஷெல்லடிச் சத்தம் ஓய்ந்தபின்
பதுங்கிய மதவிலிருந்து வெளிவந்தேன்
பார்வைக்குப் பட்டது சிலரின் பிணங்கள்
தெருவில் நில்லாது புறப்பட்டேன்

பெருங்காயம் பட்டவர்களை
அகற்றினர் சில மனிதர்கள்
ஓடிய பிரயாணிகளுடன் சேர்ந்தே ஓடினேன்
ஓமந்தை இராணுவ நிலையை நோக்கி

மரகதத் தீவு இலங்கையிலே
மரணத்துள் வாழ்ந்து
மரணத்தை நிதம் வென்ற
தருணங்கள் தான் இவை;



# நினைவுகளும் சிலைகளும்

என்னுடைய நீண்டகால
தென்னிலங்கை நண்பனை
அழைத்து வந்தேன்
யாழுக்கு ஊர் பார்க்க வென்று;

யாழ் நாகவிகாரை
யாழ் நல்லூர் முருகன் கோவில்
கந்தரோடை விகாரை எச்சங்கள்
கசூரினா கடற்கரை
ஈழத்துச் சிதம்பரம் கோவில்
பொன்னாலை கிருஸ்ணன் கோவில்
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
தெவிட்டாத கீரிமலைச் சிவன்
நயினை நாகபூசணி அம்மன்
நயினை நாகவிகாரை
செல்வந்தரும் சந்நிதி கோவில்
வல்லிபுரம் கிருஸ்ணர் கோவில்
தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் என்று
தொல் வரலாற்று இடங்களுக்கும்
அழைத்துச் சென்றேன் அவரை;

கூடவே ஆனையிறவு
வெற்றிச் சின்னத்தையும்
வென்றெடுத்த டாங்கிகளையும்
காட்டினேன் பொறுமையுடன்
இனச் சங்காரத்தை நினைத்தால்
மனது வலிக்கிறது இங்கு

இன ஐக்கியம் வருமா?

இன நல்லுறவு வருமா?

ஓர் வெற்றியாளர்களால்

போர் ஆற்றுப்படுத்தல் செய்ய முடியுமா?

வென்றவர்க்கோ குதூகலம்

தோற்றவர்க்கு மனவெதும்பல்தான்;



# இனமுரண்பாடு

குயிலைக் கலைத்துக் கலைத்து கொத்துது காகம்
ஒயிலாக களவாக முட்டையிடுவதால்
குயிலைக் கலைத்துக் கலைத்து கொத்துது காகம்
இந்தக் காட்சி ஓர் இயற்கை நியதி
சொந்தமாகக் கூடு கட்டத்தெரியாததால்
அந்தக் குயில்கள் கொத்து வாங்குது.

இந்த ஈழ தேசத்தின் எல்லையில்
வந்தேறு குடிமக்களே மண்ணின் மைந்தரை
விரட்டி அடிக்கின்றனர் என்றும்;
இராணுவமும் ஊர்காவற் படையும் சேர்ந்து
போர் செய்கின்றனர் மக்களுடன்;

அன்று -
எம்மவரை
தென்னைமரவாடி, திரியாய்
என்னருமைப் புடவைக் கட்டு, விளாங்குளம்
கன்னியா என விரட்டியடித்ததுடன்
விளைச்சலையும் அனுபவித்தனர் - தினமும்

விதைக்க ஓரினமும்
விளைச்சலை அறுக்க ஓரினமும்
இருக்கும் வரையில் - என்றும்
இருக்கும் இன முரண்பாடு
இந்த ஈழதேசத்திலே.



# வாய் வீச்சு

தேர்தல் திருவிழா தொடங்கி விட்டது
தேர்ந்த வாய் வீச்சும் தொடருகிறது
தேசியத்தின் முகவர்களோ
தேசிய ரீதியில் இங்கு
அதைச் செய்வோம்
இதைச் செய்வோம் என்பர்;

சந்திர மண்டலத்திலிருந்து
குடா நாட்டிற்கு
நீர் கொண்டு வருவோம் என்பர்;
செய்த குறை வேலைகளையும்,
செய்யாத வேலைகளையும்,
பட்டியலிட்டு பின்னர்
தேர்ந்தெடுத்தால் செய்வோம் என்பர்;

முகவர் பலதும் சொன்னாலும்
முகவரின் தலைமை ஒன்றுஞ் செய்ய விடாது;
ஈழத்தவர்க்கு என்றும் இங்கே
உய்வில்லா வழியே இருக்கும்;

சுயேச்சைக் குழுக்களிற்கோ
சுய இச்சையாக இங்கு
மக்களின் வாக்குப் பிரிக்கும்
நோக்கே உண்டு தேர்தலில்
இணக்க அரசியல் செய்வோர்
சுணக்கமில்லாது தம் சாதனையின்
சேவைப் பட்டியலினைக் கூறி

ஏவிய கணைகளை வலிதற்றதாக்கி
கடைசியாய் எம்மைத் தெரிந்து
படையாக அனுப்பினால் அங்கே
கூட்டாகப் பேரம் பேசி கூடவே
சமஸ்டியையும் பெற்றிடுவோம் என்பர்

சிவப்புத் தேசியவாதிகளோ அரசின்
உறுந் துன்பங்கள் பல கூறி
பேரினவாதத்தின் முகத்திரையை
பெரிதாகக் கிழித்து முழக்குவர்
தப்பாகவே வாக்குறுதிகள் பல அள்ளி வீசி
செப்படி வித்தையாய் நடக்கும் வாய்வீச்சு.



# சந்தர்ப்பவாதிகள்

தேர்தலை விசுவாசிக்கும்
மார்க்சிச வாதிகள் ஈழத்தில்
என்றும் சந்தர்ப்ப வாதிகளே;

பெரும்பான்மையினர் விருப்புடன்
சிறுபான்மையினர் உரிமைகளை
சிதைத்து அழிக்கும் இந்த
பௌத்த பேரினவாதிகளுடன்
சமரசஞ் செய்து கூட்டாக
ஆட்சியைப் பங்கிட்டுக் கொள்வதே
இவர்களின் ஒரே குறிக்கோள்
இலங்கையில் இடது சாரிக்கட்சிகளுக்கு

ஐம்பத்து ஆறில் ஒரு
பொதுமை வாதி கூறினார்...
ஒரு மொழி இருநாடு
இருமொழி ஒருநாடு என்று
ஐம்பதுகளில் கூறிய இந்த பொதுமை வாதியே
எழுபத்திரண்டில் தான் எழுதிய
குடியரசு அரசியல் யாப்பில்
பௌத்த மதமே முதன்மை மதம் என்றும்
சிங்கள மொழிக்கே முதலிடம்

சுய நிர்ணயம், இன ஐக்கியம் என
சுய புராணம் பாடும் ஜே.வி.பி இனரிடம்
இனப்பிரச்சினை தீர்வுக்கு என
தனித் தீர்வு ஒன்றும் இல்லை கையில்
இந்த புரட்சியாளர்களும் முந்திய
பொதுமை வாதிகள் போல சந்தர்ப்ப வாதிகளே;

# சிரிய படகு அகதிகள்

மத்தியத் தரைக்கடலூடாக
நித்தமும் பல துன்பங்களை ஏற்று
மேற்காசிய அகதிகள் தினமும்
பயணிக்கின்றனர் ஐரோப்பாவுக்கு;

சேர்த்து வைத்த சொத்தைக் கொடுத்து
கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்டு
தகுதியிலாத நாட்டுப் படகுகளில்
தினமும் குழந்தைகள், பெண்கள், பெரியோரென
பயணிக்கின்றனர் கடல்ச்சாவை நோக்கி;

சிரியாவின் போர் அச்சத்தாலும்
ஆபிரிக்க கொடுமையாளர்களிலிருந்தும்
உயிரைக் காத்து வாழ்வில்
நிமிர்வோம் என்று புறப்பட்டு
மத்திய தரைக்கடலின் மடியில்
செத்து மடிந்தவர்களின் தொகையோ
கடந்த ஆண்டு சுமார் நான்காயிரம் பேர்
இந்த ஆண்டு மூவாயிரம் பேர்.



ஆதிக்க குணம் கொண்ட அரசாலும்
சாதிக்க புறப்பட்ட போராளியர்களாலுமே
சிரிய அகதிகள் ஏதிலிகளாக
வருகின்றனர் சாவை நோக்கி
வல்லரசுகளே வல்லரசுகளே
வல்லாண்மையை விடுங்கள்
தொல்லை தரும் நாடுகளே உங்கள்
போர் வியூகங்களை விடுங்கள்
நித்தமும் போரில் செத்து மடிபவர்கள்தான்
எத்தனை எத்தனை பேர்?

## தொடரும் போராட்டங்கள்

கேப்பாபுலவில் கேட்கும்
சொந்த மண் மீட்பு போராட்டம்...
கிளிநொச்சி, முல்லைத்தீவு
திருமலை வவுனியா எங்கும்
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்
நிலை அறியும் போராட்டம்

கொழும்பில் ரெலிக்கொம் ஊழியரின்
சம்பளக் கோரிக்கைப் போராட்டம்
மலையகத்தில் உழைக்கும் வர்க்கத்தினரின்
நிலையோ உழைப்பிற்கேற்ற ஊதியம் கோரும்
போராட்டம்

இலங்கைத் தீவு எங்கும்
துலங்குகின்றன மக்கள் போராட்டங்கள்
நல்லாட்சி அரசின் வாக்குறுதிகள்
பொல்லாப்பு ஆனதால் - எங்கும்
தொடருகின்றன போராட்டங்கள்
பாராமுகமும் கேளாத்தன்மையாலும்
மாறாத அவப் பெயரே தோன்றும் என்றும்.

## இரண்டும் ஒன்றே

சிரியாவில் இன்று
ரஸ்யாவும் அமெரிக்காவும்
ஐசிசியை கொல்கிறோமென்று
அப்பாவிகளையே குண்டுவீசி
கொல்கின்றார்கள் தினமும்...

# நல்லாட்சியின் மாண்பு

மகிந்த சிந்தனையோடு
வந்த முன்னைய ஆட்சியோ
நேரடியாக இனவாதம் பேசி
நோகடித்தது தமிழர் மனங்களை
நல்லாட்சி அரசோ
நமது குறைகளெல்லாம்
தீர்ப்போமென்று கூறி
ஆட்சிக்கு வந்து
காட்டமாக ஏதும் செய்யவில்லை
இதுவரை ஈழத்திலே...

எல்லா கோரிக்கைகளையும்
வல்லமையாக
பூசிமெழுகி ஆறவைக்கும்
தந்திரமே தினம் செய்கிறது
நல்லாட்சிக்கு முண்டு கொடுப்பவர்களோ
பொல்லாப்பினைக் கண்டும்
பேசாதிருக்கின்றதனால்
மக்கள் முன்னால்....
மதிப்பிழந்துள்ளனர்.

# எங்கே என் மகன்?

எனது பிறப்பிடம் செங்கடகல
எனது பெயர் முதியான்சலாகே தென்னக்கோன்
எனது குடும்பத் தொழில் விவசாயம்
எனது பிள்ளைகள் ஆறு...
எனது மூத்த மகன் பிரியங்கா
தொண்ணூறில் சேர்ந்தான்
இராணுவத்தின் காலாட்படையில்
ஆழ ஊடுருவும் படையில்
வன்னியில் பல ஊடுருவல்கள் செய்தான்
அவனின் இருப்பை இன்று அறியவில்லை என்னால்
எனக்கு மாதச்சம்பளம் வருகிறது தவறாது
என் மகன்தான் எங்கே?
தேசத்துக்காக போரிடச் சென்றவனை
தேசத்தில் தேடாத இடமில்லை...
எங்கே என் மகன்?
ஏன் இந்தப் போர் வந்தது?

# நெஞ்சம் மறவா நன்றிகள்



*"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்*
*உய்வில்லை செந்நன்றி கொண்ட மகற்கு"*



எமது மணிவிழா நாயகன் உயர்திரு குகதாசன் குகானந்தன் அவர்களின் சேவைக்கு மதிப்பளித்து மணிவிழா நிகழ்வுகளை நடத்துவதற்கும், அவரின் அர்த்தம் நிறைந்த வாழக்கைத் தடங்களையும், சேவையினையும் பதிவு செய்யும் குக ஆனந்தம் மணிவிழா மலரை வெளியிடுவதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

மணிவிழா மலரினை வெளியிடுவதற்கு ஆசிச் செய்திகள் வழங்கிய மதகுருமாருக்கு நன்றி கூறுவதில் உவகை அடைகின்றோம். மேலும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய கோப்பாய் பிரதேச செயலர், கலாச்சார உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ஆகியோருக்கும் பேராசிரியர்களுக்கும், கல்வியியலாளர்களுக்கும், முன்னாள் இந்நாள் அதிபர்களிற்கும், ஆசிரியர்களிற்கும், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறுவதில் பேருவகை அடைகின்றோம்.

-குக ஆனந்தம் மலரினை சிறந்த முறையில் அச்சிட்டு உரிய திகதியில் தந்துதவிய ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் மணிவிழா இனிதே நடந்தேறுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து இறுதிவரை எம்முடன் களத்தில் இணைந்து பணியாற்றிய அன்புள்ளங்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*இங்ஙனம்*
*மணிவிழாக்குழுவினர்*





விழா நாயகன் துணைவியாருடன்

ஷாம்பவி, யாழ்ப்பாணம்.